ACT NO. II OF 1882.

திரஸ்ட்டுகளைக்குறித்த

1882-ம்வருஷத்து 2-வது ஆக்ட்டும்.

தருமசொத்து பரிபாலனத்தைப் பற்றிய

1890-ம்வருஷத்து 6வது ஆக்டும்,

1920-ம்வருஷத்து 14-வது ஆக்ட்டும்.

லா பப்ளிஷர்

R. சுப்பிரமணிய அய்யர் அவர்களால்,

அச்சிட்டது.

மதகரவேணிவிலாசம் புஸ்தகசாலை,

வேப்பேரி போஸ்டு—மதறாஸ்.

M. V PRESS VEPERY—MADRAS.

Price Rs. 0-10-0 Postage Extra

ACT NO. II OF 1882.

திரஸ்ட்டுகளைக்குறித்த

1882-ம் வருஷத்து 2-வது ஆக்ட்டும்,

தருமசோத்துப் பரிபாலனத்தைப்பற்றிய

1890-ம் வருஷத்து 6-வது ஆக்ட்டும்,

1920-ம் வருஷத்து 14-வது ஆக்ட்டும்.

லா பப்ளிஷர்

R. சுப்பிரமணிய அய்யர் அவர்களால்

அச்சிட்டது.

மதுகரவேணிவிலாசம் புஸ்தகசாலை,

வேப்பேரி போஸ்டு—மதறாஸ்.

M. V. PRESS. VEPERY—MADRAS.

விலை அணா 10.] [தபால் சார்ஜ் வேறு.

அட்டவணை.

1882-ம் வருஷத்து 2-வது ட்ரஸ்ட்டு ஆக்ட்டு.

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

2-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டிகளை ஏற்பாடுசெய்வதைக் குறித்து.

3-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டிகளுடைய கடமைகளையும் உத்தரவாதங்களையுங்குறித்து.

4-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டிகளுடைய சுதந்திரங்களையும் அதிகாரங்களையுங்குறித்து.

5-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டிகளுடைய அசமர்த்ததையைக்குறித்து.

6-ம் அத்தியாயம்.

பிரயோசனமடைகிறவனுடைய சுதந்திரங்களையும் உத்தரவாதங்களைக்குறித்து.

7-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டி அலுவலைவிட்டு நீங்குவதைக்குறித்து.

8-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டு அற்றுப்போவதைக்குறித்து.

9-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டு தன்மைத்தான சில கடமைகளைக்குறித்து.

தரும சம்பந்தமாயும், மத சம்பந்தமாயுமுள்ள ட்ரஸ்ட்டு பரிபாலனத்தைக் குறித்த.

1890-ம் வருஷத்து 6-வது ஆக்ட்டு.

1920-ம் வருஷத்து 14-வது ஆக்ட்டு.

ACT NO. II OF 1882.

1882-ம் வருஷத்து 2 வது ஆக்ட்டு.

பிரைவேட்டு திரஸ்ட்டுகளேயும் திரஸ்ட்டிகளேயுங்குறித்த சட்டதிட்டத்தை திருத்தி வரையறுப்பதற்கான ஆக்ட்டு.

பீடிகை.

பிரைவேட்டு திரஸ்ட்டுகளேயும் திரஸ்ட்டுகளேயுங் குறித்த சட்டதிட்டத்தைத் திருத்தி வரையறுப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிற தென்னவென்றால் :—

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

சுருக்கமான பெயரும் வங்கத்தொடங்குவதும்.

1. இந்த ஆக்ட்டை 1882-ஞுத்திய இந்து தேசத்து திரஸ்ட்டுகளாக்ட்டென்று சொல்லலாம். மேலும் இது 1882-ஞு மார்ச்சிமீ 1௳ வழங்கத் தொடங்கவேண்டியது.

வியாபிக்குமிடம்.

இது முதலிலே, ஆலோசனேசபையிலுள்ள சென்னபட்டணம் கவர்னரவர்களாலும் வடமேற்கு மாகாணங்கள்- பஞ்சாப் - இவற்றின் லெப்ட்டினெண்டு கவர்னர்களாலும் அயோத்தி - மத்திய மாகாணங்கள் - கூர்க் - ஆஸாம் இவற்றின் சீவ் கமிஷனர்களாலும் தனித்தனி ஆளப்பட்ட ராச்சியங்களுக்கு வியாபிக்கிறது ; அவ்வவ்விடத்திய பிரதேச கவரன்மெண்டார் சர்க்கார் கெஜட்டில் விளம்பரமூலமாய் பிரிட்டிஷ் இந்தியாவிலே வேறே யாதொரு பாகத்திற்கு இதை அப்போதைக்கப்போது வியாபிக்கச்செய்யலாம். ஆனல் இதில் சொல்லியிருப்பதெதுவும், வாக்ப

நிவாரணை.

(Wakf) என்னும் சமர்ப்பிக்கப்பட்ட இனங்களைக் குறித்து மஹமதிய லாவில் சொல்லியிருக்கிற விதிகளுக்காவது, வழக்கத்தைப்பற்றின அல்லது நபர்களுக்குரிய யாதொரு சட்டதிட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டபடி யாதொரு அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்தவர்களுடைய பரஸ்பர சம்பந்தங்களுக்காவது பாதகமுண்டாக்கவுமாட்டாது; பொதுவாகவாவது சிலருக்குரித்தாகவாவது மதசம்பந்தமாயாகிலும் தருமநிமித்தமாயாகிலும் சமர்ப்பிக்கப்பட்ட இனங்களுக்காவது, யுத்தத்தில் கொள்ளையடித்தபொருளையடித்தவர்களுக்குப் பகிர்ந்துகொடுப்பதற்காக ஏற்படும் திரஸ்ட்டுகளுக்காவது சம்பந்தப்படவுமாட்டாது; இந்த ஆக்ட்டிலுள்ள இரண்டாம் அத்தியாயத்தில் சொல்லியிருப்பதெதுவும் மேற்படிதேதிக்கு முன்னிட்டு ஏற்படுத்தப்பட்ட திரஸ்ட்டுகளுக்குச் சம்பந்தப்படமாட்டாது.

சட்டதிட்டங்கள் ரத்து.

2. அந்தந்தகாலத்தில் இந்த ஆக்ட்டு வழங்கிக்கொண்டிருக்கிற ராச்சியங்களிலே, இதோடு சேர்க்கப்பட்ட ஷிடியூலில் கண்டிருக்கும் ஸ்ட்டாட்டியூட்டும் ஆக்ட்டுகளும் மேற்படி ஷிடியூலில் சொல்லியிருக்கிற அளவுக்கு ரத்தாகவேண்டியது.

அர்த்தம். திரஸ்ட்டு என்பதற்கு.

3. திரஸ்ட்டு என்பது - சொத்திலுள்ள சொத்துவத்தோடு சேர்ந்ததாயும், வேறொருவனுடைய பிரயோசனத்துக்காகவாகிலும் வேறொருவனுடைய பிரயோசனத்திற்கும் சொந்தக்காரனுடைய பிரயோசனத்திற்குமாகவாகிலும் சொந்தக்காரனிடத்தில் நம்பிக்கைவைக்கப்பட்டு அவனால் அது அங்கீகரிக்கப்படுவதனாலாவது நம்பிக்கை தெரிவிக்கப்பட்டு அவனால் அங்கீகரிக்கப்படுவதனாலாவது உண்டாவதாயுமிருக்கிற உடன்பாடாகும்.

திரஸ்ட்டு ஏற்பாடுசெய்கிறவனென்பதற்கு:

திரஸ்ட்டி என்பதற்கு:

எவன் நம்பிக்கை வைக்கிறானோ அல்லது தெரிவிக்கிறானோ அவன் திரஸ்ட்டு ஏற்பாடுசெய்கிறவனென்று சொல்லப்படுகிறான்: நம்பிக்கையை அங்கீகரிக்கிறவன் திரஸ்ட்டியென்று சொல்லப்படுகிறான்: எவனுடைய பிரயோசனத்திற்காக

பிரயோசனம் அடைகிறவனென்பதற்கு:

திரஸ்ட்டு சொத்து என்பதற்கு:

திரஸ்ட்டு ஆதரவு என்பதற்கு:

நம்பிக்கை அங்கீகரிக்கப்படுகிறதோ அவன் பிரயோசனமடைகிறவன் (அல்லது பிரயோசனகாரி) என்று சொல்லப்படுகிறான்: திரஸ்ட்டைச்சேர்ந்த பொருளானது திரஸ்ட்டுசொத்து அல்லது திரஸ்ட்டுபணமென்று சொல்லப்படுகிறது: பிரயோசனகரமான பாத்தியதை என்பது - திரஸ்டுசொத்துக்குச் சொந்தக்காரனாக திரஸ்டிக்கு விரோதமாய் அவனுக்குள்ள சுதந்திரமாகும்: திரஸ்ட்டைத்தெரிவிக்கிற ஆதாரவு ஏதாவதிருந்தால் அது திரஸ்ட்டு ஆதரவென்று சொல்லப்படும்.

திரஸ்ட்டை மீறுவது என்பதற்கு:

அந்தந்தகாலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு சட்டதிட்டத்தினாலே திரஸ்ட்டியின்பேரில் அப்படிப்பட்டவனாக சுமத்தப்படும் யாதொரு கடமையை மீறுவது - திரஸ்ட்டைமீறுவது (அதாவது நம்பிக்கைத்துரோகம்) என்று சொல்லப்படுகிறது.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டதென்பதற்கு:

இந்த ஆக்ட்டிலே சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றுமில்லாவிட்டால், ரிஜிஸ்தர் செய்யப்பட்டது என்பது - தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்தர் பண்ணுவதற்காக அந்தந்தகாலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற சட்டதிட்டப்படி ரிஜிஸ்தர்செய்யப்பட்டதென்று அர்த்தமாகும். யாதொரு நபருக்கு யாதொருசங்கதி வாஸ்தவத்தில் தெரிந்திருந்தாலும், அவன் வேணுமென்று விசாரணை செய்யாமலிருப்பதினாலாவது மிகுந்த அசாக்கிரதை செய்வதினாலாவது தெரியாமற்போச்சுதே தவிர மற்றப்படி அவனுக்கு அது தெரிந்திருக்கும்படியானதாயிருந்தாலும், 1872 - வருஷத்திய இந்துதேசத்து கந்திராக்ட்டு ஆக்ட்டு 229-வது பிரிவில் சொல்லியிருக்கிற விஷயங்களிலே அந்த சங்கதியைக்குறித்து அவனுடைய ஏஜெண்டுக்கு அறிக்கை செய்யப்பட்டிருந்தாலும் அவனுடைய ஏஜெண்டு அதைத் தெரிந்துகொண்டிருந்தாலும், அப்படிப்பட்ட

நோட்டீசு என்பதற்கு.

1872 ஹு௱௲ ௯ வது ஆக்டடில் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிற பதங்கள்.

நபர் அந்த சங்கதிலயக்குறித்து நோட்டீசு அடைந்தவனென்று சொல்லப்படுகிறான்; இந்த ஆக்ட்டில் உபயோகிக்கப்பட்டும் 1872- ஹுஞ்திய இந்துதேசத்து கந்திராக்ட்டு ஆக்ட்டில் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிற பதங்களுக்கெல்லாம், அந்த ஆக்ட்டில் அததற்கென்ன அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த அர்த்தங்கள் இருப்பதாக எண்ணவேண்டியது.

2-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டுகளை ஏற்பாடுசெய்வதைக்குறித்து.

சட்ட சம்மதமான காரியம்.

4. யாதொரு சட்டசம்மதமான காரியத்திற்காக யாதொரு திரஸ்ட்டை ஏற்பாடு செய்யலாம். யாதொரு திரஸ்ட்டைப்பற்றின காரியமானது, (a) சட்டத்தினாலே விலக்கப்பட்டாகிலும், (b) செய்ய ஒட்டினால், யாதொரு சட்ட நிபந்தனைகளை அடித்துப்போடும்படியான தன்மையுள்ளதாகவாகிலும், (c) மோசமுள்ளதாகவாகிலும், (d) வேறொருவனுடைய சரீரத்துக்காவது சொத்துக்காவது தீங்கு உண்டுபண்ணுகிறதாகவாகிலும் உண்டுபண்ணும்படியானதாகவாகிலும், (e) அநீதி என்றாவது அரசுமுறைக்கு விரோதமென்றாவது கோர்ட்டார் எண்ணுகிறதாகவாகிலும், இராவிட்டால், சட்ட சம்மதமானதாகவே இருக்கிறது.

எதைப்பற்றின காரியம் சட்டத்துக்கு விரோதமாகிறதோ அப்படிப்பட்ட பிரதி திரஸ்ட்டும் செல்லாததாகும். இரண்டுகாரியங்களுக்காக யாதொரு திரஸ்ட்டு ஏற்பாடுசெய்யப்பட்டு, அதுகளில் ஒன்று சட்ட சம்மதமுள்ளதாயும் மற்றொன்று சட்டத்துக்கு விரோதமுள்ளதாயும் இருந்தால், அவ்விருகாரியங்களையும் வேறுபிரிக்கக் கூடாத பட்சத்தில், அந்த திரஸ்ட்டுமுழுமையும் செல்லாததாகும்.

விவரணம்.—இந்தப்பிரிவிலே, சட்டம் என்னும் பதமானது திரஸ்ட்டு சொத்து யாதொரு அந்நியதேசத்திலுள்ள அசையாப் பொருளாயிருந்தால், அப்படிப்பட்ட தேசத்தின் சட்டமென்றும் அர்த்தமாகும்.

திருஷ்டாந்தம்.

(a) தாய்தந்தையற்ற பெண்களை விலைமாதர்களாக பழக்குவதற்காக அவர்களைப்போஷிப்பதற்கு சொத்திலிருந்து வரும் லாபத்தை உபயோகிக்கும்படி திரஸ்ட்டில் வைத்துகொண்டிருப்பதற்கு எ - என்பவன் பி - என்பவனுக்கு ஒரு சொத்தை ஒப்படைசெய்கிருன். அந்த திரஸ்ட்செல்லாது.

(b) தீர்வைகொடாமல் கள்ளத்தனமாய் சரக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்காக சொத்தை உபயோகித்து, அதினுல் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு -எ- என்பவனுடைய மக்களைப் பாதுகாத்து வருவதற்கு திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி எ - என்பவன் பி - என்பவனுக்குஉயில்மூலமாய் சொத்து ஏற்படுத்துகிருன். அந்ததிரஸ்ட்டு செல்லாது.

(c) எ - என்பவன் கடனிறுக்கச் சக்தியற்ற தசையிலிருக்கையில், ஆயுசு வரையில் எ - என்பவனுக்காகவும் அவன் இறந்தபின்பு பி - என்பவனுக்காகவும் திரஸ்ட்டில் வைத்துக்கொள்ளும்படி சொத்தை பி - என்பவனுக்குத் திரான்ஸ்பர் செய்கிருன். எ-என்பவன் கடனிறுக்கச் சக்திபற்றவனென்று தீர்மானிக்கப்படுகிறது. எ-என்பவனுக்காக ஏற்பட்டிருக்கும் திரஸ்ட்டானது அவனுக்கு கடன் கொடுத்தவர்கள் விஷயத்திலே செல்லாததாகும்.

அசையாப் பொருளைக் குறித்துதிரஸ்ட்டு ஏற்பாடு.

5. அசையாப்பொருளைக்குறித்து ஏற்படும் திரஸ்ட்டானது எழுதப்பட்டு, திரஸ்ட்டு ஏற்பாடுசெய்கிறவனுலாவது திரஸ்ட்டியினுலாவது கையெழுத்து போடப்பட்டு ரிஜிஸ்தர்செய்கிற உயிலல்லாத யாதொரு ஆதாரவினுலாகிலும், திரஸ்ட்டு ஏற்பாடு செய்கிறவன் அல்லது திரஸ்ட்டியினுடைய உயிலினுலாகிலும் தெரிவிக்கப்பட்டிருந்தாலொழிய, செல்லமாட்டாது.

அசையும் பொருளைக்குறித்து திரஸ்ட்டு ஏற்பாடு.

அசையும்பொருளைக்குறித்து ஏற்பட்ட திரஸ்டானது மேற்சொல்லியபடி தெரிவிக்கப்பட்டாகிலும், சொத்தின் ஸ்வாதீனம் திரஸ்ட்டிக்கு திரான்சுபர் செய்யப்பட்டாலு மிருந்தாலொழிய செல்லமாட்டாது.

இந்த விதிகள் மோசம்செய்வதற்காக வியாபிக்கும்படியானதாயிருக்கிற விஷயங்களிலே சம்பந்தப்படமாட்டாது.

திரஸ்ட்டு ஏற்படுத்றவது.

6 ஐந்தாவது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, திரஸ்ட்டு ஏற்பாடுசெய்கிறவன் - எந்த வார்த்தைகளினலாவது செய்கைகளினலாவது, **(a)** அதுகளினலே யாதொரு திரஸ்ட்டு ஏற்பாடுசெய்வதற்கு தனக்கிருக்கும் எண்ணத்தையும், **(b)** திரஸ்ட்டின் காரியத்தையும், **(c)** பிரயோசனமடைகிறவனையும், **(d)** திரஸ்டுசொத்தையும் நியாயமான நிச்சயத்தோடு தெரிவித்து, (உயில்மூலமாய் அந்த திரஸ்ட்டு அறிவிக்கப்பட்டாகிலும் திரஸ்ட்டு ஏற்பாடுசெய்கிறவன்தானே திரஸ்ட்டியாவதாகவாகிலும் இருந்தாலொழிய) அந்த திரஸ்டுசொத்தை திரஸ்ட்டிக்கு திரான்சுபர்செய்தால், திரஸ்ட்டு ஏற்பாடாகிறது.

திருஷ்டாந்தம்.

(a) சி - என்பவனுடைய "பிரயோசனத்திற்காக பி — என்பவன் சொத்தை யாதொருவகை செய்வானென்று முழு நம்பிக்கைவைத்து" எ - என்பவன் பி - என்பவனுக்கு உயிலில் ஒருசொத்து ஏற்படுத்துகிறன். எ - சி - என்பவர்களுக்குச் சம்பந்தப்படுகிறமட்டில் இது திரஸ்ட்டை ஏற்படுத்துகிறது.

(b) "குடும்பத்திலேயே சொத்திருக்கும்படி - பி - என்பவன் செய்வானென்று நம்பி" எ - என்பவன் அவனுக்கு ஒரு சொத்தை உயிலிலேற்படுத்திவைக்கிறன். பிரயோசனமடைகிறவன் இன்னனென்று நியாயமான நிச்சயத்தோடு தெரிவிக்கப்படாமையினலே, இதனல் திரஸ்ட்டு ஏற்படமாட்டாது.

(c) சி - என்பவனுடைய குடும்பத்தில் யார் அதிக பாத்திராளென்று - பி - என்பவனுக்குத் தோற்றுகிறதோ அவர்களுக்கு சொத்தைப் பங்கிட்டுக்கொடுக்கும்படி வேண்டிக்கொண்டு எ - என்பவன் பி - என்பவனுக்கு ஒரு சொத்தை உயிலேற்படுத்திவைக்கிறன். பிரயோசனமடைகிறவர்கள் இன்னரென்று நியாயமான நிச்சயத்தோடு தெரிவிக்கப்படாமையினலே, இதனல் திரஸ்ட்டு ஏற்படமாட்டாது.

(d) சி - என்பவனுடைய மக்களுக்குள் சொத்தில் பெரும்பாகத்தை பங்கிட்டுக்கொடுக்கும்படி பி - என்பவனை வேண்டிக்கொண்டு, எ - என்பவன் அவனுக்கு உயிலில் ஒரு சொதது ஏற்படுத்துகிறன். திரஸ்ட்டுசொத்து போதுமான நிச்சயத்தோடு தெரிவிக்கப்படாமையினலே, இதனல் திரஸ்ட்டி ஏற்படமாட்டாது.

(e) எ - என்பவனுடைய கடன்களையும் சி - என்பவனுக்கு உயிலினல் ஏற்படுத்தப்பட்ட ஆஸ்தியையும் பி - என்பவன் செலுத்துவதென்கிற

ஷரத்தின்பேரில், எ - என்பவன் அவனுக்கு ஒரு ஷாப்பையும் வியாபாரப்பொருளையும் உயிலேற்படுத்துகிறான். இது ஷரத்தாகுமேயல்லாமல், எ - என்பவனுடைய கடன்காரர்களுக்காகவும் சி - என்பவனுக்காகவும் திரஸ்ட்டாகமாட்டாது.

இன்னார் திரஸ்ட்டு ஏற்பாடு பண்ணலாமென்பது.

7. (a) கந்திராக்ட்டு செய்யத்தக்கவனாயிருக்கிற பிரதிநபராலும்,

(b) அசல்விசாரணை அதிகாரமுள்ள யாதொருபிரதான சிவில் கோர்ட்டாருடைய உத்தரவுபெற்றுக்கொண்டு, யாதொரு மைனரால் அல்லது அவன் பட்சத்திலும்,

யாதொரு திரஸ்ட்டு ஏற்படுத்தப்படலாம்;

ஆனால் இவ்விருவிஷயத்திலும், திரஸ்ட்டு ஏற்பாடுசெய்கிறவன் என்ன விஷயங்களிலே எவ்வளவுமட்டில் திரஸ்ட்டுசொத்தை யாதொரு வகைசெய்யலாமோ அதுகளைக்குறித்து அப்போதைக்கு வழங்கிக்கொண்டிருக்கிற சட்டதிட்டத்திற்கு உட்பட்டிருக்க வேண்டியது.

திரஸ்ட்டுக்குக் காரணமாயிருக்கிற பொருள்.

8. யாதொரு திரஸ்ட்டைச்சேர்ந்த பொருளானது பிரயோசனமடைகிறவனுக்கு திரான்சுபர் செய்யப்படத்தக்கதான சொத்தாயிருக்கவேண்டியது.

நடந்துகொண்டிருக்கும் யாதொரு திரஸ்ட்டின்படி பிரயோசனகரமான பாத்தியதையாகமாத்திரம் அது இருக்கக்கூடாது.

இன்னான் பிரயோசனமடைகிறவனாயிருக்கலாமென்பது.

9. சொத்தை வைத்துக்கொண்டிருப்பதற்கு யோக்கியதையுள்ள பிரதிநபரும் பிரயோசன மடைகிறவனாயிருக்கலாம்.

பிரயோசனமடைகிறவன் விட்டுவிடுவது.

உத்தேசிக்கப்பட்ட பிரயோசனகாரி திரஸ்ட்டின்படி தனக்குள்ள பாத்தியதையை, வேண்டாமென்று நிவர்த்தித்து திரஸ்ட்டிக்குத் தெரிவிப்பதினாலாவது, திரஸ்ட்டைக்குறித்து நோட்டீசு கிடைத்திருந்து அதற்கு ஒவ்வாத யாதொரு சுதந்தரத்தைக்கொண்டு வருவதினாலாவது, விட்டுவிடலாம்.

10. சொத்தை வைத்துக்கொண்டிருக்க யோக்கியதையுள்ள பிரதிநபரும் திரஸ்ட்டியாயிருக்கலாம்; ஆனால் திரஸ்ட்டிலே யுக்தாயுக்தம் யோசித்துச்செய்வது அடங்கியிருந்தால், அவன் கந்திராக்ட்டு செய்யத் தக்கவனாயிருந்தாலொழிய அதை நிறைவேற்றக் கூடாது.

இன்னார் திரஸ்ட்டியாயிருக்கலாமென்பது.

திரஸ்ட்டு ஏற்றுக்கொள்ள எவனும் கடமைப்பட்டவனல்ல.

யாதொரு திரஸ்ட்டை ஏற்றுக்கொள்ள எவனும் கடமை பூண்டவனல்ல.

ஏற்றுக்கொள்ளுவதாக நியாயமான நிச்சயத்தோடு தெரிவிப்பதாயிருக்கிற திரஸ்ட்டியினுடைய எந்த சொற்களினாலாவது செய்கைகளினாலாவது யாதொரு திரஸ்ட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

திரஸ்ட்டை ஏற்றுக்கொள்ளுவது.

உத்தேசிகப்பட்ட திரஸ்ட்டியானவன் யாதொரு திரஸ்ட்டை ஏற்றுக்கொள்ளாமல், நியாயமான காலத்திற்குள் அதை வேண்டாமென்று விட்டுவிடலாம்; அப்படி விட்டுவிடுவதினாலே திரஸ்ட்டு சொத்து அவனுக்கு சங்கிரமிப்பது தடைபட்டுப்போகும்.

திரஸ்ட்டை விட்டுவிடுவது.

உடன் திரஸ்ட்டிகள் இருவர் அல்லது பலரில் ஒருவன் விட்டுவிடுவதினாலே, திரஸ்ட்டுசொத்து மற்றவனுக்காவது மற்றவர்களுக்காவது சங்கிரமிப்பதுமல்லாமல், அந்த மற்றவனாகிலும் மற்றவர்களாகிலும் திரஸ்ட்டு ஏற்பட்ட தேதிமுதற்கொண்டு ஏகதிரஸ்ட்டி அல்லது திரஸ்ட்டிகளாகவும் ஆகிறார்கள்.

திருஷ்டாந்தம்.

(a) ஏ - என்பவன் டி - என்பவனுக்குத் திரஸ்ட்டிகளாக, தன்னுடைய எக்ஸிக்யூட்டர்களாகிய பி - சி - என்பவர்களுக்கு ஒரு சொத்தை உயிலிலேற்படுத்துகிறான். பி - என்பவனும் சி - என்பவனும் ஏ - என்பவனுடைய உயிலை ருஜுப்படுத்துகிறார்கள். இப்படி செய்ததினாலேயே திரஸ்ட்டை யேற்றுக்கொண்டதாகிறது; மேலும் பி - சி - என்பவர்கள் - டி - என்பவனுக்காக அந்த சொத்தை திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(b) எ - என்பவன் சொத்தைவிற்று தன்னுடைய கடன்களைச் செலுத்துவதற்கு திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி - பி - என்பவனுக்கு ஒரு சொத்தைத் திரான்ஸ்பர் செய்கிறான். பி - என்பவன் திரஸ்டை ஏற்றுக்கொண்டு அந்த சொத்தை விற்கிறான். பி - என்பவனைக்குறித்தமட்டில், எ - என்பவனுடைய கடன்காரர்களுக்காக சொத்தை விற்றுவந்த பணத்திற்கு திரஸ்ட்டு ஏற்படுகிறது.

(c) எ - என்பவன் சில திரஸ்ட்டிகளின்பேரில் - பி - என்பவனுக்கு ஒரு லட்சம் ரூபாய் உயிலிலேற்படுத்தி, அவனை தனக்கு எக்ஸிக்கியூட்டராக நேமித்துக்கொள்ளுகிறான். பி - என்பவன் மொத்த ஆஸ்தியிலிருந்து அந்த லட்ச ரூபாயை வேறுபிரித்து குறித்த காரியத்திற்காக அதைச் செலவிடுகிறான். இது திரஸ்டை ஏற்றுக்கொள்ளுவதாகிறது.

---

3 - ம் அத்தியாயம்.

திரஸ்ட்டிகளுடைய கடமைகளையும் உத்தாவாதங்களையுந்குறித்து.

திரஸ்ட்டியானவன் திரஸ்ட்டை நிறைவேற்றுவது.

11. கந்திராக்ட்டு செய்வதற்கு யோக்கியதையுள்ள எல்லா பிரயோசனகாரிகளுடைய அனுமதியினால் மாற்றப்பட்டபடிக்குத்தவிர, திரஸ்ட்டியானவன் திரஸ்ட்டு காரியத்தை நிறைவேற்றவும், திரஸ்ட்டு ஏற்பட்டகாலத்தில் அதை ஏற்பாடுசெய்தவனால் கட்டளையிடப்பட்டபடி நடக்கவும் கடமைப்பட்டிருக்கிறான்.

பிரயோசனமடைகிறவன் கந்திராக்ட்டுசெய்ய அசமர்த்ததையுடையவனாயிருந்தால், இந்தப்பிரிவிலுள்ள காரியங்களின்பொருட்டு, அசல் விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சிவில்கோர்ட்டார் அவனுக்காக அனுமதிகொடுக்கலாம்.

யாதொரு கட்டளையை அனுசரித்து நடப்பது சாத்தியமற்றதாயிருந்தாலும் அநீதியாயிருந்தாலும் பிரயோசனகாரியங்களுக்கு ஸ்பஷ்டமாய் தீங்குண்டாக்குவதாயிருந்தாலும், இந்தப்பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் திரஸ்ட்டியானவன் அப்படி அனுசரித்து நடக்கவேண்டியவனாயிருப்பதாக எண்ணக்கூடாது.

விவரணம்.—மாறான எண்ணம் தெரிவிக்கப்படாதிருந்தால், கடன்களைச் செலுத்துவதற்காக ஏற்பட்ட திரஸ்ட்டின் காரியமா

னது—(a) திரஸ்ட்டு ஆதரவு எழுதப்பட்ட தேதியிலாவது, அப்படிப் பட்ட ஆதாரவு உயிலாயிருந்தால், திரஸ்ட்டு ஏற்பாடுசெய்தவன் இறந்து போன தேதியிலாவதிருப்பதாய் வசூல்செய்யப்படத்தக்கதான அவ னுடைய கடன்களைமாத்திரம் செலுத்துவதற்காகவும்; (b) வட்டியில் லாத கடன்கள் விஷயத்திலே, வட்டியில்லாமல் அதுகளைச் செலுத்து வதற்காகவும் இருப்பதாக எண்ணவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) ஒரு திரஸ்ட்டியாகிய - எ - என்பவனுக்கு ஒரு நிலத்தை பயிரங்க மான எலத்தில் விற்கும்படியாக மாத்திரம் அதிகாரங் கொடுத்திருக்கிறது. பிரை வேட்டு கந்திராக்ட்டு மூலமாய் அவன் அந்த நிலத்தை விற்கக்கூடாது.

(b) எக்ஸ் ஒய் இஜட் - என்பவர்களுக்காக ஒரு நிலத்துக்கு திரஸ்ட்டி யாயிருக்கிற - எ - என்பவனுக்கு, அந்த நிலத்தை குறித்த ஓர் தொகைக்கு பி - என்பவனுக்கு விற்கும்படியாக அதிகாரங் கொடுத்திருக்கிறது. சந்திராக்ட்டு செய்ய யோக்கியதையுள்ளவர்களான - எக்ஸ் - ஒய் - இஜட் - என்பவர்கள் அந்த நிலத்தை குறைந்த தொகைக்கு - எ - என்பவன் சி - என்பவனுக்கு விற்கலா மென்று அநுமதிக்கிறார்கள். - எ - என்பவன் அப்பிரகாரமே அந்த நிலத்தை விற்கலாம்.

(c) பி - என்பவளுடைய புருஷனாகிய சி - என்பவனுக்கு அவனுடைய பத்திரத்தை ஈடாக வைத்துக்கொண்டு, பி - என்பவளுடைய வேண்டுகோளின் பேரில் திரஸ்ட்டு சொத்தை கடனாகக் கொடுக்கும்படி, பி - என்பவளுக்காகவும் அவளுடைய மக்களுக்காகவும் திரஸ்ட்டியாயிருக்கிற - எ - என்பவனுக்கு திரஸ் ட்டு ஏற்பாடுசெய்கிறவன் உத்தரவுபண்ணுகிறான். சி - என்பவன் கடனிறுக்கச் சக்திபற்றவனாகிறான்; பி - என்பவள் அப்படி கடன் கொடுக்கச்சொல்லி - எ - என்பவனை வேண்டிக்கொள்ளுகிறாள். எ - என்பவன் கடன் கொடுக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

திரஸ்ட்டு சொத்தின் ஸ்திதி யிருக்கிறதென்று திரஸ்ட்டியானவன் தெரிந்துகொள்ளுவது.

12. திரஸ்டியானவன் திரஸ்ட்டு சொத்தின் தன்மையையும் வயணங்களையுங்குறித்து கூடிய சீக்கிரத்தில் தெரிந்துகொள்ளவும், அவசியமாயிருக்கிற பட்சத்தில் திரஸ்ட்டுசொத்தை தனக்கு திரான்சுபராகும் படிச்செய்துகொள்ளவும், குறைவான அல்லது அபாயகரமான ஈட்டின்பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் திரஸ்ட்டுபணங்களை (திரஸ்ட்டு ஆதாரவிலுள்ள

நிபந்தனைகளுக்குட்பட்டு) வாங்கிக்கொள்ளவும், கடமைப்பட்டிருக்கிறான்.

திருஷ்டாந்தம்.

(a) டிரஸ்ட்டு சொத்தானது நபர் ஜாமீன்பேரில் வெளியில் பாக்கியாயிருக்கிற கடனாயிருக்கிறது. அந்தக்கடனை அப்படியே பாக்கியாய் விட்டுவைப்பதற்கு தன் யுக்தப்படிச் செய்யும்படியான அதிகாரத்தை டிரஸ்ட்டு ஆதாரவினால் டிரஸ்ட்டிக்குக் கொடுக்கவில்லை. அனாவசியமான ஆலசியஞ்செய்யாமல் அந்தக்கடனை வரப்பற்றுவது டிரஸ்ட்டியினுடைய கடமையாகும்.

(b) டிரஸ்ட்டு சொத்தானது உடன் டிரஸ்ட்டிகள் இருவரில் ஒருவனுடைய வசத்திலுள்ள பணமாயிருக்கிறது. யுக்தப்படிச் செய்யும்படியான அதிகாரம் டிரஸ்ட்டு ஆதாரவினால் கொடுக்கப்படவில்லை. உடன் டிரஸ்ட்டியாகிய மற்றவன் அந்த விஷயத்தைப் பற்றின சங்கதிகளினால் அவசியமாயிருக்கிற காலத்தை விட அதிகமான காலத்திற்கு முந்தினவனை அந்தப்பணத்தை வைத்துக்கொண்டிருக்கவொட்டக்கூடாது.

டிரஸ்ட்டியானவன் டிரஸ்ட்டுசொத்துக்குள்ள ஹக்கைக் காப்பது.

13. டிரஸ்ட்டுசொத்தின் தன்மையைக்குறித்தும் தொகை அல்லது பெறுமானத்தைக்குறித்தும் யோசித்து, டிரஸ்ட்டுசொத்தைக் காப்பதற்காகவும் அதற்குள்ள ஹக்கை ஸ்தாபிப்பது அல்லது பந்தோபஸ்து செய்வதற்காகவும் நியாயமாய் அவசியமாக இருக்கும் வியாச்சியங்களையெல்லாம் நடத்தவும் அதுகளுக்கு எதிர்வாதஞ் சொல்லவும், (டிரஸ்ட்டு ஆதாரவிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு) அப்படி அவசியமாகவிருக்கும் வேறே வகைகளைச்செய்யவும் டிரஸ்டியானவன் கடமைப்பட்டிருக்கிறான்.

திருஷ்டாந்தம்.

டிரஸ்ட்டு சொத்தானது டிரஸ்ட்டு ஏற்பாடுசெய்தவனுக்கு ரிஜிஸ்தர்பண்ணாத ஆதாரவுமூலமாய் கொடுக்கப்பட்ட அசையாப்பொருளாயிருக்கிறது. 1877-ளுத்திய இந்துதேசத்து ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட்டிலுள்ள * நிபந்தனைகளுக்குட்பட்டு, அந்த ஆதாரவை ரிஜிஸ்தர்செய்விப்பது டிரஸ்ட்டியினுடைய கடமையாகும்.

---

* இந்த ஆக்ட் 1908-ளுத்து 16-வது ஆக்டால் முழுவதும் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

திரஸ்ட்டியான வன் பிரயோஜன மடைகிறவனுக்கு விரோதமாய் ஹக்கு கொண்டுவரக்கூடாது.

14. திரஸ்ட்டியானவன் தனக்காகவாகிலும் வேறொருவனுக்காகவாகிலும், பிரயோசன மடைகிறவனுடைய பாத்தியதைக்கு விரோதமாய் திரஸ்ட்டு சொத்துக்கு யாதொரு ஹக்கை கொண்டுவரவுங்கூடாது அதற்கு உதவிசெய்யச் செய்யவுங்கூடாது.

திரஸ்ட்டி யான வன் ஜாக்கிரதை யெடுத்துக் கொள்வது.

15. திரஸ்ட்டு சொத்து தனதாயிருந்தால் சாதாரணமான விவேகசாலி ஒருவன் அதை எவ்வளவு ஜாக்கிரதையாக நடத்துவானே அவ்வளவு ஜாக்கிரதையோடு அந்த திரஸ்ட்டு சொத்தை நடத்துவதற்கு திரஸ்ட்டியானவன் கடமைப்பட்டிருக்கிறன்; மாறான சண்டிராக்ட்டு இல்லாவிடில், அப்படி நடத்துகிற திரஸ்ட்டியானவன் திரட்டுசொத்து நஷ்டமாய்ப் போனாலும் அழிந்துபோனாலும் கெட்டுப்போனாலும் அதற்கு உத்தரவாதியல்ல.

திருஷ்டாந்தம்.

(a) கல்கத்தாவிலுள்ள - எ - என்பவன் பொம்பாயிலுள்ள – பி - என்பவனுக்காக திரஸ்ட்டியாயிருக்கிறன். திரஸ்ட்டி ஹோதாவிலே அந்த திரஸ்ட்டி பட்சத்தில் நாணயப்பமுதில்லாத ஒருவனல் எழுதப்பட்டு, பொம்பாயிலே செலுத்தப்படத்தக்கதான பில்லுகளாக எ – என்பவன் பி - என்பவனுக்கு திரஸ்ட்டு நிதி அனுப்புகிறன். அந்த பில்லுகள் அலட்சியஞ்செய்யப்படுகிறது. எ - என்பவன் அந்த நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கவேண்டியவனல்ல.

(b) வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்குத் திரஸ்ட்டியாகிய - எ - என்பவன் அப்போது நாணயஸ்தனுயிருந்த சாவுகாராகிய - பி - என்பவனுக்கு அந்த திரஸ்ட்டு நிமித்தமாய் வாடகை செலுத்தும்படி வாடகைதாரனுக்கு உத்தரவு செய்கிறன். அப்பிரகாரமே - பி – என்பவனிடத்தில் வாடகை செலுத்தப்படுகிறது. எ - என்பவன் அந்தப்பணம் தனக்கு எப்போது வேண்டியதோ அதுவரையில் மாத்திரம் - பி - என்பவனிடத்தில் அதை விட்டுவைக்கிறன். அந்தப் பணம் வாங்கிக்கொள்ளப்படுவதற்கு முன்னமே - பி - என்பவன் கடனிறுக்கச் சக்தியற்றவனுய் விடுகிறன் பி-என்பவன் கடனிறுக்கச்சக்தியற்ற தசையிலிருந்தானென்று நம்புவதற்கு – எ – என்பவனுக்கு முகாந்தரமில்லே. ஆதலால், அவன் அந்த நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கவேண்டியவனல்ல.

(c) பி - என்பவனுக்காக இரண்டு கடன்களைக் குறித்து திரஸ்ட்டியாயிருக்கும் - எ - என்பவன் ஒன்றை விடுதலைசெய்து மற்றொன்றுக்கு ராஜி செய்துகொண்டால், பி - என்பவனுக்கு அனுகூலமாயிருக்குமென்று நியாயமாய் நம்பி நல்ல எண்ணத்தோடு அப்படிச்செய்கிறான். பி - என்பவனுக்கு அதினால் நேரிடும் யாதொரு நஷ்டத்தை - எ - என்பவன் கட்டிக்கொடுக்க வேண்டியவனல்ல.

(d) திரஸ்ட்டு சொத்தை ஏலத்தில் விற்கும்படி உத்தரவு கொடுக்கப்பெற்ற திரஸ்ட்டியாகிய - எ - என்பவன் அதை விற்கிறான். ஆனால், அந்த விற்பனையைக் குறித்து பிரசித்தப்படுத்தவுமில்லை. விலை கேட்கும்படிச் செய்வதற்கு நியாயமான ஜாக்கிரதை பண்ணாமல் மற்றப்படி தவறியும் போகிறான். பிரயோசனகாரிக்கு இதனால் நேரிடும் நஷ்டத்தை - எ - என்பவன் கட்டிக்கொடுக்க வேண்டியவனாகிறான்.

(e) பி - என்பவனுக்காக திரஸ்ட்டியாயிருக்கும் - எ - என்பவன் தன்னுடைய திரஸ்ட்டை நிறைவேற்றுகையில் திரஸ்ட்டு சொத்தைவிற்கிறான்; ஆனால் தான் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளாமையினாலே கிரயப்பணத்தில் கொஞ்சம் வரப்பற்ற தவறிப்போகிறான். அதினால் - பி - என்பவனுக்கு நேரிட்ட நஷ்டத்தை - எ — என்பவன் கட்டிக்கொடுக்க வேண்டியவனாகிறான்

(f) ஒரு இன்ஷியூரன்சு பாலிஸியைக்குறித்து — பி — என்பவனுக்காக திரஸ்ட்டியாயிருக்கும் — எ - என்பவனிடத்தில், மேல்வாசி (பிரீமியம்) செலுத்துவதற்காக பணமிருக்கிறது ; எ - என்பவன் மேல்வாசி செலுத்தாமற் போவதினாலே அந்தப் பாலிஸி இழந்துவிடப்படுகிறது. எ - என்பவன் அந்த நஷ்டத்தை - பி - என்பவனுக்குக் கட்டிக்கொடுக்க வேண்டியவனாகிறான்.

(g) திரஸ்ட்டிகளாக — பி — சி - என்பவனுக்கு உயிலில் சிலதொகைகளை — எ — என்பவன் ஏற்படுத்தி, எந்த வியாபாரக் கூட்டத்தில் - எ - என்பவன் தானே திரஸ்ட்டு பணங்களைக் கொடுத்து வைத்திருந்தானோ அந்த வியாபாரக் கூட்டத்தாருடைய நபர் ஜாமீன்பேரில் அனுகளை (அப்படியே) விட்டுவைத்திருக்கும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுக்கிறான். எ - என்பவன் இறந்துபோகிறான். அந்த வியாபாரக் கூட்டத்தில் ஒரு மாறுதல் உண்டாகிறது. பி - சி - என்பவர்கள் புது வியாபாரக் கூட்டத்தாருடைய நபர் ஜாமீன்பேரில் அந்தப் பணங்களை (அப்படியே) இருக்கவொட்டக்கூடாது.

(h) பி - என்பவனுக்காக திரஸ்ட்டியாயிருக்கும் எ - என்பவன் தன்னுடைய உடன் திரஸ்ட்டியாகிய சி - என்பவனை அந்த திரஸ்ட்டை தனிமையாய் நிறைவேற்றும்படி விடுகிறான். சி - என்பவன் திரஸ்ட்டு சொத்தை துர்வினியோகப்படுத்துகிறான். பி - என்பவனுக்கு உண்டாகும் நஷ்டத்திற்காக எ - என்பவன் தானே உத்தரவாதியாகவேண்டியது.

16 ஒருவர் பின் ஒருவராக வெவ்வேறு நபர்களுடைய பிரயோசனத்திற்காக திரஸ்ட்டு ஏற்பட்டிருந்து, திரஸ்ட்டு சொத்தானது ஜீரணித்துப் போகும் தன்மையுள்ளதாகவாவது இனிமேல் கிடைக்கும் அல்லது யாதொன்றுக்குப் பின்னிட்டு சித்திக்கும்படியான பாத்தியதையாகவாவதிருந்தால, திரஸ்ட்டு ஆதாரவினாலே மாறுன எண்ணம் இருக்கிறதென்று தெரிந்துகொள்ளக் கூடியதாயிருந்தாலொழிய, அந்த சொத்தை உடனே லாபங்கொடுக்கத்தக்க சாஸ்விதமான சொத்தாக மாற்றுவதற்கு திரஸ்ட்டியானவன் கடமைப் பட்டிருக்கிறுன்.

அழிந்துபோகத் தக்க சொத்தை மாற்றுவது.

திருஷ்டாந்தம்.

(a) ஆயுசுவரையிலே - சி - என்பவனுக்காகவும் அவனிறந்த பின்பு டி - என்பவனுக்காகவும், டி - என்பவன் இறந்த பின்பு இ - என்பவனுக்காகவும் திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி எ – என்பவன் தன்னுடைய சொத்தையெல்லாம் பி - என்பவனுக்கு உயிலிலேற்படுத்துகிருன். வாடகைக்கு விடப்பட்ட மூன்று வீடுகள் எ - என்பவனுடைய சொத்தாயிருக்கிறது. அந்த வீடுகளை அப்படிப்பட்டதுகளாகவே வைத்துக்கொண்டு அனுபவிக்கவேண்டியதென்று எ - என்பவன் எண்ணங்கொண்டிருந்ததாக அவனுடைய உயிலிலுள்ள தெதினுலும் தெரியவரவில்லை. பி – என்பவன் அந்த வீடுகளைவிற்று அதினுல் வரும் பணத்தை 20-வது பிரிவின் பிரகாரம் (ஈட்டின் பேரில்) கொடுத்துவைக்கவேண்டியது.

(b) எ - என்பவன் கல்கத்தாவிலுள்ள வாடகைக்கு விடப்பட்டதன்னுடைய மூன்று வீடுகளையும் அதுகளிலுள்ள எல்லா தட்டு முட்டுகளையும் ஆயுசுவரையிலே சி - என்பவனுக்காகவும் அவன் இறந்த பின்பு டி என்பவனுக்காகவும் டி - என்பவன் இறந்த பின்பு இ - என்பவனுக்காகவும் திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி பி - என்பவனுக்கு உயிலிலேற்படுத்துகிருன். அந்த வீடுகளையும் தட்டுமுட்டு சாமான்களையும் அப்படிப்பட்டதுகளாகவே வைத்துக்கொண்டு அனுபவிக்கவேணுமென்று எண்ணமிருப்பதாக இதனுல் ஸ்பஷ்டமாய்த்தெரியவருகிறது; பி - என்பவன் அதுகளை விற்கக்கூடாது.

17. ஒருவனுக்கு மேற்பட்ட பிரயோசனகாரிகளிருந்தால், திரஸ்ட்டியானவன் பாரபட்சம் பாராட்டாமல் இருக்கவேண்டியது மல்லாமல், ஒருவனுக்கு நஷ்டம்வருவித்து வேருெருவனுக்குப் பிரயோசனம் உண்டாகும்படி அந்த திரஸ்ட்டை நிறைவேற்றவுங்கூடாது.

திரஸ்ட்டியானவன் பாரபட்சம் பாராட்டாதிருப்பது.

தனக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடிச்செய்ய திரஸ்ட்டிக்கு அதிகாரமிருந்தால், அப்படி யுக்தமாகத்தோற்றுகிற பிரகாரம் நியாயமாய் நல்ல எண்ணத்தோடு செய்வதை மேல் விசாரணை பண்ணுவதற்கு இந்தப் பிரிவிற் சொல்லியிருப்பதெதினாலும் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டாவதாக எண்ணக்கூடாது.

திருஷ்டாந்தம்.

பி - சி - டி - என்பவர்களுக்காக திரஸ்ட்டியாயிருக்கும் எ - என்பவன் திரஸ்ட்டு சொத்தை ஈட்டின் பேரில் கொடுத்துவைப்பதற்காக குறித்திருக்கும் வெவ்வேறு மாதிரிகளில் ஒன்றைத் தெரிந்தெடுத்து அதின்படிச்செய்ய அவனுக்கு அதிகாரங்கொடுத்திருக்கிறது. எ - என்பவன் அந்த மாதிரிகளில் ஒன்றை நல்ல எண்ணத்துடன் தெரிந்தெடுத்துக்கொள்ளுகிறான். இப்படி தெரிந்தெடுத்துக்கொள்வதினாலே - பி - சி - டி - என்பவர்களில் அவனவனுக்குள்ள சுதந்திரங்கள் மாறிப்போவதாயிருந்தபோதிலும், கோர்ட்டார் இதில் பிரவேசிக்க மாட்டார்கள்.

திரஸ்ட்டியானவன் நாசஞ்செய்யவொட்டாமல் தடுப்பது.

18. ஒருவர் பின் ஒருவராக பலபேருடைய பிரயோசனத்திற்காக திரஸ்ட்டு ஏற்பட்டிருந்து அவர்களில் ஒருவன் திரஸ்ட்டு சொத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பானாகில், அதற்கு அழிவாகிலும் நிலையான கெடுதியாகிலும் உண்டுபண்ணுவதாயிருக்கிற யாதொரு காரியத்தை அவன் செய்தாலும் செய்வதாக பயமுறுத்தினாலும், திரஸ்ட்டியானவன் அந்தக்காரியத்தைச் செய்யவொட்டாமல் தடுப்பதற்கு வேண்டியவகைகள் செய்ய கடமைப்பட்டிருக்கிறான்.

கணக்கும் சங்கதிதெரிவிப்பதும்.

19. திரஸ்ட்டியானவன் (a) திரஸ்ட்டுசொத்தைக்குறித்துதெளிவாய் சரியாக கணக்குவைக்கவும், (b) பிரயோசனமடைகிறவன் கேட்டுக்கொள்வதின்பேரில், நியாயமான எல்லாக்காலங்களிலும், திரஸ்ட்டுசொத்து இவ்வளவென்பதையும் இன்ன ஸ்திதியில் இருக்கிறதென்பதையுங்குறித்து அவனுக்குப் பூர்த்தியாய் சரியான விருத்தாந்தம் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறான்.

20. திரஸ்ட்டு சொத்து ரொக்கமாயிருந்து, திரஸ்ட்டு காரியங்களுக்காக அதை உடனேயாவது சீக்கிரத்திலாவது உபயோகப்படுத்தக் கூடாவிட்டால், (திரஸ்ட்டு ஆதாவில் யாதொரு உத்தாவு செய்திருந்தால் அதற்குட்பட்டு) திரஸ்டியானவன் அந்தப் பணத்தை வேறே ஈடுகளின்பேரில் கொடுக்காமல், அடியில் கண்டிருக்கும் ஈடுகளின்பேரில் கொடுத்துவைக்க வேண்டியவனாயிருக்கிறான், அதாவது :—

திரஸ்ட்டு பணத்தை ஈட்டின்பேரில் கொடுத்துவைப்பது.

(a) இந்தியா கவர்ன்மெண்டார் அல்லது கிரேட் பிரிட்டனும் அயர்லாந்தும் சேர்ந்த ராஜாங்கத்தினுடைய பிராமிசொரி நோட்டுகள் - டிபென்சூர்கள் - ஸ்ட்டாக்கு முதலிய பத்திரங்களின் பேரில் ;

(b) இந்தியா ரிவினியூவின் பேரில் இம்பீரியல் பார்லிமெண்டு சபையாரால் விதிக்கப்பட்ட பாண்டுகள் - டிபென்சூர்கள் - (அன்னூயிடி) வருஷவாரி வர்த்தனைகள் இவற்றின்பேரில் ;

* ஆனால், குறித்த காலத்தில் முடிவுபெறும் வருஷவாரி வர்த்தனையாயிருக்கிற அப்படிப்பட்ட யாதொரு வருஷவாரிவர்த்தனை சம்பந்தமாய் (ஸிங்கிங் பண்ட் என்னும்) கடன் தீர்ப்பதற்கான நிதியொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட வர்த்தனையின்பேரில் 1916-ம் ௵ பெப்ரவரி ௴ 15உக்குப் பிறகு எந்தப் பணத்தையும் கொடுத்துவைக்கக்கூடாது ; ஆனால், மேலேகண்ட தேதிக்கு முன்னே பணம் கொடுத்து வைக்கப்பட்டிருக்கும் விஷயங்களுக்கு இந்த விலக்கு நிபந்தனையில் கண்டதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

(bb) * இந்தியா நூற்றுக்கு மூன்றரை வட்டி ஸ்டாக்கின்பேரில், அல்லது இந்தியா நூற்றுக்கு மூன்று வட்டி ஸ்டாக்கின்பேரில், அல்லது இந்தியா நூற்றுக்கு இரண்டரை வட்டி ஸ்டாக்கினபேரில், அல்லது இதற்குப்பிறகு எப்போதாகிலும் பார்லிமென்ட் சபையாருடைய ஆக்டினால் ஏற்பட்ட அதிகாரத்தின்படி ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரியவர்களால் பிறப்பிக்கப்பட்டு இந்தியாரெவினியுவின்மேல் விதிக்கப்பட்ட வேறே யாதொரு காபிடல் (மூலதன) ஸ்டாக்கின்பேரில் ;

---

* இந்த இரண்டு பாராக்களும் 1916-ம் ௵த்து 1-வது ஆக்ட்டால் சேர்க்கப்பட்டது.

(c) ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்ட்டேட்டு செக்ரிட்டெரியவர்களாலாவது இந்தியாகவர்ன்மெண்டாராலாவது வட்டிஉறுதிசெய்யப்பட்டிருப்பதாய், ரெயில்வே சம்பெனி முதலிய கம்பெனிகளைச்சேர்ந்த ஸ்ட்டாக்கு அல்லது டிபென்சூர்கள், அல்லது அந்தக் கம்பெனிகளிலுள்ள (share) பங்குகள்பேரிலாவது, ஆலோசனை சபையிலுள்ள ஸ்டேட் செக்ரிடெரியவர்களால் வட்டி உறுதிசெய்யப்பட்டிருப்பதாய் பம்பாய் சென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்க் லிமிடெட், என்னும் பாங்கியைச்சேர்ந்த டிபென்சூர்கள்பேரிலாவது,

(d) * யாதொரு இராஜதானிப்பட்டணத்திலாவது ரங்கூன் பட்டணத்திலாவது யாதொரு மியுனிஸிபல் சங்கம் போர்ட் (ரேவு) ட்ரஸ்ட் - அல்லது நகரவிருத்திக்காகஏற்பட்ட ட்ரஸ்ட் ஆகிய இவைகளாலாகிலும் இவைகளுக்காகவாகிலும், கராச்சி ரேவின் ட்ரஸ்டிகளாலாகிலும் அவர்களுக்காக வாகிலும், ப்ரிடிஷ் இந்தியாவிலே ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு சட்டநிரூபண சபையாருடைய எந்த ஆர்டினலாயினும் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி பிறப்பிக்கப்பட்ட டிபென்சூர்கள்அல்லது பணத்துக்கு ஈடாயிருக்கும் வேறே பத்திரங்களின்மேல் ;

(e) பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள அசையாப்பொருளின் முதல் கொதுவையின் பேரில்: ஆனால் அந்தப்பொருள் குறித்த சிலவருஷகாலத்திற்கு வாடகைக்கு விடப்பட்ட பொருளாயிருக்கக்கூடாது; மேலும் அந்தப்பொருளின் கிரயம் கொதுவைப் பணத்திற்கு மூன்றிலொரு பங்குதிகமாயும், அது கட்டடங்களுள்ளதாயிருந்தால், பாதி அதிகமாயும் இருக்கவேணும் ; அல்லது

(f) திரஸ்ட்டு ஆதரவினாலாவது, இது விஷயத்தில் லஹகோர்ட்டார் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கும்படியான யாதொரு விதியினாலாவது வெளிப்படையாய் அதிகாரங்கொடுக்கப்பட்டிருக்கும் வேறே யாதொரு ஈட்டின்பேரில்.

ஆனால் எவனாவது கந்திராக்ட்டுசெய்ய யோக்கியதை அடைந்திருந்து, திரஸ்ட்டு சொத்து வருமானத்தை தன்னுயுசுவரையிலாவது பின்னும் விசேஷித்த யாதொரு ஆட்சிநிமித்தமாயாவது பெற்றுக்கொள்ள தற்காலத்தில் அர்ஹனாயிருக்கிறபட்சத்தில், (d), (e), (f),

---

* இந்த உட்பிரிவு 1908-ம்ஹுத்து 3-வது ஆக்ட்டால் திருத்தப்பட்டது.

உட்பிரிவுகளில் சொல்லப்பட்டாகிலும் குறிக்கப்பட்டாகிலுமிருக்கிற யாதொரு ஈட்டின்பேரில், அவனுடைய அநுமதியை எழுதி பெற்றுக் கொள்ளாமல் பணங்கொடுத்துவைக்கக்கூடாது.

பணங்கொடுத்து மீட்டுக்கொள்ளக் கூடிய ஸ்டாக்கை ப்ரிமியம் (மேல்வாரி) கொடுத்துவாங்குவதற்கு அதிகாரம்.

***20 A.** (1) 20-வது பிரிவில் சொல்லப்பட்ட அல்லது குறிப்பிடப்பட்ட ஈடுகளில் எதுவாகிலும் பணம் கொடுத்து மீட்டுக்கொள்ளக்கூடியதாயிருந்தும், விலையானது மீட்புமதிப்பைக்காட்டிலும் அதிகமாயிருந்தும் பாதகமில்லாமலே, அப்படிப்பட்ட ஈட்டின்பேரில் யாதொரு ட்ரஸ்டியானவர் பணத்தைக் கொடுத்துவைக்கலாம்:

ஆனால், யாதொரு ட்ரஸ்டியானவர்-கிரயத்துக்கு வாங்கப்பட்ட தேதிமுதல் பதினைந்து வருஷகாலத்துக்குள்ளாக அசல்விலையாகிலும் நிஷ்கரிஷை செய்யப்பட்ட வேறே யாதொரு வீதப்படியாகிலும் கொடுத்து மீட்டுக்கொள்ளப்படுவதற்குட்பட்டதாய், 20-வது பிரிவைச்சேர்ந்த (c) (d) அடையாளமிட்ட பகுதிகளிற் கண்ட அல்லது குறிப்பிடப்பட்ட எந்த ஈட்டையாவது அதனுடைய மீட்புமதிப்புக்கு மேற்பட்ட ஒரு விலைகொடுத்து வாங்கலாகாது; மேலும், யாதொரு ட்ரஸ்டியானவர்-அசல் விலையாகிலும் நிஷ்கரிஷை செய்யப்பட்ட வேறே யாதொரு வீதப்படியாகிலும் கொடுத்து மீட்டுக்கொள்ளப்படுவதற்குட்பட்டதாய், மேற்படி பகுதிகளிற் கண்ட அல்லது குறிப்பிடப்பட்ட எந்த ஈட்டையாவது அசல் விலையைக்காட்டிலும் அல்லது நிஷ்கரிஷை செய்யப்பட்ட அப்படிப்பட்ட வேறே வீதத்தைக்காட்டிலும் நூற்றுக்குப் பதினைந்து வீதத்துக்கு அதிகமாயிருக்கும் விலைகொடுத்து வாங்கலாகாது.

(2) இந்தப் பிரிவின்படி கிரயத்துக்கு வாங்கப்பட்டிருக்கும் மீட்டுக்கொள்ளக்கூடிய யாதொரு ஸ்டாக்கையாவது நிதியையாவது பத்திரத்தையாவது, அவை மீட்டுக்கொள்ளப்படுகிறவரையிலே, ஒரு ட்ரஸ்டியானவர் தம்மிடத்தில் வைத்துக்கொண்டிருக்கலாம்.

1871-ஆம் வருஷத்து 26 வது ஆக்ட்டின்படி கவரன்மெண்

21. இருபதாவது பிரிவிலுள்ளதெதுவும், இந்த ஆக்ட்டு வழங்கத்தொடங்குவதற்கு முன்னமே ஈட்டின்பேரில் கொடுத்து வைக்கப்பட்டதுகளுக்குச் சம்பந்தப்படவுமாட்டாது, 1871-ஆம் வருஷத்து நிலவிருத்தி ஆக்

* இந்தப்பிரிவு 1915-ம் வருஷத்து 1-வது ஆக்ட்டால் சேர்க்கப்பட்டது.

டாரிடத்தில் அடைமானம் வைக்கப்பட்ட நிலத்தின் கொதுவை.

கவரன்மெண்டு சேவிங்ஸு பாங்கியில்கட்டி வைப்பது.

ட்டின்படி முன்பணஞ் செலுத்தினதற்கு ஈடாக முன்னதாகவே அடகு வைக்கப்பட்டிருக்கும் அசையாப்பொருளை கொதுவை வைத்துக்கொண்டு பணஞ்செலுத்துவதையாவது, திரஸ்ட்டு பணம் மூவாயிரம் ரூபாய்க்கு மேற்படாத பட்சத்தில் அதை யாதொரு கவரன்மெண்டு சேவிங்ஸு பாங்கியில் கட்டி வைப்பதையாவது தடுப்பதாக எண்ணப்படவுமாட்டாது.

குறித்த காலத்திற்குள் விற்கும்படி உத்தரவு செய்யப்பட்ட திரஸ்ட்டியானவன் விற்பது.

22. குறித்த ஓர் காலத்திற்குள் விற்கும்படி திரஸ்ட்டிக்கு உத்தரவு செய்யப்பட்டிருந்து அவன் (அப்படி விற்காமல்) அந்தக்காலத்தை நீடிக்கச் செய்தால், அப்படிகாலத்தை நீடிக்கச் செய்யவேணுமென்று அசல் விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சீவில்கோர்ட்டாரால் அதிகாரங் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, தானும் பிரயோசனமடைகிறவனுமாகிய இவர்களுக்குள், அப்படி நீடிக்கச் செய்ததினால் பின்னேனுக்கு பாதகமுண்டாகவில்லையென்று ருஜுப்படுத்தும் கடமை திரஸ்ட்டியினுடையதாகும்,

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் - பி - என்பவனுக்கு உயில்மூலமாய் சொத்து ஏற்படுத்தி வைத்து, கூடிய துரிதத்தில் ஐந்துவருஷத்திற்குள்ளாக அதைவிற்று, விற்றுவந்த பணத்தை, சி - என்பவனுடைய பிரயோசனத்திற்காக செலவுசெய்யும்படி அவனுக்கு உத்தரவுசெய்கிறான். நியாயமாய் யுக்தாயுக்தம் பார்த்துச் செய்கையில் பி - என்பவன் ஆறுவருஷத்திற்கு விற்பனையை நிறுத்திவைக்கிறான். அதினாலே விற்பனையானது ஊர்ஜிதமற்றதாகமாட்டாது; ஆனால் அப்படி நிறுத்திவைத்ததினாலே சி — என்பவன் தனக்கு கெடுதி உண்டாச்சுதென்று சொல்லி, பிரதிபலன்பெற்றுக்கொள்ள — பி — என்பவன்பேரில் வியாச்சியந் தொடருகிறான். அப்படிப்பட்ட வியாச்சியத்திலே — சி — என்பவனுக்கு கெடுதிநேரிடவில்லையென்று ருஜுப்படுத்தும் கடமை பி — என்பவனுடையதாகும்.

நம்பிக்கைதுரோ

23. திரஸ்ட்டியானவன் திரஸ்ட்டை மீறுவானாகில், பிரயோசனமடைகிறவன் அப்படி மீறும்படி மோசத்தினால் திரஸ்ட்டியை தூண்டியாகிலும், பிரயோசனமடை

சத்துக்காக உள்ளாயிருப்பது.

கிறவன் சந்திராக்ட்டுசெய்யத்தக்கவனாயிருந்து, நிர்ப்பந்தத்திற்காவது அக்கிரமமான அதிகாரம்செலுத்தப்படுவதற்காவது ஆளாகாமல், அந்த விஷயத்தைப்பற்றின சங்கதிகளையும் திரஸ்ட்டிக்கு விரோதமாய் தனக்கிருக்கும் சுதந்தரங்களையும் பூர்த்தியாய் அறிந்து, தானே அப்படி மீறினதில் கூடியாகிலும், பின்னிட்டு அதற்குச் சம்மதித்தாகிலும் இருந்தாலொழிய, திரஸ்ட்டியானவன் அப்படி மீறினதினால் திரஸ்ட்டுசொத்துக்காவது பிரயோசனமடைகிறவனுக்காவது நேரிட்ட நஷ்டத்தை கட்டிக்கொடுப்பதற்கு உள்ளாயிருக்கிறான்.

திரஸ்ட்டை மீறுகிற யாதொரு திரஸ்ட்டியானவன் அடியில்வரும் விஷயங்களில் தவிர வட்டி செலுத்துவதற்குள்ளாகமாட்டான்:—

(a) வாஸ்தவத்தில் அவன் வட்டி பெற்றுக்கொண்டிருக்கிற விஷயத்திலும்:

(b) அப்படி மீறினது - பிரயோசனமடைகிறவனுக்கு திரஸ்ட்டு பணத்தை செலுத்துவதில் நியாயமில்லாமல் ஆலசியம் செய்ததாயிருக்கிற விஷயத்திலும் :

(c) திரஸ்ட்டியானவன் வட்டி வரப்பற்றவேண்டியவனாயிருந்து அப்படி வரப்பற்றாத விஷயத்திலும்:

(d) அவன் வட்டி வரப்பற்றியிருப்பானென்று நியாயமாய் எண்ணக்கூடிய விஷயத்திலும்.

கோர்ட்டார் மற்றப்படி உத்தரவு செய்தாலல்லாமல், அவன் (a) - குறிப்பு விஷயத்தில் வாஸ்தவத்திலே வரப்பற்றின வட்டியை கொடுத்துவிடவும், (b)-(c)-(d)-குறிப்பு விஷயங்களிலே வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஆறுவிழுக்காடு தனிவட்டி செலுத்தவும் உள்ளாயிருக்கிறான்.

(e) அப்படி மீறினது திரஸ்ட்டுபணத்தை ஈட்டின்பேரில் கொடுத்து அதற்குண்டான வட்டியையாவது டிவிடெண்டுகளையாவது சேர்த்துவைப்பதற்கு தவறிப்போனதாயிருக்கிற விஷயத்தில், அவன் (அவ்வாறு மாசத்திற்குக் கூடும் வட்டிக்கு) அதேவீதப்படி தொடர்வட்டி செலுத்துவதற்குள்ளாயிருக்கிறான்.

(i) அப்படி மீறினது திரஸ்ட்டுசொத்தையாவது அதைவிற்று வரும் பணத்தையாவது வியாபாரத்திலாகிலும் தொழிலிலாகிலும் உபயோகித்ததாயிருக்கிற விஷயத்தில், பிரயோசனமடைகிறவனுடைய இஷ்டப்படி, (அவ்வாறுமாசத்திற்குக் கூடும்வட்டிக்கு) அதேவீதப்படி தொடர்வட்டி கொடுப்பதற்காவது, அப்படி உபயோகித்ததினுல்கிடைத்த ஙிகரலாபத்தை கொடுப்பதற்காவது திரஸ்ட்டியானவன் உள்ளாயிருக்கிறுன்.

திருஷ்டாந்தம்.

(a) ஒரு திரஸ்ட்டியானவன் திரஸ்ட்டுசொத்தை வெளியில் நிற்கும்படி அக்கிரமமாய் விட்டுவைக்கிறுன்; அதினுலே அது இழந்துவிடப்படுகிறது. அப்படி இழந்துவிடப்பட்டசொத்தை சரிப்படுத்துவதற்கு அவன் உள்ளாயிருக்கிறுன்; ஆனுல் அதின்பேரில் வட்டிசெலுத்துவதற்கு உள்ளாயிருக்கவில்லை.

(b) வீட்டைவிற்று அந்தப்பணத்தை - சி - என்பவனுக்குச் செலுத்துவதற்காக திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி - எ - என்பவன் - பி - என்பவனுக்கு உயிலில் ஒருவீடு ஏற்படுத்துகிறுன். பி - என்பவன் வெகுகாலவரையில் அந்தவீட்டை விற்காமல் அஜாக்கிரதைசெய்கிறுன்; அதினுலே அந்த வீடு ஜீரணித்து அதின் வூர்வீல குறைந்துபோகிறது. அந்த நஷ்டத்திற்காக - பி - என்பவன் - சி - என்பவனுக்கு உத்தரிக்கவேண்டியவனுகிறுன்.

(c) ஒரு திரஸ்ட்டியானவன் இருபதாவது பிரிவின் பிரகாரம் திரஸ்ட்டு பணத்தை ஈட்டின்பேரில் கொடுத்துவைப்பதிலாவது பிரயோசனமடைகிறவனுக்கு அதைச்செலுத்துவதிலாவது அனுவசியமான ஆலசியஞ் செய்வதினுலே தோஷியாகிறுன் திரஸ்ட்டியானவன் அப்படி ஆலசியஞ்செய்த காலத்திற்கு அதின்பேரில் வட்டிசெலுத்துவதற்குள்ளாயிருக்கிறுன்.

(d) இருபதாவது பிரிவு (a) - (b) - (c) - அல்லது (d) - உட்பிரிவில் சொல்லியிருக்கும் ஈடுகளிலெதின் பேரிலாவது திரஸ்ட்டு பணத்தைக் கொடுத்துவைப்பது திரஸ்ட்டியினுடைய கடமை. அப்படிச் செய்யாமல் அவன் அந்தப்பணத்தை தன்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிறுன். பிரயோசன மடைகிறவனுடைய இஷ்டப்படி, அவன் அசல் தொகையும் வட்டியும் செலுத்துவதற்காவது, எப்போது அப்படி ஈட்டின்பேரில் கொடுத்திருக்கவேணுமோ அப்போது அந்த திரஸ்ட்டு பணத்தைக்கொண்டு என்ன ஈடுகள் (பத்திரங்கள்) அவன் வாங்கலாமோ அதுகளின் தொகையையும் இடையில் அதற்காக வரும் டிவிடெண்டுகளையும் வட்டியையும் செலுத்துவதற்காவது உள்ளாயிருக்கிறுன்.

(e) அப்படிப்பட்ட ஈடுகளில் எதின்பேரிலாவது அல்லது அசையாப் பொருளை கொதுவைவைத்துக்கொண்டாவது திரஸ்ட்டு பணத்தை கொடுக்கவே

னுமென்று திரஸ்ட்டு ஆதாரவினால் திரஸ்ட்டிக்கு உத்தரவுசெய்யப்பட்டிருக்கிறது. திரஸ்ட்டியானவன் இவ்விருகாரியங்களில் எதையுஞ் செய்யவில்லை. அசல் தொகையும் வட்டியும் செலுத்துவதற்கு அவன் உள்ளாயிருக்கிறான்.

(f) அப்படிப்பட்ட ஈடுகளில் எதின்பேரிலாவது திரஸ்ட்டுபணத்தைக் கொடுத்து அதற்காக வரும் டிவிடெண்டுகளைச் சேர்த்துவைக்கும்படி திரஸ்ட்டு ஆதாரவினால் திரஸ்ட்டிக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. திரஸ்ட்டியானவன் அந்தக்கட்டளையை கவனிக்காமற்போகிறான். பிரயோசனமடைகிறவனுடைய இஷ்டப்படி, அவன் அசல்தொகையும் தொடர்வட்டியும் செலுத்துவதற்காவது, எப்போது அப்படி ஈட்டின்பேரில் கொடுத்திருக்கவேணுமோ அப்போது அந்த திரஸ்ட்டு பணத்தைக்கொண்டு என்ன ஈடுகள் (பத்திரங்கள்) அவன் வாங்கலாமோ அதுகளின் தொகையையும், இடையில் வரும் டிவிடெண்டுகளை கிரமமாய் ஈட்டின்பேரில் கொடுத்துவைப்பதினாலே சேரும்படியான தொகையையும் செலுத் வதற்காவது உள்ளாயிருக்கிறான்

(g) திரஸ்ட்டுசொத்தானது இருபதாவது பிரிவு (a) - (b) - (c) அல்லது (d) - உட்பிரிவில் கண்டிருக்கும் ஈடுகளில் யாதொன்றின்பேரில் கொடுத்து வைக்கப்பட்டிருக்கிறது திரஸ்ட்டு ஆதாரவிலுள்ள திட்டங்களினால் அதிகாரங் கொடுக்கப்பட்டிராத ஏதோ ஓர் காரியத்திற்கு திரஸ்ட்டியானவன் அந்த ஈட்டை விற்கிறான். பிரயோசனமடைகிறவனுடைய இஷ்டப்படி அந்த ஈட்டை இடையில் அதற்குண்டான டிவிடெண்டுகளும் வட்டியும் சகிதமாய் மறுபடி (வாங்கி) வைப்பதற்காவது, விற்பனை வரும்படியை அதற்குண்டான வட்டி சகிதமாய் செலுத்துவதற்காவது அவன் உள்ளாயிருக்கிறான்.

(h) திரஸ்ட்டுசொத்து நிலமாக இருக்கிறது. திரஸ்ட்டைக்குறித்து நோட்டீசில்லாமல் ஐவேஜுக்காக கொள்பவனுக்கு திரஸ்ட்டியானவன் அந்த நிலத்தை விற்கிறான். பிரயோசனமடைகிறவனுடைய இஷ்டப்படி, அவ்வித திரஸ்ட்டின்பேரில் பொருத்திவைப்பதற்கு சமக்கிரயமுள்ள வேறே நிலத்தை வாங்குவதற்காவது, அந்த விற்பனை வரும்படியை வட்டியுடன் செலுத்துவதற்காவது திரஸ்ட்டியானவன் உள்ளாயிருக்கிறான்.

திரஸ்ட்டியானவன் நஷ்டத்திற்காக லாபத்தைச் சரிக்கட்டவொட்டப்படமாட்டான்.

24. திரஸ்ட்டு சொத்தில் ஒரு பாகத்தைக்குறித்து நம்பிக்கைத்துரோகஞ் செய்வதினால் நேரிட்ட நஷ்டத்திற்காக யாதொரு திரஸ்ட்டியானவன் உள்ளாயிருக்கிற பட்சத்தில், அவன் - வேறே பிரத்தியேகமான நம்பிக்கைத் துரோகத்தினால் திரஸ்ட்டுசொத்தில் வேறொரு பாகத்திற்குக் கிடைத்தலாபத்தை தான் சரிச்சொல்லவேண்டிய நஷ்டத்திற்கு ஐவேஜுபடுத்திக்கொள்ளச் சொல்லக்கூடாது.

முன்னிருந்தவன் தவறிப்போனதற்கு பின்வருபவன் உள்ளாயிருப்பதில்லை.

25. ஒரு திரஸ்ட்டிக்குப்பின் வேறொரு திரஸ்ட்டியானவன் வந்தால், அவன் தனக்குமுன்னிருந்தவனுடைய செய்கைகளுக்காகவாவது தவறுதல்களுக்காகவாவது அப்படிப்பட்டவனுக உள்ளாகமாட்டான்.

திரஸ்ட்டியானவன் தன்கூட்டு திரஸ்ட்டியினுடைய தவறுதலுக்காக உள்ளாயிருப்பதில்லை.

26. 13-வது 15-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு திரஸ்ட்டியானவன் தன்னுடைய உடன் திரஸ்ட்டியினுல் செய்யப்பட்ட நம்பிக்கைத்துரோகத்திற்காக அந்த திரஸ்ட்டி ஹோதாவிலே உள்ளாகமாட்டன்

ஆனுல் திரஸ்ட்டு ஆதாவில் மாறுக வெளிப்படையாய் யாதொன்றும் சொல்லாதிருக்கிற பட்சத்தில் ஒரு திரஸ்ட்டியானவன்—

(a) திரஸ்ட்டுசொத்து கிரமமாய் உபயோகிக்கப்படுவதை கவனிக்காமல் அதைத்தன் உடன் திரஸ்ட்டியினுடைய வசத்தில் ஒப்பித்துவிடுகிற விஷயத்திலும்,

(b) தன்னுடைய உடன் திரஸ்ட்டியை திரஸ்ட்டுசொத்தைப் பெற்றுக்கொள்ள வொட்டி, அந்த உடன் திரஸ்ட்டியானவன் அதைக் கொண்டு என்னசெய்கிருனே அதைக்குறித்து தான் கிரமமாய் விசாரணைசெய்யத் தவறிப்போகிற விஷயத்தில், அலலது அந்த விஷயத்தைப் பற்றின சங்கதிகளினுல் நியாயமாய் எவ்வளவு காலம் வைத்திருக்க வேணுமோ அதைவிட அதிககாலத்திற்கு அவனை அதை வைத்துக் கொண்டிருக்க ஒட்டுகிற விஷத்திலும்.

(c) தன்னுடைய உடன் திரஸ்ட்டியானவன் நம்பிக்கைத்துரோகம் செய்திருக்கிருனென்ருவது செய்ய உத்தேசித்திருக்கிருனென்ருவது தான் தெரிந்துகொண்டு அதை சிரத்தையாய் மறைக்கிற விஷயத்தில், அல்லது பிரயோசன மடைகிறவனுடைய பாத்தியதையை காப்பதற்கு நியாயமான காலத்திற்குள் தகுந்தவகைகள் செய்யாதிருக்கிற விஷயத்திலும்,

அந்தத் திரஸ்ட்டியானவன் அப்படி உள்ளாயிருக்கிருன்.

ஒழுங்கு நிமித்தம் சேர்ந்து ரசீது எழுதிக்கொடுப்பது.

உடன் திரஸ்ட்டியாகிய ஒருவன் திரஸ்ட்டுசொத்துக்காக சேர்ந்து ரசீது எழுதி கையெழுத்துப் போட்டுக்கொடுத்திருந்து, அதைத் தான் வரப்பற்றவில்லையென்று ருஜுசெய்தால், அவன் அப்படி கையெழுத்து செய்திருப்பதினுல் மாத்திரம், தன்னுடைய உடன் திரஸ்டியானவன் அந்த சொத்தைப் போக்கடித்துவிட்டதற்காகவாவது துர்வினியோகப் படுத்தினதற்காகவாவது உத்தரவாதியாகமாட்டான்

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் பி - சி - என்பவர்களுக்கு உயில்மூலமாய் ஒருசொத்து ஏற்படுத்துவதமல்லாமல் அதைவிற்று அதினுல்கிடைக்கும் பணத்தை - டி - என்பவனுடைய பிரயோசனத்திற்காக ஈட்டின்பேரில் கொடுத்துவைக்கவேணுமென்றும் அவர்களுக்கு உத்தரவுசெய்கிறன். அப்பிரகாரமே - பி - சி - என்பவர்கள் அந்தசொத்தை விற்கிருர்கள். கிரயப்பணத்தை - பி - என்பவன் வாங்கிக்கொண்டு தன்வசத்திலேயே வைத்துக்கொள்ளுகிருன். அந்த விஷயத்தைப்பற்றி - சி - என்பவன் இரண்டுவருஷகாலம் சும்மாயிருந்து பிறகு அப்படி ஈட்டின்பேரில் பணம்கொடுத்துவைக்கச்சொல்லி – பி - என்பவனைக்கேட்கிருன். பி - என்பவன் அப்படிச்செய்ய அசமர்த்தனதையுள்ளவனுயிருப்பதுமல்லாமல் கடனிறுக்கச் சக்தியற்றவனுயும் ஆகிருன்; அதினுலே அந்தக்கிரயபபணம் இழந்துவிடப்படுகிறது. அந்தத்தொகையைக் கட்டிக்கொடுக்கச்சொல்லி - சி – என்பவனை நிர்ப்பந்திக்கலாம்.

கூட்டு திரஸ்ட்டிகள் தனித்தனி உள்ளாவது.

27. உடன்திரஸ்ட்டிகள் ஒன்ருய்க்கூடி ட்ரஸ்ட்டை மீறிணுலும், அவர்களில் ஒருவன் அஜாக்கிரதையாயிருப்பதினுலே மற்றொருவன் திரஸ்ட்டை மீறுவதற்கு இடங்கொடுத்தாலும், அப்படி மீறினதினுல் நேரிட்ட மொத்த நஷ்டத்திற்காக ஒவ்வொருவனும் பிரயோசனகாரிக்கு உள்ளாயிருக்கிருன்.

கூட்டு திரஸ்ட்டிகளுள் ஒருவருக்கொருவர் கொடுத்து விடுவது.

ஆனுல் திரஸ்ட்டிகளுக் குள்ளேவென்ருல், ஒருவன் மற்றொருவனைப்போல அவ்வளவு நேரஸ்தனுயிராமல் அந்த நஷ்டத்தைக் கட்டிக்கொடுத்திருக்கிற பட்சத்தில், முன் சொன்னவன் பின் சொன்னவனையாவது, ஆஸ்தி பெற்றுக்கொண்டிருக்கிற பட்டில் அவனுடைய சட்டசம்மதமான பிரதிநிதியையாவது

அந்த நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கலாம்; திரஸ்ட்டிகள் சகலரும் சமமாய் குற்றஞ்செய்திருப்பார்களாகில், திரஸ்ட்டிகளில் யார் அந்த நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கவேண்டியிருந்ததோ அப்படிப்பட்ட ஒருவன் அல்லது பலர் மற்றவர்களை பங்காசாரப்படி பணஞ்செலுத்தச்சொல்லி நிர்ப்பந்திக்கலாம்.

பங்காசாரப்படி பணம்செலுத்த நிர்ப்பந்திப்பதற்காக விபாச்சியந்தொடருவதற்கு, மோசஞ்செய்திருக்கிற யாதொரு திரஸ்ட்டிக்கு இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் அதிகாரமுண்டாவதாக எண்ணக்கூடாது.

பிரயோசன மடைகிறவன் திரான்சுபர்செய்ததாக நோட்டீசு பெருமல் திரஸ்ட்டியான வன் பணம் செலுத்தி ஞல் அவன் உள்ளாயிருப்பதில்லை.

28. பிரயோஜனமடைகிற யாவனொருவனுடைய பாத்தியதை வேறொருவனுக்குச் சங்கிரமித்திருந்து, அப்படி சங்கிரமித்திருப்பதைக் குறித்து நோட்டீசுபெருமல் திரஸ்ட்டியானவன் - அப்படி சங்கிரமித்திராதபட்சத்தில் திரஸ்ட்டுசொத்து யாருக்குக் கிடைக்கவேண்டியதோ அப்படிப்பட்டவனுக்கு அதைச் செலுத்தியாகிலும் ஒப்பித்தாகிலுமிருப்பானுகில், அப்படி செலுத்தப்பட்டாவது ஒப்பிக்கப்பட்டாவதிருக்கிற சொத்திற்காக திரஸ்ட்டியானவன் உள்ளாகமாட்டான்.

பிரயோசனமடைகிறவனுடைய பாத்தியதை கவர்ன்மெண்டாருக்குப் பறிமுதலாய் விட்டால் திரஸ்ட்டியான வன் உள்ளாயிருப்பது.

29. பிரயோசனமடைகிறவனுடைய பாத்தியதையானது கவர்ன்மெண்டாருக்குப் பறிமுதலாய் விட்டாலும் கவர்ன்மெண்டாருக்குச் சித்திக்கும்படி சட்டப்பிரகாரம் தீர்ப்பளிக்கப்பட்டாலும், இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்கிற விதமாய் அவர்கள் தீர்மானிக்கிற நபருக்கு பிரயோசனகரமாக அப்படிப்பட்ட பாத்தியதை அளவுக்கு திரஸ்ட்டுசொத்தை வைத்துக்கொண்டிருப்பதற்கு திரஸ்ட்டியானவன் கடமைப்பட்டிருக்கிருன்.

திரஸ்ட்டிகளுக்கு விமோசனம்.

30. திரஸ்ட்டு ஆதாரத்திலும் 23 - வது 26 - வது பிரிவுகளிலும் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு, திரஸ்ட்டிகள் தாங்கள் வாஸ்தவத்திலே தனித்தனி பெற்றுக்கொள்ளுகிற பணங்களுக்காகவும்

ஸ்ட்டாக்குகளுக்காகவும் நிதிகளுக்காகவும் (பத்திரங்கள்) ஈடுகளுக்காகவும் மாத்திரம் தனித்தனி உத்தரவாதிகளாவார்களேயல்லாமல், அவர்களில் ஒருவன் மற்றவனுக்காகவாகிலும், யார்வசத்தில் யாதொரு திரஸ்ட்டுசொத்து கொடுத்துவைக்கப்பட்டிருக்கலாமோ அப்படிப்பட்ட யாதொரு சாவுகார்-தரகிரி-முதலானவனுக்காகவாகிலும், ஸ்ட்டாக்குகள் - நிதிகள் - அல்லது (பத்திரங்கள்) ஈடுகள் போதாமையாயிருப்பதற்காகவாகிலும் குறைவாயிருப்பதற்காகவாகிலும், மற்றப்படி தனிச்சையாய் நேரிட்டநஷ்டத்திற்காகவாகிலும் உத்தரவாதிகளாகமாட்டார்கள்.

4-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டிகளுடைய சுதந்திரங்களையும் அதிகாரங்களையும் குறித்து.

ஹுக்கு சாசனங்களுக்குச் சுதந்திரம்.

31. திரஸ்டு ஆதாரவையும் திரஸ்ட்டுசொத்துக்கே மாத்திரம் சம்பந்தப்படுவதாகிய ஹுக்கு சாசனங்களேதாவதிருந்தால் அப்படிப்பட்ட எல்லாசாசனங்களையும் திரஸ்ட்டியானவன் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்க பாத்தியதை யுடையவனுயிருக்கிறுன்.

செய்தசெலவுக்காக பணம் எடுத்துக்கொள்ளச் சுதந்திரம்.

32. திரஸ்ட்டை நிறைவேற்றுவதற்காகவாவது நிறைவேற்றுவதைப்பற்றியாவது, திரஸ்ட்டுசொத்தை வரப்பற்றுவது - சாப்பது - இவற்றிற்காகவாவது இவற்றைப்பற்றியாவது. திரஸ்ட்டுசொத்தின் பிரயோசனத்திற்காகவாவது பிரயோசன நிமித்தமாயாவது, பிரயோசனமடைகிறவனைக் காப்பாற்றுவது அல்லது ஆதரிப்பதற்காகவாவது இதினிமித்தமாயாவது கிரமமாய் நேரிட்ட எல்லாசெலவுகளுக்காகவும், ஒவ்வொரு திரஸ்ட்டியும் திரட்டுசொத்திலிருந்து பணமெடுத்துக்கொள்ளலாம், பணஞ் செலுத்தலாம் அல்லது செலவிடலாம்.

அப்படிப்பட்ட செலவுகளுக்காக அவன் தன்னுடைய சொந்த பணத்திலிருந்து செலவுசெய்தால், அப்படிப்பட்ட செலவுகளுக்காகவும் அதுகளின் பேரில் வட்டிக்காகவும் அவன் திரஸ்ட்டுசொத்தின் பேரில் பிரதம பொறுப்புடையவனுயிருக்கிறுன்; ஆனல் (அசல் விசா

ரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சிவில் கோர்ட்டாருடைய அனுமதியைப்பெற்றுக்கொண்டு அந்தசெலவுகள் செய்யப்பட்டிருந்தாலொழிய) அப்படிப்பட்ட செலவுகளும் வட்டியும் முன்னதாய்ச் செலுத்தப்படாமல் அந்த திரஸ்ட்டுசொத்தைக்குறித்து யாதொருவகை செய்வதை தடுப்பதினால் மாத்திரம் அப்படிப்பட்ட பொறுப்பை அமுலுக்குக் கொண்டுவரவேண்டியது.

திரஸ்ட்டுசொத்து இல்லாவிட்டாலும் போதாமையாயிருந்தாலும், எவன்பட்சத்தில் திரஸ்ட்டியானவன் பிரவர்த்தித்தும் எவனுடையவெளிப்படையான அல்லது குறிப்பான வேண்டுகோளின்பேரில் அவன் பணம் செலுத்தியுமிருக்கிறானோ அப்படிப்பட்டவனாகிய பிரயோசனகாரியிடத்திலிருந்து நேராய் திரஸ்ட்டியானவன் அப்படிப்பட்ட செலவுதொகையை வரப்பற்றுவதற்கு அர்ஹனாயிருக்கிறான்.

யாதொரு திரஸ்ட்டியானவன் பிரயோசனமடைகிறவனுக்கு பிசகினாலே அதிகமாய்ப் பணஞ்செலுத்திவிட்டால், அந்த அதிகத்தை பிரயோசன மடைகிறவனுடைய பாத்தியதையிலிருந்து (அதாவது அவனுக்குச் சேர வேண்டியதிலிருந்து) பிடித்து திரஸ்ட்டு சொத்தோடு அவன் சேர்த்துவிடலாம். அப்படிப்பட்ட பாத்தியதை (அதாவது பிரயோசனகாரிக்குச் சேரவேண்டியது) எவ்வளவேனும் இராவிட்டாலும் அல்லது போதாமையாயிருந்தாலும், அப்படி அதிகமாய்ச் செலுத்தின தொகையை திரஸ்ட்டியானவன் பிரயோசனகாரியிடத்திலிருந்து நேராய் வரப்பற்றுவதற்கு அர்ஹனாயிருக்கிறான்.

பிசகினாலே ஜாஸ்தியாய் செலுத்திவிட்டால் அதை வரப்பற்ற சுதந்தரம்.

33. திரஸ்ட்டை மீறினதினாலே பிரயோசனமடைந்தவனாய் திரஸ்டியாயிராத ஒருவன் அப்படி மீறினதினாலே தான் வாஸ்தவத்தில் எவ்வளவு தொகை வரப்பற்றினானோ அவ்வளவுக்கு திரஸ்ட்டிக்கு சரிச்சொல்லவேண்டியது; அப்படிப்பட்டவன் பிரயோசனகாரியா யிருக்கிறபட்சத்தில் திரஸ்ட்டியானவன் அந்தத்தொகைக்கு அவனுடைய பாத்தியதையின் பேரில் பொறுப்புடையவனாயிருக்கிறான்.

நம்பிக்கைத்துரோகத்தினால் லாபமடைந்தவனிடத்திலிருந்து செலுத்தப்பெறுவதற்குச் சுதந்திரம்.

அப்படி திரஸ்ட்டை மீறுவதில் திரஸ்ட்டியானவன் மோசஞ் செய்திருப்பானாகில், சரிச்சொல்லப்பெறுவதற்கு அவனுக்கு பாத்தியதையுண்டாவதாக இந்தப்பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் எண்ணக்கூடாது.

திரஸ்ட்டுசொத்தை நிர்வாகஞ்செய்வதில் கோர்ட்டாருடைய அபிப்பிராயத்துக்காக மனுவுசெய்துகொள்ள சுதந்தரம்.

34. விவரங்கள் அடங்கினதாகவாவது கடினமுள்ளதாகவாவது முக்கியமானதாகவாவதிருந்து சுருக்கவகையாய் விசாரித்து முடிவுசெய்வதற்குத் தகுதியல்லவென்று அசல் விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சிவில்கோர்ட்டார் எண்ணுகிற கேள்விகள் நீங்கலாக, திரஸ்ட்டுசொத்தை நிர்வாகம் அல்லது பரிபாலனஞ் செய்வதைக்குறித்து தற்காலத்தில் ஏற்படும் கேள்விகளின்பேரில் அபிப்பிராயமாவது யோசனையாவது உத்தரவாவது கொடுக்கும்படி, யாதொரு திரஸ்ட்டியானவன் வியாச்சியத்தொடராமலே, ஷை கோர்ட்டாருக்கு விண்ணப்பமூலமாப் மனுவுசெய்துகொள்ளலாம்.

அந்தமனுவில் சம்பந்தப்பட்டவர்களில் யாரை கோர்ட்டார் தகுதியாக எண்ணுகிறார்களோ அப்படிப்பட்டவர்களுக்கு அந்த விண்ணப்பதிற்கு நகலைச் சேர்ப்பிக்கவேண்டியது; மேலும் அப்படிப்பட்டவர்கள் அதைக்குறித்து விசாரணைபாகும் காலத்தில் வந்திருக்கலாம்.

திரஸ்ட்டியானவன் அப்படிப்பட்ட விண்ணப்பத்திலே சங்கதிகளை நல்ல எண்ணத்தோடு கண்டெழுதி, கோர்ட்டாரால் கொடுக்கப்படும் அபிப்பிராயத்தின்படியாவது யோசனையின்படியாவது உத்தரவின்படியாவது நடந்துகொண்டிருப்பானாகில், அவன் - தான் உத்தரவாதஞ் செய்யவேண்டியதற்குச் சம்பந்தப்படுகிறமட்டில், அந்த விண்ணப்பத்தில் காட்டியிருக்கும் விஷயத்திலே அப்படிப்பட்ட திரஸ்ட்டிஹோதாவில் தன்கடமையை நிறைவேற்றியிருப்பதாக எண்ணப்படுவான்.

இந்தப்பிரிவின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு மனுவிற்கும் பிடிக்கிறசெலவை அது யாருக்குச்செய்துகொள்ளப்படுகிறதோ அந்தக் கோர்ட்டார் தங்கள் யுக்தப்படி தீர்மானிப்பார்கள்.

கணக்கு பைசல் செய்யப்படுவதற்குச் சுதந்தரம்.

35. திரஸ்ட்டி ஹோதாவிலே திரஸ்ட்டியினுடைய கடமைகள் பூர்த்தியாய் நிறைவேற்றப்பட்டபின்பு, அவன் - திரஸ்ட்டு சொத்தை தான் பரிபாலித்ததைப்பற்றின கணக்குகள் பரிசோதித்து பைசல் செய்யப்படுவதற்கும், திரஸ்ட்டின்படி பிரயோசனகாரிக்கு பாக்கி ஒன்றுமிராதபட்சத்தில், அப்படி பாக்கியில்லையென்று சீட்டெழுதி பெற்றுக்கொள்வதற்கும் அர்ஹனாயிருக்கிறான்.

திரஸ்ட்டியினுடைய பொதுவான அதிகாரம்.

36. இந்த ஆக்ட்டினாலும் திரஸ்ட்டு ஆதரவினாலும் வெளிப்படையாய்க் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைச்செலுத்துவதோடுங்கூட, அப்படிப்பட்ட ஆதரவில் நிர்ப்பந்தங்கள் ஏதாவது கண்டிருந்தால் அதுகளுக்கும் 17-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, யாதொரு திரஸ்ட்டியானவன் - திரஸ்ட்டு சொத்தை வரப்பற்றுவது - காப்பது அல்லது பிரயோசனமுண்டாகும்படிச் செய்வதற்காகவும், கந்திராக்ட்டு செய்யத்தக்கவனல்லாத யாதொரு பிரயோசனகாரியை காப்பாற்றுவது அல்லது ஆதரிப்பதற்காகவும் நியாயமாகத் தகுதியாயிருக்கும் எல்லாக்காரியங்களையுஞ்செய்யலாம்.

1871-ளுத்திய நிலவிருத்தி ஆக்ட்டில் விவரித்துச்சொல்லியிருக்கிற நிலத்தை வாஸ்தவத்தில் வைத்துக்கொண்டாகிலும் அதில் வருங்குத்தகைத்தொகையையும் லாபத்தையும் வாஸ்தவத்தில்பெற்றுக்கொண்டாகிலுமிருக்கிற ஒவ்வொரு திரஸ்ட்டியும் அந்த ஆக்ட்டிலுள்ள காரியங்களின்பொருட்டு, ஸ்வாதீனமடைந்திருக்கிற பூமிக்குடையவனாக எண்ணப்படுவான்.

அசல் விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சிவில் கோர்ட்டாருடைய உத்தரவின்பேரிலல்லாமல், யாதொரு திரஸ்ட்டியானவன் - வாடகைச்சீட்டு எழுதப்படுகிற தேதிமுதற்கொண்டு 21-வருஷத்திற்கு அதிகமான காலத்திற்காகவும், நியாயமாய் வருஷவாரி வாடகைத்தொகை உயர்ந்தது எவ்வளவு பெற்றுக்கொள்ளக்கூடுமோ அவ்வளவுக்கு ஏற்பாடுசெய்துகொள்ளாமலும் திரஸ்ட்டுசொத்தை வாடகைக்கு விடக்கூடாது.

கூறுபோட்டுவிற்கவும் பயிரங்கமான ஏலத்திலாவது ஒருவரோடு கந்திராக்ட்டு செய்துகொண்டாவது விற்கவும் அதிகாரம்.

37. யாதொரு திரஸ்ட்டுசொத்தை விற்கும்படி திரஸ்ட்டிக்கு அதிகாரங்கொடுக்கப் பட்டால், திரஸ்ட்டு ஆதரவில் வேறேவிதமாய் உத்தரவு செய்யப்பட்டிருந்தாலொழிய, அவன் அதை முன்னிட்ட பொறுப்புகளுக்குட்படுத்தியாவது உட்படுத்தாமலாவது, ஒன்றாய்ச்சேர்த்தாவது கூறுகூறாகவாவது, பயிரங்க ஏலத்திலாவது உள்ளுக்குள் கந்திராக்ட்டு செய்தாவது, ஒரேகாலத்திலாவது வெவ்வேறு காலத்திலாவது விற்கலாம்.

விசேஷ ஷரத்துகளுக்குட்படுத்தி விற்க அதிகாரம்.

வாங்கிக்கொள்ளவும் மறுபடி விற்கவும் அதிகாரம்.

38. அப்படிப்பட்ட யாதொரு விற்பனை பண்ணுகிற திரஸ்ட்டியானவன், விற்பனை ஷரத்துகளிலாவது விற்பனை கந்திராக்ட்டிலாவது ஹக்கைக் குறித்தாகிலும் ஹக்கைப்பற்றின அத்தாட்சியைக்குறித்தாகிலும் மற்றப்படியாகிலும் தனக்கு யுக்தமாகத்தோற்றுகிற நியாயமான திட்டங்களை ஏற்படுத்தலாம்; மேலும் யாதொரு ஏல விற்பனையிலே அந்த சொத்தையாவது அதில் யாதொரு பாகத்தையாவது (ஏலத்தில் விட்டுவிடாமல்) வாங்கிக்கொள்ளுவதுமன்றி, யாதொரு விற்பனை கந்திராக்ட்டையும் ரத்துசெய்யலாம் அல்லது மாற்றலாம், அன்றியும் அப்படி வாங்கிக்கொள்ளப்பட்ட சொத்தையாவது எதின் விஷயத்தில் கந்திராக்ட்டு அப்படி ரத்துசெய்யப்பட்டதோ அந்த சொத்தையாவது மறுபடி விற்பனைசெய்யலாம், அப்படி பண்ணுவதினாலே நேரிடும் யாதொரு நஷ்டத்திற்காக அவன் பிரயோசனகாரிக்கு உத்தரவாதியாகமாட்டான்.

திரஸ்ட்டு சொத்தை விற்பதற்குக் கொடுக்கப்பட்டகாலம்.

திரஸ்ட்டுசொத்தை விற்கும்படியாவது திரஸ்ட்டுபணத்தைக்கொண்டு சொத்துவாங்கும்படியாவது யாதொரு திரஸ்ட்டிக்கு உத்தரவு செய்யப்பட்டிருந்தால், எப்போது அப்படிவிற்கலாமோ அல்லது கிரயத்திற்கு வாங்கலாமோ அதைக்குறித்து அவன் நியாயமான விதமாய் தனக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடிச் செய்யலாம்.

திருஷ்டாந்தம்.

(a) கூடுமானநிவரத்தோடு சொத்தைவிற்று அதினால் வரும்பணத்தை சி - என்பவனுக்குச் செலுத்தும்படி - எ - என்பவன் - பி - என்பவனுக்குக் கட்டளையிட்டு உயில்மூலமாய் அவனுக்கு ஒரு சொத்து ஏற்படுத்துகிறான். இதினாலே அந்தசொத்தை உடனே விற்கவேணுமென்கிற விதாயகமில்லை.

(b) பி - என்பவனுக்கு யுக்தமாகத்தோற்றுகிற காலத்தில் அவனுக்குத் தகுதியாகக்காணுகிறவிதமாய் சொத்தைவிற்று அதினால் கிடைக்கும் பணத்தை - சி - என்பவனுடைய பிரயோசனத்திற்காக உபயோகிக்கும்படி - பி - என்பவனுக்கு கட்டளையிட்டு - எ - என்பவன் அவனுக்கு ஒருசொத்தை உயிலிலேற்படுத்துகிறான். பி - சி - என்பவனுக்குள்ளே அந்த விற்பனையை அளவற்றகாலம் நிறுத்திவைப்பதற்கு - பி - என்பவனுக்கு இதனாலே அதிகாரமுண்டாகமாட்டாது.

ஒப்படைக்க அதிகாரம்.

39. அப்படிப்பட்ட யாதொரு விற்பனையைப் பூர்த்திசெய்யும்பொருட்டு, விற்கப்பட்ட சொத்தை அவசியமானவிதமாய் ஒப்படைக்கவாவது மற்றப்படி யாதொருவகைசெய்யவாவது திரஸ்ட்டிக்கு அதிகாரமுண்டு.

ஈடுகளை மாற்ற அதிகாரம்.

40. யாதொரு திரஸ்ட்டியானவன் தனக்கு யுக்தமாகத்தோற்றினால், யாதொரு ஈட்டின்பேரில் கொடுத்துவைக்கப்பட்ட யாதொரு திரஸ்ட்டு சொத்தை வரப்பற்றிக்கொண்டு, 20 - வது பிரிவில் சொல்லப்பட்டாவது குறிக்கப்பட்டாவதிருக்கிற ஈடுகள் எதின்பேரிலாவது அதை கொடுத்துவைக்கலாம், மேலும் அப்படி ஈட்டின்பேரில் கொடுத்துவைத்ததை அத்தன்மையதான வேறே ஈடுகளின்பேரில் அப்போதைக்கப்போது கொடுத்தும்வைக்கலாம்.

ஆனால் எவனாவது கந்திராக்ட்டுசெய்ய யோக்கியதை அடைந்திருந்து, திரஸ்ட்டு சொத்துவருமானத்தை தன் ஆயுசுவரையிலாவது பின்னும் விசேஷித்த யாதொரு ஆட்சிநிமித்தமாவது பெற்றுக்கொள்ள அப்போது அர்ஹனாயிருக்கிற பட்சத்தில், அவனுடைய அனுமதியை எழுதிப்பெற்றுக்கொள்ளாமல், அப்படி ஒரு ஈட்டின் பேரிலிருப்பதை வாங்கி வேறொரு ஈட்டின்பேரில் கொடுத்துவைக்கக்கூடாது.

மைனர்கள் முதலானவர்களுடைய சொத்தை அவர்களுடைய ஜீவன முதலியவற்றிற்கு வினியோகப்படுத்த அதிகாரம்.

41. யாதொரு சொத்தானது யாதொரு திரஸ்டியால் ஒரு மைனருக்காக திரஸ்டில் வைத்துக்கொள்ளப் பட்டிருக்குமாகில், அந்த திரஸ்டியானவன் தனக்கு யுக்தமாகத்தோற்றுகிற பிரகாரம், அப்படிப்பட்டசொத்து விஷயமாய் பெற்றுக்கொள்ள அந்த மைனருக்கு பாத்தியதையுண்டாயிருக்கும் படியான வரும்படி முழுவதையுமாவது அதில் எவ்வளவையாவது, அப்படிப்பட்ட மைனருக்கு கார்டியன்கள் யாராவதிருந்தால் அவர்களிடத்தில் செலுத்தலாம், அல்லது அவனுடைய ஜீவனத்திற்காகவாவது படிப்புக்காகவாவது அவனை முன்னுக்குக்கொண்டு வருவதற்காகவாவது, அவனுடைய தேவாராதனைக்காகிலும் கலியாணத்திற்காகிலும் சாவுசடங்குக்காகிலும் நியாயமாய்ப்பிடிக்கிற செலவுகளைச் செலுத்துவதற்காகவாவது இதுகளினிமித்தமாயாவது மற்றப்படி வினியோகப்படுத்தலாம்: மேலும் அந்த திரஸ்டியானவன் தொடர் வட்டி கிடைக்கும்படியாக, அந்த வரும்படியில் மிகுதியாய் நிற்கும் எல்லாத்தொகைகளையும் அதுகளினாலுண்டாகும் வரும்படியையும் 20-வது பிரிவில் சொல்லப்பட்டாவது குறிக்கப்பட்டாவதிருக்கிற ஈடுகள் யாதொன்றின்பேரில் அப்போதைக்கப்போது கொடுத்து, அப்படிப்பட்ட மிகுதி முழுவதையும் விருத்திசெய்து சேர்த்துவைக்கவேண்டியது. அப்படி சேர்த்துவைப்பது யாருடைய பிரயோசனத்திற்காகவென்றால்—எதிலிருந்து அப்படி விருத்தி உண்டாச்சுதோ அந்த சொத்துக்கு கடைசியாய் பாத்தியஸ்தனாகிறவனுடைய பிரயோசனத்திற்காகத்தான்; ஆனால் அந்த திரஸ்டியானவன் தனக்கு யுக்தமாகத்தோற்றினால் எப்போதாவது, அப்படிப்பட்ட விருத்தி முழுவதையுமாகிலும் அதில் எவ்வளவையாகிலும், அப்போது நடந்துகொண்டிருக்கும் வருஷத்திலே உண்டாகிற வரும்படியில் அதுசேர்ந்திருந்தாற்போலவே வினியோகப்படுத்தலாம்.

மைனருடைய ஜீவனத்திற்காவது படிப்புக்காவது அவனை முன்னுக்குக்கொண்டு வருவதற்காவது அவனுடைய தேவாராதனைக்காகிலும் கலியாணத்திற்காகிலும் சாவுசடங்குக்காகிலும் நியாயமாய்ப்பிடிக்கிற செலவுகளைச் செலுத்துவதற்காவது அந்த திரஸ்டு சொத்திலிருந்து உண்டாகும் வருமானம்போதாமையாயிருக்கிற பட்சத்தில், அந்த

திரஸ்ட்டியானவன் அசல்விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சீவில்கோர்ட்டாருடைய அனுமதியைப்பெற்றுக்கொண்டு, அப்படி அந்த மைனருடைய ஜீவனத்திற்காவது படிப்புக்காவது அவனை முன்னுக்குக்கொண்டு வருவதற்காவது தேவாராதனை முதலிய செலவு நிமித்தமாயாவது அந்தசொத்து முழுமையையுமாகிலும் அதில் எவ்வளவையாகிலும் வினியோகப்படுத்தலாமே யல்லாமல் மற்றப்படி வினியோகப்படுத்தக்கூடாது

மைனர்களைக்குறித்தும் அவர்களுடைய சொத்தைக்குறித்தும் அந்தந்தகாலத்தில் வழங்கிக்கொண்டிருக்கிற யாதொரு பிரதேச சட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்கு இந்தப்பிரிவிற் சொல்லியிருப்ப தெதினாலும் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

ரசீது கொடுக்க அதிகாரம்.

42. யாதொரு திரஸ்ட்டியாகிலும் திரஸ்டிகளாகிலும் (நம்பிக்கை) திரஸ்ட்டு அல்லது அதிகாரனிமித்தமாயாவது அதுகளை நிறைவேற்றுவதிலாவது தனக்கு அல்லது தங்களுக்குச் செலுத்தப்படத்தக்கதாகவாகிலும் திரான்ஸ்பர் செய்யப்படத்தக்கதாகவாகிலும் ஒப்பிக்கப்படத்தக்கதாகவாகிலுமிருக்கும் ரொக்கத்திற்காகவாவது பத்திரங்களுக்காகவாவது வேறே அசையும்பொருளுக்காகவாவது ரசீது எழுதிக்கொடுக்கலாம்; மோசம் நடந்திராதபட்சத்தில், அப்படி எழுதிக்கொடுத்த ரசீதினாலே - அதைச்செலுத்துகிற நபராவது திரான்ஸ்பர்பண்ணுகிற நபராவது ஒப்பிக்கிற நபராவது அதினின்று விமோசனமடைவதுமல்லாமல், (சரியானகாரியங்களுக்காக) அது வினியோகிக்கப்படுகிறதாவென்று பார்ப்பதினின்றும் அல்லது அது இழந்துவிடப்பட்டாலும் துர்வினியோகஞ் செய்யப்பட்டாலும் அதற்காக உத்தரவாதம் பண்ணுவதினின்றும் விமோசனமடைவான்.

கடனுக்கு ராஜி முதலியது பண்ண அதிகாரம்.

43. சேர்ந்து பிரவர்த்திக்கிற இரண்டு அல்லது மேற்பட்ட திரஸ்ட்டிகள், தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினால் தங்களுக்குத் தகுதியாகக் காணுகிறபடி,—

(a) தாவாசெய்யப்பட்ட யாதொரு கடனுக்காகவாவது சொத்துக்காகவாவது யாதொரு ராஜி உடன்பாட்டையாகிலும் ஈட்டையாகிலும் அங்கீகரிக்கலாம்;

(b) யாதொருகடனைச் செலுத்துவதற்கு எவ்வளவாவது காலங்கொடுக்கலாம்;

(c) திரஸ்ட்டு சம்பந்தமான எவ்விதகடன் - கணக்கு - தாவா அல்லது சங்கதியைக்குறித்து சமாதானமாகலாம், ராஜி உடன்பாடு செய்துகொள்ளலாம், அதுகளை நிவர்த்தி செய்யலாம், பஞ்சாயத்தில் விடலாம், அல்லது வேறேவிதமாய் பைசல்செய்யலாம் ; மேலும்.

(d) அந்தக்காரியங்களில் எதின்பொருட்டாவது. தங்களுக்கு யுக்தமாகக்காணுகிற உடன்படிக்கைகளையும் ராஜி உடன்பாடு அல்லது ஏற்பாட்டுக்கு ஆதாரவுகளையும் விடுதலைப்பத்திரங்களையும் மற்றக் காரியங்களையும் செய்யலாம், எழுதிக்கொடுக்கலாம், தாங்கள் நல்ல எண்ணத்தோடு அப்படிசெய்த யாதொருசெய்கை அல்லது காரியத்தினாலே நேரிடும் யாதொரு நஷ்டத்திற்கு அவர்கள் உத்தரவாதிகளல்ல.

திரஸ்ட்டு ஆதரவு ஏதாவதிருந்தால் அதினாலே அதிலுள்ள திரஸ்ட்டுகளையும் அதிகாரங்களையும் செலுத்துவதற்கு ஏகதிரஸ்ட்டிக்கு அதிகாரமுண்டாயிருக்குமாகில், சேர்ந்து பிரவர்த்திக்கிற இரண்டு அல்லது மேற்பட்ட திரஸ்ட்டிகளுக்கு இந்தப்பிரிவினால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை, ஏகதிரஸ்ட்டியாகப் பிரவர்த்திக்கிறவன் செலுத்தலாம்.

திரஸ்ட்டு ஆதரவில் மாறான எண்ணம் தெரிவிக்கப்படாதிருந்தால், அப்படி தெரிவிக்கப்படாதிருக்கிறமட்டில் மாத்திரம் இந்தப்பிரிவு சம்பந்தப்படுகிறது; மேலும் அந்த ஆதரவிலுள்ள ஷரத்துகளுக்கும் அதில் அடங்கியிருக்கிற நிபந்தனைகளுக்குமுட்பட்டு செலாவணியாகவேண்டியது.

இந்த ஆக்ட்டுவழங்கத்தொடங்குவதற்குப் பின்பு ஏற்பாடாகும் திரஸ்ட்டுகளுக்கு மாத்திரம் இந்தப்பிரிவு சம்பந்தப்படுகிறது.

திரஸ்ட்டிகள் பலரில் ஒருவன் விட்டுவிட்டாலும் இறந்

44. திரஸ்ட்டுசொத்தை நடத்துவதற்கு திரஸ்ட்டிகள் பலருக்கு அதிகாரங்கொடுக்கப்பட்டிருந்து அவர்களிலொருவன் அதைவேண்டாமென்றுவிட்டு விட்டாலும இறந்துபோனாலும், எத்தனைபேர் திரஸ்ட்டிகள் மிஞ்சி நிற்கிறார்களோ அத்தனைபேரைவிட

துபோனாலும் அவர்களுக்குள்ள அதிகாரம்.

அதிகமானவர்கள் அந்த அதிகாரத்தைச் செலுத்த வேணுமென்று திரஸ்ட்டு ஆதாவிலுள்ள ஷரத்துகளினால் பிரத்தியட்சமாய் தெரியவராத பட்சத்தில், அப்படி இருந்துகொண்டிருக்கும் திரஸ்ட்டிகள் அந்த அதிகாரத்தைச் செலுத்தலாம்.

திரஸ்ட்டியினுடைய அதிகாரத்தை டிக்கிரியினால் நிறுத்திவைப்பது

45. யாதொரு திரஸ்ட்டை நிறைவேற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்ட வியாச்சியத்திலே டிக்கிரி செய்யப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட டிக்கிரிக்கு ஒத்தவிதமாயாவது, அந்த டிக்கிரிசெய்த கோர்ட்டாருடைய அனுமதியின்பேரிலாவது அந்த டிக்கிரியின்பேரில் அப்பீல் நடந்துகொண்டிருக்கிற பட்சத்தில் அப்பிலேட்டு கோர்ட்டாருடைய அனுமதியின்பேரிலாவது அல்லாமல், திரஸ்ட்டியானவன் - தனக்குள்ள அதிகாரங்களையும் செலுத்தக்கூடாது.

---

5 - ம் அத்தியாயம்.

திரஸ்ட்டிகளுடைய அசமர்த்ததையைக்குறித்து.

ஏற்றுக்கொண்ட பிறகு திரஸ்ட்டியானவன் விட்டுவிடக்கூடாது.

46. திரஸ்ட்டை ஏற்றுக்கொண்ட யாதொரு திரஸ்ட்டியானவன், (a) அசல்விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சிவில்கோர்ட்டாருடைய உத்தரவின்பேரிலாவது, (b) பிரயோசனமடைகிறவன் கந்திராக்ட்டு செய்யத்தக்கவனுயிருந்தால் அவனுடைய அனுமதியின் பேரிலாவது, (c) திரஸ்ட்டு ஆதாவில்கண்டிருக்கும் விசேஷித்த யாதொரு அதிகாரத்தைக்கொண்டாவதல்லாமல், அந்த திரஸ்ட்டை பின்னிட்டு விட்டுவிடக்கூடாது.

திரஸ்ட்டியானவன் வேறொருவனுக்கு தன் அதிகாரத்தைக் கொடுக்கக்கூடாது.

47. (a) திரஸ்ட்டியானவன் தன் அதிகாரத்தை வேறொருவனுக்குக் கொடுக்கலாமென்று திரஸ்ட்டு ஆதாவில் விதித்திருக்கிறவிஷயத்திலாவது, (b) வேலைநடத்தும் கிரமமானதோரணியில் அப்படி அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிற விஷயத்திலாவது, (c) அப்படி அதிகாரங் கொடுக்கப்படுவது அவசியமாயிருக்கிற விஷயத்திலாவது, (d) பிரயோசனமடைகிறவன் கந்திராக்

ட்டு செய்யத்தக்கவனாயிருந்து அப்படி அதிகாரங் கொடுப்பதற்கு சம்மதிக்கிறவிஷயத்திலாவது தவிர யாதொரு திரஸ்ட்டியானவன் தன்னுடைய உத்தியோகத்தையாவது தன்னுடைய அலுவல்களில் எதையாவது செய்யும்படி யாதொருகூட்டு திரஸ்ட்டிக்காவது அந்நியனுக்காவது விடலாகாது.

விவரணம்:—ஏவுதலினால்மாத்திரம் செய்யப்படுவதாயும், யுக்தாயுக்தம் யோசித்து சுயமாகவே செய்வதல்லாததாயுமிருக்கிற யாதொருகாரியத்தைச்செய்வதற்கு ஒரு அட்டர்ணியையாவது பிரதி காரியஸ்தனையாவது நேமிப்பது இந்தப்பிரிவின் தாற்பரியப்படி வேறொருவனுக்கு அதிகாரங்கொடுப்பதாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

(a) பி—சி-என்பவர்களாலாவது அவர்களில் கடைசியாய் ஜீவித்திருக்கிறவனாலாவது அப்படி ஜீவித்திருக்கிறவனுடைய அசைனிகளாலாவது நிறைவேற்றப்படும்படி சில திரஸ்ட்டுகளின்பேரில் - பி - சி என்பவர்களுக்கு - எ - என்பவன் ஒருசொத்தை உயிலேற்படுத்துகிறான். பி - என்பவன் இறந்துபோகிறான். எ - என்பவனுடைய உயிலில் கண்டிருக்கும் திரஸ்ட்டுகளின்பேரில் சி-என்பவன் டி—இ-என்பவர்களுக்கு அந்த திரஸ்ட்டு சொத்தை உயிலேற்படுத்தலாம்.

(b) எ - என்பவன் ஒரு சொத்துக்குத். திரஸ்ட்டியாயிருப்பதுமல்லாமல் அதைவிற்க அதிகாரமுடைத்தாயுமிருக்கிறான். அதை விற்பனைசெய்வதற்கு ஏலங்கூறுவோனொருவனை - எ - என்பவன் அமர்த்திக்கொள்ளலாம்.

(c) குடிக்கூலியை வசூல்செய்து - சி என்பவனுக்குச் செலுத்துவதற்காக திரஸ்டில்வைத்துக்கொண்டிருக்கும்படி, மாதாந்திர குடிக்கூடிக்கு விடப்பட்டிருக்கும் ஐம்பதுவீடுகளை - எ - என்பவன் பி - என்பவனுக்கு உயிலிலேற்படுத்துகிறான். குடிக்கூலியை வசூல்செய்வதற்கு - பி - என்பவன் தகுந்தவனொருவனை அமர்த்திக்கொள்ளலாம்.

கூட்டுத்திரஸ்ட்டிகள் தனித்தனி பிரவர்த்திக்கக் கூடாது.

48. திரஸ்ட்டிகள் ஒருவனல்லாத பலராயிருக்கிறபட்சத்தில், திரஸ்ட்டு ஆதாரவினால் வேறேவிதமாய் விதிக்கப்பட்டிருக்கிற விஷயத்தில் தவிர, எல்லோரும்சேர்ந்து அந்த திரஸ்ட்டை நிறைவேற்றவேணும்.

யுக்தப்படி செய்யும்படியான அதிகாரம் மேல்விசாரணைக்குள்ளாவது.

49. யாதொரு திரஸ்ட்டியானவன் யுக்தப்பிரகாரம் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை நியாயமாகவும் நல்ல எண்ணத்தோடும் செலுத்தாமற் போவானாகில், அசல் விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சிவில்கோர்ட்டார் அப்படிப்பட்ட அதிகாரத்தை மேல்விசாரணைபண்ணலாம்.

திரஸ்ட்டியானவன் தான் செய்த வேலைக்காக சம்பளம் கேட்கக்கூடாதென்பது.

50. மாறாக வெளிப்படையான திட்டங்கள் திரஸ்ட்டு ஆதாரவில் சொல்லப்பட்டாகிலும், திரஸ்ட்டை ஏற்றுக்கொண்டகாலத்தில் கோர்ட்டாரோடாவது பிரயோஜனமடைகிறவனோடாவது மாறாக யாதொரு கந்திராக்ட்டு செய்துகொள்ளப்பட்டாகிலும் இராதபட்சத்தில், யாதொரு திரஸ்ட்டியானவன் திரஸ்ட்டை நிறைவேற்றுவதில் தானெடுத்துக்கொண்ட சிரமத்திற்காகவும் காலத்திற்காகவும் தான் பிரயோகித்த யுக்திக்காகவும் பிரதிபலன்பெற்றுக்கொள்ள அர்ஹனல்ல.

யாதொரு அபீஷியல் திரஸ்ட்டிக்காவது அட்மினிஸ்திரேட்டர் ஜனரலுக்காவது, பப்ளிக் கியூரேட்டருக்காவது அட்மினிஸ்திரேஷன் ஸர்ட்டிபிகேட்டு பெற்றிருக்கும் யாதாமொருவருக்காவது இந்தப்பிரிவிற்சொல்லியிருப்பதெதுவும் சம்பந்தப்படமாட்டாது.

திரஸ்ட்டியானவன் தன்னுடைய லாபத்துக்கு திரஸ்ட்டுசொத்தை உபயோகிக்கக் கூடாது.

51. யாதொரு திரஸ்ட்டியானவன் தன்னுடைய சொந்த லாபத்திற்காகவாவது திரஸ்ட்டுக்குச் சம்பந்தமில்லாதவேறே யாதொரு காரியத்திற்காகவாவது திரஸ்ட்டுசொத்தை உபயோகிக்கலுமாகாது அது விஷயமாய் யாதொன்றும் செய்யலுமாகாது.

விற்பனைக்காக ஏற்பட்ட திரஸ்ட்டியாவது அவனுடைய ஏஜெண்டா

52. திரஸ்ட்டுசொத்தை விற்பது யாருடையகடமையோ அந்த திரஸ்ட்டியும், விற்பனைகாரியத்தின் பொருட்டு அப்படிப்பட்ட திரஸ்ட்டியால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட யாதொரு ஏஜெண்டும், தன் நிமித்தமாயாவது மூன்றும் நபருக்கு ஏஜெண்டாகவாவது,

வது கிரயத்திற்கு வாங்கக்கூடாதெ ன்பது.

அந்த சொத்தையாகிலும் அதிலுள்ள யாதொரு பாத்தியதையையாகிலும் தானே நேரேயாவது மற்றப்படியாவது கிரயத்திற்கு வாங்கலாகாது.

அனுமதிபெரு மல் திரஸ்ட்டி யானவன் பிரயோஜனமடைகிறவனுடைய பாத்தியதையை கிரயத்திற்குக் கொள்ளக்கூடாது.

53. யாதொரு திரஸ்ட்டியும், அப்போதுதான் கொஞ்சகாலத்திற்குமுன் திரஸ்ட்டியாயிருந்து நீங்கிப்போன யாவனொருவனும அசல்விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சீவில் கோர்ட்டாருடைய உத்தரவுபெருமல், திரஸ்ட்டுசொத்தையாவது அதில் எவ்வளவையாவது கிரயத்திற்கு வாங்கவுங்கூடாது, கொதுவை வைத்துக்கொள்ளவுங்கூடாது, குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொள்ளவுங்கூடாது; மேலும் அப்படி கிரயத்திற்கு வாங்குவதற்காவது கொதுவை வைத்துக்கொள்ளுவதற்காவது குத்தகை வாடகைக்கு பெற்றுக் கொள்ளுவதற்காவது உத்தேசித்திருப்பதினாலே பிரயோசனமடைகிறவனுக்கு பிரத்தியட்சத்தில் பயனுண்டாவதாயிருந்தாலல்லாமல் அப்படி உத்தரவுகொடுக்கப்படாது.

விலைக்குவாங்குவதற்காக ஏற்பட்ட திரஸ்ட்டி.

திரஸ்ட்டியானவன் - பிரயோசனமடைகிறவனுக்காக ஏதோ ஒரு சொத்தை கிரயத்திற்கு வாங்கவேண்டியவனாகவாவது கொதுவை வைத்துக்கொள்ளவேண்டியவனாகவாவது குத்தகை அல்லது வாடகைக்குப் பெற்றுக்கொள்ள வேண்டியவனாகவாவதிருந்தால், அப்படிப்பட்ட திரஸ்ட்டியானவன் தனக்காக அந்த சொத்தையாவது அதில் எவ்வளவையாவது கிரயத்திற்குவாங்கவுங்கூடாது, குத்தகை அல்லது வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவுங்கூடாது.

[illegible] கூட்டு திரஸ்ட்டிகள் தங்களில் ஒருவனுக்கு கடன் கொடுக்கக் கூடாது.

[illegible] **54.** கொதுவையின் பேரிலாகிலும் நபர் ஜாமீன்பேரிலாகிலும் திரஸ்ட்டு பணம் கொடுப்பது யாருடைய கடமையோ அப்படிப்பட்ட திரஸ்ட்டியாவது கூட்டு திரஸ்ட்டியாவது தன்னுலாகிலும் தன்னுடைய கூட்டு திரஸ்ட்டிகளில் ஒருவனுலாகிலும் வைக்கப்பட்ட கொதுவையின்பேரிலாவது, தன்னுடைய அல்லது தன் கூட்டு திரஸ்ட்டிகளில் ஒருவனுடைய நபர் ஜாமீன்பேரிலாவது அந்தப்பணத்தைக்கொடுக்கக்கூடாது.

6-ம் அத்தியாயம்.

பிரயோசனமடைகிறவனுடைய சுதந்திரங்களையும் உத்தரவாதங்களையுங் குறித்து.

வாடகையையும் லாபத்தையும் பெற்றுக்கொள்ள சுதந்திரம்.

55. திரஸ்ட்டு ஆதரவிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, பிரயோசனகாரியானவன் திரஸ்ட்டுசொத்தின் வாடகையையும் லாபத்தையும் பெற்றுக்கொள்ள சுதந்திரமுடைத்தாயிருக்கிறான்.

குறித்தபடி நிறைவேற்றுவிக்கச் சுதந்திரம்

56. பிரயோசனமடைகிறவனுடைய பாத்தியதையினளவுமட்டில் திரஸ்ட்டு ஏற்பாடுசெய்தவனுடைய எண்ணத்தை குறித்தபடி நிறைவேற்றுவிக்க பிரயோசனமடைகிறவன் அர்ஹனாயிருக்கிறான்;

சுவாதீனத்தை திரான்சுபர் செய்யப்பெற்றுக்கொள்ள சுதந்திரம்

பிரயோசனமடைகிறவன் ஒருவனே ஒருவனிருந்து அவன் கந்திராக்ட்டுசெய்யத் தக்கவனாயிருந்தாலும், பிரயோசனமடைகிறவர்கள் பலபேரிருந்து அவர்கள் கந்திராக்ட்டுசெய்யத்தக்கவர்களாய் எல்லோரும் ஓரே மனதுடையவர்களாயிருந்தாலும், அப்படிப்பட்ட ஒருவனாவது பலராவது திரஸ்ட்டுசொத்தை தனக்கு அல்லது தங்களுக்காகிலும் தானாவது தாங்களாவது உத்தரவு செய்யும்படியானவனுக்காகிலும் திரான்சுபர் பண்ணச்சொல்லி திரஸ்ட்டியைக் கேட்கலாம்.

யாதொரு விவாகமான ஸ்திரீக்குள்ள பிரயோசனகரமான பாத்தியதை நீங்கிப்போகும்படிச்செய்வதற்கு அவளுக்கதிகாரமில்லாதபடி அவளுடைய பிரயோசனத்திற்காக சொத்து திரான்சுபர்செய்யப்பட்டிருந்தாலும் உயில்மூலமாய் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், இந்தப் பிரிவு இரண்டாவது உட்பிரிவில் சொல்லியிருப்பதேதுவும் அவள் சுமங்கிலியாயிருக்கும்காலத்தில் அப்படிப்பட்ட சொத்துக்குச் சம்பந்தப்படமாட்டாது.

திருஷ்டாந்தம்.

(a) எ. - என்பவனுக்கு 24 - வயசாகிறவரையில் வட்டியைச்சேர்த்து வைத்து பிறகு மொத்தத்தொகையை அவனுக்குத் திரான்சுபர்செய்யும்படி திரஸ்

ட்டியின்பேரில் திரஸ்ட்டிகளுக்கு சில கவர்ன்மெண்டு பத்திரங்கள் கொடுக்கப்படுகிறது. எ - என்பவன் பருவமடைவதின்பேரில், திரஸ்ட்டு சொத்தில் தான் மாத்திரம் பாத்தியதையடைந்திருப்பவனாக, அதை தனக்கு உடனே திரான்ஸ்பர் செய்யச்சொல்லி திரஸ்ட்டிகளைக் கேட்கலாம்.

(b) பருவமடைந்த கந்திராக்ட்டுசெய்ய மற்றப்படி யோக்கியதையுடையவனான - பி - என்பவனுக்காக வருஷவாரி சுகஜீவனத்தொகை (அன்னூயிட்டி) வாங்கும்படி திரஸ்ட்டின்பேரில் திரஸ்ட்டிகளுக்கு எ - என்பவன் 10,000 ரூபாய் உயிலேற்படுத்துகிறான். பி - என்பவன் அந்த 10,000 ரூபாயை தாவா செய்யலாம்.

(c) எ - என்பவன் - பி - என்பவனுக்கு ஒரு சொத்தை திரான்சுபர் செய்து, கந்திராக்ட்டுசெய்யத்தக்கவனாயிருக்கிற — சி - என்பவனுடைய பிரயோசனத்திற்காக அதை விற்கும்படியாகிலும் ஈட்டின்பேரில் கொடுக்கும் படியாகிலும் அவனுக்கு உத்தரவுசெய்கிறான். அந்தசொத்து ஆதியில் எப்படியிருந்ததோ அப்படியே அதை எடுத்துக்கொள்ள - சி என்பவன் நியமித்துக்கொள்ளலாம்.

திரஸ்ட்டு ஆதரவு - கணக்கு முதலியவற்றைப் பார்வையிடவும் அதுகளுக்கு நகல் எடுத்துக்கொள்ளவும் சுதந்திரம்.

57. பிரயோசனமடைகிறவன் - திரஸ்ட்டிக்கு விரோதமாயும் திரஸ்ட்டைக்குறித்து நோட்டீசுபெற்று அந்த திரஸ்ட்டியை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிற சகலமானவர்களுக்கு விரோதமாயும், திரஸ்ட்டு ஆதாரவையும் திரஸ்ட்டு சொத்துக்குமாத்திரம் சம்பந்தப்படுகிற ஹக்கு சாஸனங்களையும், திரஸ்ட்டு சொத்தைச்சேர்ந்த கணக்குகளையும் அதுகளுக்கு ஆதாரமாயிருக்கும் ரசீதுமுதலிய தஸ்தாவேஜுகள் ஏதாவதிருந்தால் அதுகளையும், திரஸ்ட்டியானவன் அவனுடைய அலுவலை எவ்விதமாய் நிறைவேற்றவேணுமோ அதைக்குறித்து அவன் கேட்டுக்கொண்ட விஷயங்களையும் அவனுக்குச்சொல்லப்பட்ட அபிப்பிராயங்களையும் பார்வையிடவும் அதுகளுக்கு நகல் எடுத்துக்கொள்ளவும் சுதந்தரமுடைத்தாயிருக்கிறான்.

பிரயோசனகாரனுடைய சுதந்திரத்தை திரான்ஸ்பர் செய்யச் சுதந்திரம்.

58. பிரயோசன மடைகிறவன் கந்திராக்ட்டு செய்யத்தக்கவனாயிருப்பானாகில், அவன் தன்னுடைய பாத்தியதையை எந்த விஷயங்களிலே எவ்வளவு மட்டில் யாதொருவகை செய்துபோடலாமோ அதுகளைக்குறித்து அந்தந்த காலத்தில் வழங்கிக்கொண்டிருக்

கும் சட்டதிட்டத்திற்குட்பட்டு தன்னுடைய பாத்தியதையை திரான்சுபர் செய்யலாம்.

ஆனால் யாதொரு விவாகமான ஸ்திரீக்குள்ள பிரயோசனகரமான பாத்தியதை நீங்கிப்போகும்படிச் செய்வதற்கு அவளுக்கு அதிகாரமில்லாதபடி, அவளுடைய பிரயோசனத்திற்காக சொத்து திரான்சுபர் செய்யப்பட்டாலும் உயில் மூலமாய் ஏற்படுத்தப்பட்டாலும், அவள் சுமங்கிலியாயிருக்கும் காலத்தில் அப்படிப்பட்ட பாத்தியதையை திரான்சுபர் செய்வதற்கு இந்தப் பிரிவிற் சொல்லியிருப்பதெதினாலும் அவளுக்கு அதிகாரமுண்டாகமாட்டாது.

திரஸ்ட்டு நிறைவேறுவதற்கு வியாச்சியந் தொடரச் சுதந்திரம்.

59. திரஸ்ட்டிகள் நேமிக்கப்படாதிருந்தாலும், திரஸ்ட்டிகள் சகலரும் இறந்துபோனாலும் அந்த உத்தியோகத்தை நிராகரித்தாலும் அதிலிருந்து விடுதலைசெய்யப்பட்டாலும், திரஸ்ட்டியினால் யாதொரு திரஸ்ட்டு நிறைவேற்றப்படுவது வேறே யாதொரு காரணத்தினாலே சாத்தியமற்றதாயிருந்தாலும் சாத்திய மற்றதாய் விட்டாலும், பிரயோசன மடைகிறவன் அந்த திரஸ்ட்டு நிறைவேற்றப்படுவதற்காக வியாச்சியங் கொண்டுவரலாம்; திரஸ்ட்டியாவது புது திரஸ்ட்டியாவது நேமிக்கப்படுகிற வரையில் கூடுமானமட்டிலே அந்த திரஸ்ட்டை கோர்ட்டார் நிறைவேற்றவேண்டியது.

கிரமமான திரஸ்ட்டிகள் இருப்பதற்குச் சுதந்திரம்

60. எத்தனைபேர் கிரமமோ அத்தனை தகுதியான நபர்களேற்பட்டு அவர்கள் திரஸ்ட்டு சொத்தை கிரமமாய்ப் பாதுகாக்கவும் வைத்துக்கொண்டிருக்கவும் பரிபாலிக்கவும் வேணுமென்பதற்கு, (திரஸ்ட்டு ஆதாவிலுள்ள நிபந்தனைகளுக் குட்பட்டு) பிரயோசனகாரிக்குச் சுதந்திரமுண்டு.

விவரணம் 1.—இந்தப் பிரிவின் தாற்பரியப்படி அடியில் கண்டிருப்பவர்கள் தகுதியானவர்களல்ல, அவர்கள் யாரெனில் :—

வெளியில் நிலையாய் வாசஞ்செய்துகொண்டிருக்கிற ஒருவன்; அந்நிய தேசத்தானாகிய சத்துரு; பிரயோசன மடைகிறவனுடைய பாத்தியதைக்கு ஒவ்வாதபடி பாத்தியதை யுடைத்தாயிருக்கிற ஒருவன்; கடனிருக்கச் சக்தியற்ற நசையிலிருக்கிற ஒருவன்; பிரயோசனமடை-

கிறவனுக்கு உரித்தான சட்டதிட்டத்தில் மற்றப்படி கண்டிருந்தாலொழிய, விவாகமான ஸ்திரீ - மைனர் ஆகிய இவர்கள்.

விவரணம் 2.—பணம் வரப்பற்றுவதும் வைத்திருப்பதும் திரஸ்ட்டு பரிபாலனத்தில் சேர்ந்திருந்தால், குறைந்தது இரண்டுபேர் திரஸ்ட்டிகளிருக்கவேணும்.

திருஷ்டாந்தம்.

(a) திரஸ்ட்டியாகிய பி-என்பவன் திரஸ்ட்டுசொத்தில் ஒரு பாகத்தை அக்கிரமமாய் யாதொருவகை செய்துபோட்டனென்றாவது, பி-என்பவன் கடனிறுக்கச் சக்தியற்றதசையிலிப்பதினாலே சொத்துக்கு மோசம் வருமென்றாவது, திரஸ்ட்டியாக பிரவர்த்திப்பதற்கு அவனுக்கு அசமர்த்ததை யுண்டாயிருக்கிறதென்றாவது, பிரயோசனமடைகிறவர்கள் பலரில் ஒருவனாகிய எ-என்பவன் ருஜுப்படுத்துகிறான். எ-என்பவன் திரஸ்ட்டு சொத்தை வாங்கிக்கொள்ள ஒரு ரிஸீவரை நேமிக்கப் பெறலாம்.

(b) சி-என்பவனுக்காக திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி எ-என்பவன் பி-என்பவனுக்கு சில நகைகளை உயிலிலேற்படுத்துகிறான். எ-என்பவன் ஜீவித்திருக்கும்போதே பி-என்பவன் இறந்துபோகிறான். பிறகு எ-என்பவன் இறந்துபோகிறான். சி-என்பவன் தனக்காக அந்த சொத்து ஒரு திரஸ்ட்டியினிடத்தில் ஒப்படைசெய்யப்படுவதற்கு அர்ஹனாயிருக்கிறான்.

(c) பி - என்பவனுக்காக திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி எ-என்பவன் ஒரு சொத்தை நான்கு திரஸ்ட்டிகளுக்கு ஒப்படைசெய்கிறான். அந்த திரஸ்ட்டிகளில் மூன்றுபேர் இறந்துபோகிறார்கள். இறந்துபோன திரஸ்ட்டிகளுக்கு பதிலாக மூன்று திரஸ்ட்டிகள் புதுசாய் நேமிக்கப்படுவதற்கு பி-என்பவன் வியாச்சியங்கொண்டுவரலாம்.

(d) பி-என்பவனுக்காக திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி எ-என்பவன் ஒரு சொத்தை மூன்று திரஸ்ட்டிகளுக்கு ஒப்படைசெய்கிறான். திரஸ்ட்டிகள் அனைவரும் திரஸ்ட்டி ஹோதாவை நிராகரிக்கிறார்கள். அப்படி நிராகரிக்கிற திரஸ்ட்டிகளுக்கு பதிலாய் மூன்று திரஸ்டிகளை நேமிக்கப்பெறுவதற்கு பி-என்பவன் வியாச்சியந் தொடரலாம்.

(e) பி என்பவனுக்காக திரஸ்ட்டியாயிருக்கும் எ-என்பவன் திரஸ்ட்டி ஹோதாவில் பிரவர்த்திக்கமாட்டேனென்கிறான், அல்லது பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில் நிலையாய் குடியிருக்கப்போகிறான், அல்லது திவாலெடுத்தவனென்று நிர்ணயிக்கப்படுகிறான், அல்லது தனக்குக்கடன் கொடுத்தவர்களோடு ராஜிசெய்துகொள்ளுகிறான், அல்லது கூட்டு திரஸ்ட்டி ஒருவனை திரஸ்ட்டை-

மீறவொட்டுகிறான். ஏ-என்பவனை நீக்கி விட்டு அவனுக்கு பதிலாக புதுசாய் ஒரு திரஸ்ட்டியை நேமிக்கும்படிச் செய்வதற்கு பி-என்பவன் வியாச்சியந்தொடர லாம்.

செய்யவேண்டிய யாதொரு காரியத்தைச் செய்யும்படி உடன்படுத்தச் சுதந்திரம்.

61 பிரயோசன மடைகிறவனுக்குத் திரஸ்ட்டியாயிருப்பவனை அப்படிப்பட்டவனாக அவனுக்குள்ள கடமையைச் சேர்ந்த குறித்த யாதொரு காரியத்தைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கவேணுமென்பதற்கும், திரஸ்ட்டை மீறுவதற்கு உத்தேசித்திருந்தாலும் அப்படி மீறுவது ஒருவேளை சம்பவிக்கக்கூடியதா யிருந்தாலும் அப்படி மீறவொட்டாமல் அவனைத் தடுக்கவேணுமென்பதற்கும், பிரயோசனமடைகிறவனாகிய அப்படிப்பட்டவனுக்குச் சுதந்திரமுண்டு.

திருஷ்டாந்தம்.

(a) சி-என்பவனுடைய பிரயோசனத்திற்காக பி-என்பவனிடத்தில் மாதாந்திரம் 100-ரூபாய் செலுத்துவதாக ஏ-என்பவன் பி-என்பவனோடு கந்திராக்ட் செய்கிறான். அப்படி செலுத்தப்படும் பணத்தை சி-என்பவனிமித்தம் தான் திரஸ்ட்டில் வைத்துவைப்பதாக பி என்பவன் ஒரு கடிதம் எழுதி கையெழுத்துப் போடுகிறான். ஏ-என்பவன் தான்செய்த கந்திராக்ட்டின் பிரகாரம் பணஞ் செலுத்தத் தவறிப்போகின்றான்; பி-என்பவன் பெயரால் அந்த கந்திராக்ட்டைப்பற்றி சி என்பவனை வியாச்சியங் கொண்டுவர வொட்டும்படி தகுந்த விமோசனத்தின் பேரில் ஏ-என்பவன் பி-என்பவனை நிர்ப்பந்திக்கலாம்.

(b) ஏ-என்பவன் ஒரு நிலத்திற்குத் திரஸ்ட்டியாயிருப்பதுமல்லாமல், அதை விற்று அதினால் வரும்பணத்தை பி-சி-என்பவர்களுக்குச் சமமாய்ப் பகிர்ந்து கொடுக்கவும் அதிகாரமுடைத்தாயிருக்கிறான். ஏ-என்பவன் யோசனைசெய்யாமல் அந்த நிலத்தை விற்பதாக இருக்கிறான். அப்படி விற்பனைசெய்ய வொட்டாமல் ஏ-என்பவனைத் தடுப்பதற்கு இன்ஜங்ஷன் என்னும் கட்டளைக்காக பி-என்பவன் தனக்காகவும் சி என்பவனுக்காகவும் வியாச்சியங் கொண்டுவ லாம்;

திரஸ்ட்டியானவன் அக்கிரமமாய் கிரயத்துக்கு வாங்குவது.

62. யாதொரு திரஸ்ட்டியானவன் திரஸ்ட்டு சொத்தை அக்கிரமமாய் கிரயத்திற்கு வாங்கியிருந்தால், அந்தசொத்து திரஸ்ட்டுக்குட்பட்டதென்று நிர்ணயிப்பித்துக்கொள்ளுவதற்காவது, அது விற்கப்படாமல் திரஸ்ட்டியினுடைய வசத்திலிருக்குமாகில் அதை அந்த திரஸ்ட்டியால் மறுபடி திரான்ஸ்பர் செய்விக்

துக் கொள்ளுவதற்காவது திரஸ்ட்டைக்குறித்து கோட்டைப்பெற்றிருந்து யாதொரு நபர் அவனிடத்திலிருந்து அதைக் கிரயத்திற்கு வாங்கியிருப்பானாகில், அப்படிப்பட்ட நபரால் அதை மறுபடி திரான்ஸபர் செய்வித்துக் கொள்ளுவதற்காவது பிரயோசனகாரிக்குச் சுதந்திரமுண்டு. ஆனால் அப்படிப்பட்ட விஷயத்திலே திரஸ்ட்டியானவன் செலுத்தியிருக்கிற கிரயப்பணத்தை வட்டி சகிதமாயும், அந்த சொத்தை பாது காப்பதற்கு அவனுக்குக் கிரமமாய் வேறே செலவு (ஏதாவது) பிடித்திருந்தால் அப்படிப்பட்ட செலவுகளையும் பிரயோசனகாரியானவன் மறுபடி செலுத்தவேண்டியது; மேலும் திரஸ்ட்டியாவது சொத்தைக்கொண்டவனாவது (a) அதிலிருந்து கிடைக்கும் நிகரலாபத்திற்கு கணக்கு சொல்லவேண்டியது; (b) அந்தசொத்தை வாஸ்தவத்தில் அவன் அநுபவித்துக்கொண்டிருந்தால் அந்த அநுபோகத்திற்காக வாடகை செலுத்துவதற்குள்ளாக வேண்டியது; (c) திரஸ்ட்டியாவது சொத்தைக் கொண்டவனாவது செய்தகாரியங்களினாலாகிலும் செய்யவேண்டியதைச்செய்யாமல் விட்டதினாலாகிலும் அந்தசொத்து ஜீரணித்துப் போயிருந்தால், பிரயோசனகாரியை அந்தக்கிரயப்பணத்தில் அதற்கேற்ற அளவை கழித்துக்கொள்ள ஒட்டவேண்டியது.

இந்தப்பிரிவிற் சொல்லியிருப்பதெதினாலும்,—

(a) அந்தசொத்து திரஸ்ட்டுக்குட்பட்டதென்று நிச்சயிப்பித்துக்கொள்ளவாவது அதை மறுபடி திரான்ஸபர் செய்வித்துக்கொள்ளவாவது யாதொரு வியாச்சியம் தொடரப்படுவதற்கு முன்னமே, திரஸ்ட்டியோடாகிலும் கொண்டவனோடாகிலும் நல்ல எண்ணத்தோடு கந்திராக்ட்டு செய்துகொண்டிருக்கிற குத்தகை அல்லது வாடகைதாரர் முதலானவர்களுடைய சுதந்திரங்கள் பலவீனப்படமாட்டாது; அல்லது.

(b) பிரயோசனகாரியானவன், கந்திராக்ட்டு செய்யத்தக்கவனுயிருந்து, நிர்ப்பந்தத்திற்காவது அக்கிரமமான அதிகாரஞ் செலுத்தப்படுவதற்காவது ஆளாகாமல், அந்த விஷயத்தைப்பற்றின சங்கதிகளையும் திரஸ்ட்டிக்கு விரோதமாய் தனக்கிருக்கும் சுதந்திரங்களையும் பூர்த்தியாய் அறிந்தே, திரஸ்ட்டிக்கு விற்பனை செய்ததை தானே ஊர்ஜிதப்படுத்திபிருப்பானாகில், அந்தசொத்து திரஸ்ட்டுக்

குட்பட்டதென்று நிச்சயிப்பித்துக்கொள்ளவாவது அதை மறுபடிநிரான்சுபர் செய்வித்துக்கொள்ளவாவது அப்படிப்பட்ட பிரயோசனகாரிக்கு பாத்தியதை யுண்டாகமாட்டாது.

திரஸ்ட்டு சொத்தைத் தொடருவது.—

மூன்றும் நபர்களுடைய வசத்தில் வந்திருக்கும் போதும்;

63. திரஸ்ட்டு சொத்தானது திரஸ்ட்டுச்கு ஒவ்வாதபடி மூன்றும் நபரினுடையவசத்தில் வருமாகில், பிரயோசனகாரியானவன் - அந்த சொத்து திரஸ்ட்டில் அடங்கியிருக்கிறதென்று முறைப்படி ஒத்துக்கொள்ளச்சொல்லி அவனைச் கேட்கலாம், அல்லது அப்படி அடங்கியிருக்கிறதென்று நிர்ணயிக்கப்படுவதற்காக வியாச்சியந்தொடரலாம்.

அந்த சொத்து எதுவாய்மாற்றி விடப்பட்டதோ அது விஷயத்திலும்.

திரஸ்ட்டியானவன் திரஸ்ட்டு சொத்தை யாதொரு வகைசெய்து விட்டிருந்து, அதற்காக அவன் பெற்றுக்கொண்ட பணமாவது வேறே சொத்தாவது அவனுடைய வசத்திலாகிலும் அவனுடைய சட்டசம்மதமான பிரதிநிதியினுடைய வசத்திலாகிலும், அவன் உயில் மூலமாய் ஏற்படுத்திய பொருளைப்பெற்றுக்கொள்ளுகிறவனுடைய வசத்திலாகிலும் இருப்பதாகக் கண்டுகொள்ளப்பட்டால், அதைக்குறித்து பிரயோசனகாரியானவன் ஆதி திரஸ்ட்டு சொத்தைப்பற்றி தனக்குள்ள சுதந்தரங்களைப்போலவே கூடுமானமட்டில் அதே சுதந்திரங்களை உடைத்தாயிருக்கிறான்.

திருஷ்டாந்தம்.

(a) பி-என்பவனுக்காக 10,000 ரூபாயைப்பற்றி திரஸ்ட்டியாயிருக்கிற எ—என்பவன் அந்த 10,000 ரூபாயைக்கொண்டு ஏதோ ஒரு நிலத்தை அக்கிரமமாய் கிரயத்திற்குக்கொள்ளுகிறான். பி-என்பவன் அந்த நிலத்திற்கு அர்ஹனுகிறான்.

(b) எ-என்னும் திரஸ்ட்டியானவன் கொஞ்சமட்டில் தன்பணத்தையும் மிகுதிக்காக பி-என்பவனுக்கு திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும் பணத்தையும்போட்டு தன்பெயரால் அக்கிரமமாய் நிலம் வாங்குகிறான். அப்படி துர்விநியோகப்படுத்தப்பட்ட திரஸ்ட்டு பணத்தொகைக்காக அந்த நிலத்தின்பேரில் பொறுப்படைவதற்கு பி-என்பவன் அர்ஹனுயிருக்கிறான்.

திரான்ஸ்சுபர் பெற்ற சில பேர்களுடைய சுதந்திரத்திற்கு பாதகமில்லை.

64. (a) கிரயப்பணம் செலுத்தப்பட்டபோதாவது சொத்து கிரயசாசனம் எழுதப்பட்டபோதாவது, திரஸ்ட்டைக்குறித்து நோட்டீசில்லாமல், ஐவேஜுக்காக நல்ல எண்ணத்தோடு திரான்சுபர் பெற்றுக்கொண்டவனுடைய வசத்திலாவது,

(b) அப்படி திரான்சுபர் பெற்றுக்கொண்டவனிடத்திலிருந்து ஐவேஜுக்காக திரான்சுபர் பெற்றுக்கொண்டவனுடைய வசத்திலாவது,

இருக்கிற சொத்தைப்பற்றி யாதொரு சுதந்தரமடைவதற்கு, 63-வது பிரிவில் சொல்லியிருப்பதெதினாலும் பிரயோசனகாரிக்கு பாத்தியதையுண்டாகமாட்டாது.

திரஸ்ட்டிக்கு கடன்கொடுத்து தீர்ப்புபெற்றவனாகிய யாவனொருவன் திரஸ்ட்டு சொத்தை ஜப்திசெய்து கிரயத்திற்குவாங்கினால், அவன் இந்தப்பிரிவின் தாற்பரியப்படி ஐவேஜுக்காக திரான்சுபர் பெற்றுக்கொண்டவனாகமாட்டான்.

அறுபத்துமூன்றாவது பிரிவில் சொல்லியிருக்கிற எந்தநிபந்தனையும், நல்ல எண்ணத்துடன் வைத்துக்கொண்டிருப்பவனாகிய ஒருவனிடத்தில் கைமாறுதலினால்வந்திருக்கும் பணத்திற்கும் கரன்ஸீ நோட்டுகளுக்கும் கைமாறிச்செல்லத்தக்க ஆதாரவுகளுக்கும் சம்பந்தப்படவுமாட்டாது, 1872ஞு இந்திய இந்தியன் கந்திராக்ட்டு ஆக்ட்டு 108-வது பிரிவுக்கு பாதகமுண்டாக்குவதாகவாகிலும், யாதொரு கடனையாவது பொறுப்பையாவது திரான்சுபர் செய்யப்பெற்றவனுடைய உத்தரவாதத்திற்கு பாதகமுண்டுபண்ணுவதாகவாகிலும் எண்ணப்படவுமாட்டாது.

அக்கிரமமாய் மாற்றப்பட்ட திரஸ்ட்டுசொத்தை திரஸ்ட்டியானவன் அடைவது.

65. யாதொரு திரஸ்ட்டியானவன் திரஸ்டுசொத்தை அக்கிரமமாய் விற்றாகிலும் வேறேவிதமாய் திரான்சுபர்செய்தாகிலுமிருந்து, பின்னிட்டு அந்தசொத்துக்கு தானே சொந்தக்காரனுவானால், ஐவேஜுக்காக நல்ல எண்ணத்துடன் இடையில் திரான்சுபர் பெற்றிருந்தவர்களுக்கு நோட்டீசுகிடைத்திராதபோதிலும் நிமித்தமில்லாமல், அந்தசொத்து மறுபடியும் திரஸ்டுக்குள்ளாய்விடுகிறது.

ஒன்றுய்ச்சேர்த்து விடப்பட்ட சொத்து விஷயத்தில் சுதந்திரம்.

66. டிரஸ்டியானவன் தன்னுடைய சொத்தோடு அக்கிரமமாய் டிரஸ்டுசொத்தையும் சலந்துவிட்டால், பிரயோசனகாரியானவன் தனக்கு பாக்கியாயிருக்கும் தொகைக்காக அந்த நிதிமுழுவதின்பேரிலும் பொறுப்படைவதற்கு அர்ஹனுயிருக்கிறுன்.

கூட்டுப்பங்குக்காரனுகிய திரஸ்ட்டியானவன் கூட்டுப்பங்குகாரிய நிமித்தம் திரஸ்ட்டுசொத்தை அக்கிரமமாய் உபயோகிப்பது.

67. கூட்டுப்பங்குக்காரனுகிய ஒருவன் திரட்ஸ்டியாயிருந்து கூட்டுபங்கு தொழிலிலாவது கூட்டுப்பங்கு கணக்கின்பேரிலாவது திரஸ்டு சொத்தை அக்கிரமமாய் உபயோகித்தால், கூட்டுப் பங்குக்காரனுகிய வேறெவனும், அப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகத்தைக்குறித்து நோட்டீசு பெற்றிருந்தாலொழிய, தன்னுடைய சொந்த ஹோதாவிலே அதற்காக பிரயோசனகாரிகளுக்கு உத்தரவாதியாகமாட்டாது.

அப்படிப்பட்ட நோட்டீசு பெற்றிருக்கும் கூட்டுப்பங்குக்காரர்கள் அந்த நம்பிக்கைத்துரோகத்திற்காக் கூட்டாகவும் தனித்தனியாகவும் உள்ளாயிருக்கிறுர்கள்,

திருஷ்டாந்தம்

(a) எ-என்பவனும் பி-என்பவனும் கூட்டுப்பங்குக்காரர்கள். எ-என்பவன் இஜெக்ஷ் - என்பவனுக்காக திரஸ்ட்டில் வைத்திருக்கும்படி தன்னுடைய சொத்தையெல்லாம் பி-என்பவனுக்கு உயிலிலேற்படுத்தி, தனக்கு ஏக எக்ஸிக்கியூட்டராக பி-என்பவனை நேமித்துவிட்டு இறந்துபோகிறுன். பி-என்பவன் கூட்டுப்பங்கு காரியங்களை முடிவுசெய்துபோடாமல், வியாபாரத்திலே அந்த ஆஸ்தியையெல்லாம் வைத்துக்கொண்டிருக்கிறுன். மூலதனத்தில் எ என்பவனுக்குள்ள பங்குக்கு கிடைக்கும லாபத்திற்காக கணக்குசொல்லும்படி கூட்டுபங்குக்காரனுக அவனை - இஜெட் என்பவன் நிர்ப்பந்திக்கலாம். மேலும எ—என்பவனுடைய ஆஸ்தியை அக்கிரமமாய் உபயோகித்தால அதற்காகவும் பி-எனபவன் - இஜெட் என்பவனுக்கு உத்தரிக்கவேண்டியவனுகிறுன்,

(b) எ—என்னும் ஒரு வியாபாரி சி-யன்பவனுக்காக திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி பி—என்டவனுக்கு தன்னுடைய சொதததை உயிலேற்படுத்தி, பி-என்பவனை தன்னுடைய ஏக எக்ஸிக்யூட்டர்க நேமித்துவிட்டு இறந்துபோகிறுன். பி-என்பவன் அதேவியாபாரத்தில்—எக்ஸ்-ஒய்-என்பவர்களோடு கூட்டுப்பங்கில் சேர்ந்து, அந்த கூட்டுப்பங்கு காரியத்திற்கு எ-என்பவனுடைய ஆஸ்தியை உபயோகிக்கிறுன். சி-என்பவன் தாவாசெய்தால் அதற்காக எக்ஸ்—ஒய்

என்பவர்களுக்கு விமோசன முணுபண்ணுவதாக பி என்பவன் உடன்படுகிறான் இந்த விஷயத்தில் தெரிந்திருந்தும் எக்ஸ்–ஒப்-என்பவர்கள் பி என்பவன் செய்த நம்பிக்கைத்துரோகத்தில் கலந்திருக்கிறார்களானபடியினாலே அவர்கள் பி-என்பவனோடுகூட்டாக சி என்பவனுக்கு உகாவாதிகளாகிறார்கள்.

பிரயோசன மடைகிறவன் சொந்த நம்பிக்கைத் துரோகஞ்செய்தால் அவன் உள்ளாவது.

68 பிரயோசனகாரிகள் பலருள் ஒருவன்.-

(a) நம்பிக்கைத்துரோகஞ்செய்வதில் சேர்ந்திருந்தாலும்,

(b) மற்ற பிரயோசனகாரிகளுடைய அனுமதியில்லாமல், தெரிந்திருந்தும் அதினால் ஏதாவது பிரயோசனமடைந்தாலும்,

(c) நம்பிக்கைத்துரோகம் செய்யப்பட்டிருக்கிற தென்றாவது செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றாவது அறிந்துகொண்டு, அதை வாஸ்தவத்தில் மறைத்தாலும், மற்ற பிரயோசனகாரிகளுடைய சுதந்திரங்களைக் காப்பதற்கு நியாயமானகாலத்திற்குள் தகுந்தவைகள் செய்யாவிட்டாலும்,

(d) திரஸ்ட்டியை மோசஞ்செய்து அதினாலே அவனை நம்பிக்கைத்துரோகஞ் செய்யும்படி உட்படுத்தியிருந்தாலும்,

அப்படிப்பட்ட துரோகத்தினால் விளைந்த நஷ்டம் சரிச்சொல்லப்படுகிறவரையில், அவனுக்கு விரோதமாயும் (அந்த துரோகத்தைக்குறித்து நோட்டீசில்லாமல் ஐவேஜுக்காக திரான்சுபர் பெற்றுக்கொண்டவர்களாக வல்லாமல் மற்றப்படி) அவனை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிற சகலமானவர்களுக்கு விரோதமாயும், அவனுடைய பிரயோசனகரமான பாத்தியதை முழுவதையும், மறியல் செய்விப்பதற்கு மற்ற பிரயோசன காரிகளுக்கு அர்ஹதையுண்டு.

யாதொரு விவாகமான ஸ்திரீக்குள்ள பிரயோசனகரமான பாத்தியதை நீங்கிப்போகும்படிச் செய்வதற்கு அவளுக்கு அதிகாரமில்லாதவண்ணம் அவளுடைய பிரயோனத்திற்காக சொத்து திரான்சுபர் செய்யப்பட்டிருந்தாலும் உயில்மூலமாய் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், இந்தப்பிரிவிற் சொல்லியிருப்பதெதுவும் அவள் சுமங்கிலியா

யிருக்குங்காலத்தில் அப்படிப்பட்ட சொத்துக்குச் சம்பந்தப்படமாட்டாது.

பிரயோசனமடைகிறவனிடத்திலிருந்து திரான்சுபர் பெற்றுக்கொண்டவனுக்குள்ள சுதந்திரமும் உத்தரவாதமும்.

69. பிரயோசனகாரியானவன் தன்னுடைய பாத்தியதையை எவனுக்குத்திரான்சுபர் செய்கிறானோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும், திரான்சுபர்தேதியில் அப்படிப்பட்ட பாத்தியதைவிஷயமாய் பிரயோசனகாரிக்குள்ள சுதந்தரங்களுடையவனாயிருப்பதுமல்லாமல், அவன் செய்யவேண்டிய உத்தரவாதங்களுக்கும் உள்ளாயிருக்கிறான்.

7-ம் அத்தியாயம்.

திரஸ்ட்டி அலுவலைவிட்டு நீங்குவதைக்குறித்து

திரஸ்ட்டி அலுவலை இன்னபடி காலிசெய்வது.

70. திரஸ்ட்டியானவன் இறந்துபோவதினாலாவது தன்னுடைய உத்தியோகத்திலிருந்துவிடுதலையாவதினாலாவது திரஸ்ட்டி உத்தியோகம் காலியாகிறது.

திரஸட்டியை விடுதலைசெய்வது.

71. யாதொரு திரஸ்ட்டியானவன் எப்படிப்பட்டவிஷயங்களில் மாத்திரம் தன்னுடைய உத்தியோகத்திலிருந்து விடுதலை செய்யப்படலாமென்றால்,—

(a) திரஸ்ட்டு அற்றுப்போவதினாலும்,

(b) திரஸ்ட்டின்படி தனக்குள்ள அலுவல்கள் முடிந்துபோவதினாலும்,

(c) திரஸ்ட்டு ஆதாரவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும்படியான வகைகளினாலும்,

(d) தனக்குபதிலாய் இந்த ஆக்ட்டின்படி ஒரு புதிய திரஸ்ட்டி நேமிக்கப்படுவதினாலும்,

(e) கந்திராக்ட்டு செய்யத்தக்கவனான பிரயோசனகாரியும், அல்லது பிரயோசனகாரிகள் பலபேரிருந்தால் கந்திராக்ட்டு செய்யத்தக்கவ

ர்களாகிய எல்லா பிரயோசனகாரிகளும் தானும் சம்மதிப்பதினாலும், அல்லது

(i) தன்னை விடுதலைசெய்வதற்காக இந்த ஆக்ட்டின்படி யாருக்கு விண்ணப்பஞ் செய்யப்பட்டதோ அப்படிப்பட்ட கோர்ட்டாரா லும்,

அப்படி விடுதலைசெய்யப்படலாம்.

திரஸ்ட்டிலிருந்து விடுதலையாவதற்காக விண்ணப்பம்.

72. பதினோராவது பிரிவில் என்னசொல்லியிருந்தபோதிலும், ஒவ்வொரு திரஸ்ட்டியும் தன்னை திரஸ்ட்டி உத்தியோகத்திலிருந்து விடுதலைசெய்யும்படி அசல்விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சிவில் கோர்ட்டிக்கு விண்ணப்ப மூலமாய் மனுவுசெய்து கொள்ளலாம்; அப்படி அவனை விடுதலைசெய்வதற்குப் போதுமான முகாந்தரமிருப்பதாக கோர்ட்டார் கண்டுகொண்டால், அவர்கள் அப்பிரகாரமே அவனை விடுதலைசெய்து, அவனுக்குப் பிடித்த செலவை திரஸ்ட்டு சொத்திலிருந்து செலுத்தவேணுமென்று உத்தரவு செய்யலாம். ஆனால், அப்படிப்பட்ட முகாந்திரம் இராவிட்டால், அவனுடைய உத்தியோகத்திற்கு வருவதற்கு தகுந்தவனொருவன் அகப்பட்டாலொழிய கோர்ட்டார் அவனை விடுதலைசெய்யக்கூடாது.

மரணமுதலியது நேரிடுவதின் பேரில் புது திரஸ்ட்டிகளை நேமிப்பது.

73. திரஸ்ட்டியாக நேமிக்கப்பட்ட யாவனொருவன் அந்த உத்தியோகம் வேண்டாமென்று விட்டுவிட்டாலும் முதலிலாவது ஒருவருக்கு பதிலாயாவது நேமிக்கப்பட்ட யாதொரு திரஸ்ட்டியானவன் இறந்துபோனாலும், தொடர்ச்சியாய் ஆறுமாதகாலத்திற்கு பிரிட்டிஷ் இந்தியாவில் இராதிருந்தாலும், வெளியில்போய் வாசஞ்செய்வதற்கு பிரிட்டிஷ் இந்தியாவை விட்டுப்போனாலும், கடனிறுக்கச் சக்தியற்றவனென்று தீர்மானிக்கப்பட்டாலும், திரஸ்ட்டிலிருந்து விடுதலையாவதற்கு இஷ்டங்கொண்டாலும், திரஸ்ட்டில் பிரவர்த்திக்கமாட்டேனென்றாலும், ஒற்றுமையாயிராத யாதொரு திரஸ்ட்டை ஏற்றுக்கொண்டாலும், திரஸ்ட்டில் பிரவர்த்திப்பதற்கு அவன் தகுதியற்றவனென்றாவது அசமர்த்தனாக யுள்ளவனாயிருக்கிறானென்றாவது அசல் விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சிவில் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டாலும்,

(a) டிரஸ்ட்டு ஆதாரவு (ஏதாவது) இருந்தால் அதில் புது டிரஸ்ட்டியை நேமனம் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் நபராவது,

(b) அப்படிப்பட்ட நபர் நியமிக்கப்படாதிருந்தாலும் நியமிக்கப்பட்டிருந்து பிரவர்த்திப்பதற்குச் சக்தியுள்ளவனும் இஷ்டமுள்ளவனும் இராவிட்டாலும், டிரஸ்ட்டு ஏற்பாடுசெய்தவன் உயிரோடிருந்து கந்திராக்டு செய்யத்தக்கவனுயிருக்கிற பட்சத்தில் அவனுவது, அப்போதைக்கு ஜீவித்தாகிலும் இருந்துகொண்டாகிலு மிருக்கிற டிரஸ்ட்டிகள் அல்லது டிரஸ்ட்டியாவது, கடைசியாய் ஜீவித்து இருந்துகொண்டிருக்கும் டிரஸ்ட்டியினுடைய சட்டசம்மதமான பிரதிநிதியாவது, டிரஸ்ட்டிகள் ஏககாலத்தில் அந்த அலுவலைவிட்டு நீங்குகிறபட்சத்தில் அப்படி நீங்குகிற டிரஸ்ட்டிகள் (கோர்ட்டாருடைய அனுமதிபெற்றுக்கொண்டு) அவர்களாவது, கடைசியாய் நீங்குகிற டிரஸ்ட்டி (அவ்வித அனுமதி பெற்றுக்கொண்டு) அவனுவது,

முன்சொன்ன அப்படிப்பட்டவனுக்கு பதிலாய் புது டிரஸ்ட்டியை நேமிக்கலாம்.

அப்படி நேமிக்கிற நபர் அப்படிப்பட்ட பிரதி நேமனத்தையும் தன்கைப்பட எழுதவேண்டியது.

ஒரு புது டிரஸ்ட்டியை நேமிக்கும்போது டிரஸ்ட்டிகளின் சங்கியையை அதிகப்படுத்தலாம்.

ஒரே ஒரு டிரஸ்ட்டி நேமிக்கப்படுவதாயும் அப்படிப்பட்ட டிரஸ்ட்டி ஏக டிரஸ்ட்டியாயும் இருக்கும்படியான யாதொரு விஷயத்திலே, அபீஷியல் டிரஸ்ட்டியானவர் அவனுடைய அனுமதியின் பேரிலும் கோர்ட்டாருடைய உத்தரவினாலும் இந்தப் பிரிவின்படி நேமிக்கப்படலாம்.

யாதொரு உயிலில் டிரஸ்ட்டியாக ஏற்படுத்தப்பட்டிருந்து உயில் எழுதினவனுக்கு முன்னமே இறந்துபோகிற நபரின் விஷயமானது, இறந்துபோயிருக்கிற டிரஸ்ட்டியைக் குறித்து இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளில் அடங்கியிருக்கிறது; மேலும் டிரஸ்ட்டி உத்தியோகம் வேண்டாமென்று நிராகரிக்கிற அல்லது அதிலிருந்து நீங்குகிற டிரஸ்ட்டியானவன் அந்த அதிகாரத்தைக்கொண்டு பிரவர்த்

நிக்க இஷ்டங்கொள்ளுவானுகில், அப்படிப்பட்டவனுடைய விஷயமானது, இருந்துகொண்டிருக்கும் திரஸ்ட்டியைக் குறித்த நிபந்தனைகளில் அடங்கியிருக்கிறது.

கோர்ட்டார் நேமிப்பது.

74. திரஸ்ட்டி உத்தியோகம் அப்படி காலியானாலும் அப்படி எவனாவது அசமர்த்ததையுள்ளவனானாலும், 73-வது பிரிவின்படி புது திரஸ்ட்டியை நேமிப்பது சாத்தியமில்லாததென்று கண்டுகொள்ளப்பட்டால், யாதொரு திரஸ்ட்டியையாவது புது திரஸ்ட்டியையாவது நேமிக்கும்படி பிரயோசனகாரியானவன் வியாச்சியங்கொண்டுவராமலே, அசல் விசாரணை அதிகாரமுள்ள யாதொரு பிரதான சிவில்கோர்ட்டாருக்கு விண்ணப்ப மூலமாய் மனுவுசெய்துகொள்ளலாம், கோர்ட்டார் அப்பிரகாரமே யாதொரு திரஸ்ட்டியையாவது புது திரஸ்ட்டியையாவது நேமிக்கலாம்.

புது திரஸ்ட்டிகளைத் தெரிந்தெடுக்க நிபந்தனை.

புது திரஸ்ட்டிகளை நேமிக்கும்போது, கோர்ட்டார் (a) திரஸ்ட்டு ஆகரவில்தெரிவித்திருக்கிறபடி திரஸ்ட்டு ஏற்பாடுசெய்தவனுக்குள்ள கோரிக்கையையும் அல்லது அவனுக்கு என்னகோரிக்கை யிருந்ததென்று அந்த ஆகரவைக்கொண்டு கிரகிக்கலாமோ அதையும், (b) புது திரஸ்ட்டிகளைநேமிக்க அதிகாரம்பெற்றவனெவனாவதிருந்தால் அவனுடைய கோரிக்கையையும், (c) அப்படி நேமிப்பதினாலே திரஸ்ட்டை நிறைவேற்றுவதற்கு அனுகூலமுண்டாகுமோ அல்லது தடையுண்டாகுமோ என்பதையும், (d) பிரயோசனகாரிகள் பலபேரிருந்தால், அப்படிப்பட்ட எல்லா பிரயோசனகாரிகளுடைய பிரயோசனங்களையுங் குறித்து லட்சியம் வைப்பார்கள்.

திரஸ்ட்டு சொத்து புது திரஸ்ட்டிகளுக்குச் சங்கிரமிப்பது.

75. யாதொரு புது திரஸ்ட்டியானவன் 73-வது பிரிவின்படியாவது 74-வது பிரிவின்படியாவது நேமிக்கப்படுவானுகில், ஜீவித்தாவது இருந்துகொண்டாவதிருக்கும் திரஸ்ட்டிகள் அல்லது திரஸ்ட்டிக்காகிலும், யாதொரு திரஸ்ட்டியினுடைய சட்டசம்மதமான பிரதிநிதிக்காகிலும் அப்போதைக்கு சங்கிரமித்திருக்கும் திரஸ்ட்டு சொத்தெல்லாம், சங்கிரமிக்கவேண்டியபடி, அப்படிப்பட்ட புது திரஸ்ட்டிக்குத் தனியாகவாவது, ஜீவித்தாகிலும் இருந்து

கொண்டாகிலும் இருக்கிற டிரஸ்ட்டிகள் அல்லது டிரஸ்ட்டியோடு கூட்டாகவாவது சங்கிரமித்துவிடும்.

புது டிரஸ்ட்டிகளுக்குள்ள அதிகாரம்.

அப்படி நேமிக்கப்பட்ட ஒவ்வொரு புது டிரஸ்ட்டியும், இந்த ஆக்ட்டு ஜாரியாவதற்கு முன்னிட்டாவது பின்னிட்டாவது யாதொரு கோர்ட்டாரால் நேமிக்கப்படும் ஒவ்வொரு டிரஸ்ட்டியும், டிரஸ்ட்டு ஏற்பாடு செய்தவனால் டிரஸ்ட்டியாக முதலில் ஏற்படுத்தப்பட்டிருந்தாற்போலவே, அதே அதிகாரங்களையும் ஆதிபத்தியங்களையும் உடையவர்களாயிருப்பதுமல்லாமல் யுக்தாயுக்தம் யோசித்தும் செய்வார்கள்; மேலும் அப்படி நேமிக்கப்பட்டிருந்தாற்போலவே எல்லா விஷயங்களிலும் பிரவர்த்திப்பார்கள்.

டிரஸ்ட்டிகள் இறந்துபோனாலும் டிரஸ்டு இருப்பது.

76, பல கூட்டு டிரஸ்ட்டிகளில் ஒருவன் இறந்துபோவதின் பேரிலாவது விடுதலையாவதின் பேரிலாவது டிரஸ்ட்டு இருந்துகொண்டிருப்பதுமல்லாமல், மற்றப்படி டிரஸ்ட்டு ஆதரவில் வெளிப்படையாய்ச் சொல்லப்பட்டிருந்தாலொழிய, டிரஸ்ட்டு சொத்தும் மற்றவர்களுக்குச் செல்லுகிறது.

8-ம் அத்தியாயம்.

டிரஸ்ட்டுகள் அற்றுப்போவதைக்குறித்து.

இன்னபடிக் காரணால் டிரஸ்ட்டு அற்றுப்போகும்.

77. (a) டிரஸ்ட்டுகாரியம் பூர்த்தியாய் நிறைவேற்றப்பட்டாலும்,

(b) டிரஸ்ட்டுகாரியம் சட்டத்திற்கு விரோதமுள்ளதாய் விட்டாலும்,

(c) டிரஸ்ட்டுசொத்து அழிந்துபோனதினாலாவது மற்றப்படியாவது டிரஸ்ட்டு காரியத்தை நிறைவேற்றுவது சாத்தியமற்றதாய் விட்டாலும்,

(d) டிரஸ்ட்டு ரதுசெய்யப்படத்தக்கதாயிருந்து வெளிப்படையாய் ரத்துசெய்யப்பட்டாலும்,

திரஸ்ட்டு அற்றுப்போகிறது.

திரஸ்ட்டை ரத்து செய்வது

78. உயிலினால் ஏற்படுத்தப்பட்ட திரஸ்ட்டை உயிலெழுதினவன் இஷ்டங்கொள்ளும்போது ரத்துசெய்யலாம்.

மற்றப்படி ஏற்படுத்தப்பட்ட திரஸ்ட்டானது எப்போதுமாத்திரம் ரத்துசெய்யப்படக்கூடுமென்றால்.—

(a) பிரயோசனகாரிகள் சகலரும் கந்திராக்ட்டு செய்யத்தக்கவர்களாயிருக்கிற பட்சத்தில்—அவர்கள் சம்மதிப்பதினாலும்,

(b) உயிலல்லாத வேறே ஆதாரத்தினாலாவது வாய்மொழியாகவாவது திரஸ்ட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிற பட்சத்தில்—ரத்துசெய்வதற்கு திரஸ்ட்டு ஏற்பாடு செய்தவனுக்கு வெளிப்படையாய் ஏற்பட்டிருக்கும் அதிகாரத்தைச் செலுத்துவதினாலும்,

(c) திரஸ்ட்டு ஏற்பாடு செய்தவனுடைய கடன்களைச் செலுத்துவதற்காக திரஸ்ட்டு ஏற்பட்டிருந்து, கடன் கொடுத்தவர்களுக்கு அது தெரிவிக்கப்படாதிருக்கிற பட்சத்தில்—திரஸ்ட்டு ஏற்பாடுசெய்தவன் இஷ்டங்கொள்ளுவதினாலும், அப்படி ரத்துசெய்யப்படக்கூடும்

திருஷ்டாந்தம்.

எ-என்பவனுக்கு கடன்கொடுத்தவர்களுடைய தாவாக்களுக்காக சொத்தை விற்று பணஞ்செலுத்துவதற்கு திரஸ்ட்டில் வைத்திருக்கும்படி எ-என்பவன் பி-என்பவனுக்கு சொத்தை ஒப்படைசெய்கிறான். அதை ரத்துசெய்வதற்கு எ-என்பவன் அதிகாரம் வைத்துக்கொள்ளவில்லை. கடன் கொடுத்தவர்களுக்கு அதைக்குறித்து தெரிவிக்காதிருந்தால், எ-என்பவன் அந்த திரஸ்ட்டைரத்துசெய்யலாம். ஆனால் கடன்கொடுத்தவர்கள் அந்த ஏற்பாட்டில் சம்பந்தப்பட்டவர்களாயிருந்தால், அவர்களுடைய அனுமதியில்லாமல் அந்த திரஸ்ட்டை ரத்துசெய்யக்கூடாது.

ரத்தானதினாலே திரஸ்ட்டிகள் கிரமமாய்ச் செய்திருப்பது அடிபட்டுப்போகாது.

79. திரஸ்ட்டை நிறைவேற்றுவதில் திரஸ்ட்டில் கிரமமாய் என்ன செய்திருக்கலாமோ அதுகளுக்கு பின்னமாவது பாதகமாவது உண்டாகும்படி, திரஸ்ட்டு ஏற்பாடுசெய்தவன் எந்த திரஸ்ட்டையும் ரத்துசெய்யக்கூடாது.

9-ம் அத்தியாயம்.

டிரஸ்ட்டு தன்மைத்தான சில கடமைகளைக்குறித்து.

இன்னபடிக்கானால் டிரஸ்ட்டுதன்மைத்தான கடமை உண்டு பண்ணப்படுமென்பது.

80. டிரஸ்ட்டுதன்மைத்தான யாதொரு கடமை அடியில் கண்டிருக்கும் விஷயங்களிலே ஏற்படுகிறது.

டிரான்சுபர் செய்தவன் பிரயோசனகரமான சுதந்திரத்தை கொடுத்துவிட, உத்தேசித்ததாகத் தெரியவராவிட்டால் இன்னபடி.

81. சொத்துக்கு சொந்தக்காரன் அதை டிரான்சுபர் செய்தாவது உயில் மூலமாய் ஏற்படுத்தியாவதிருந்து அதில் தனக்குள்ள பிரயோசனகரமான பாத்தியதையை கொடுத்துவிடுவதற்கு அவன் எண்ணங்கொண்டிருந்தானென்று அதோடு உடன்சேர்ந்த சங்கதிகளுக்கு ஒற்றுமையாய் ஊஹிக்கக்கூடாத பட்சத்தில், டிரான்சுபர் பெற்றவனாவது உயிலிலேற்பாடானசொத்து பெற்றவனாவது சொந்தக்காரனுடைய பிரயோசனத்திற்காகவாகிலும் அவனுடைய சட்ட சம்மதமான பிரதிநிதியின் பிரயோசனத்திற்காகவாகிலும் அப்படிப்பட்ட சொத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) ஏ-என்பவன் ஐவேஜுபெற்றுக்கொள்ளாமல் பி-என்பவனுக்கு நிலம் ஒப்படைத்து எவ்வகைத்தான டிரஸ்டையும் தெரிவிக்கவில்லை. எந்த வயணங்களில் டிரான்சுபர்செய்யப்படுகிறதோ அதுகளைக் குறித்து யோசிக்கையில், அந்த நிலத்திலுள்ள பிரயோசனகரமான பாத்தியதையை ஏ-என்பவன் டிரான்சுபர்செய்ய எண்ணங்கொண்டானென்று ஊஹிக்கலாகாது. ஏ-என்பவனுடைய பிரயோசனத்திற்காக பி-என்பவன் அந்த நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறான்.

(b) ஏ-என்பவன் ஒய்-இஜெட் என்னும் இரண்டுபுலங்களை பி-என்பவனுக்கு ஒப்படைசெய்து, ஒய் என்னும் புலத்தை டிரஸ்ட்டில்வைத்துக்கொண்டிருக்கும்படி தெரிவிக்கிறானேயொழிய, இஜெட்-என்னும் புலத்தைக்குறித்து ஒன்றுஞ்சொல்லவில்லை. எந்த வயணங்களில் டிரான்சுபர்செய்யப்படுகிறதோ அதுகளைக்குறித்து யோசிக்கையில், இஜெட்-என்னும் புலத்திலுள்ள பிரயோசனகரமான பாத்தியதையை ஏ-என்பவன் டிரான்சுபர்செய்ய எண்ணங்கொண்டா

னென்று ஊஹிக்கலாகாது. எ-என்பவனுடைய பிரயோசனத்திற்காக-இஜெட்-என்னும் புலத்தை பி-என்பவன் வைத்துக்கொண்டிருக்கிறான்.

(c) எ-என்பவன் கூட்டாய் தன்பெயருக்கும் பி-என்பவனுடைய பெயருக்கும் தனக்குச்சொந்தமான ஒரு ஸ்ட்டாக்கை திரான்சுபர் செய்கிறான். எந்த வயணங்களில் அப்படி திரான்சுபர்செய்யப்படுகிறதோ அதுகளை யோசிக்கையில், எ-என்பவன் தன் ஆயுசுவரையில் அந்த ஸ்ட்டாக்கிலுள்ள பிரயோசனகரமான பாத்தியதையை திரான்சுபர்செய்ய எண்ணங்கொண்டானென்று ஊஹிக்கலாகாது. எ-என்பவனுடைய ஆயுசுவரையில் அவனுடைய பிரயோசனத்திற்காக எ-பி—என்பவர்கள் அந்த ஸ்டாக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(d) பி-என்னும் தன் மனைவிக்கு எ-என்பவன் ஒருநிலத்தை தானம் கொடுக்கிறான். பி—என்பவளுடைய பிரயோசனத்திற்காக அந்த தானம் கொடுக்கப்பட்டதென்று அதைச்சேர்ந்த சங்கதிகளினால் ஊஹிக்கலாமானபடியினாலே, எ—என்பவன்பட்சத்தில் யாதொரு திரஸ்ட்டும் ஏற்படாமல் அவள் அந்த நிலத்தில் பிரயோசனகரமான பாத்தியதையைக் கைகொள்ளுகிறாள்.

ஒருவன் செலுத்தின ஐவேஜுக்காக வேறொருவனுக்குத்திரான்சுபர்செய்வது.

82. வேறே யாதொரு நபரால் செலுத்தப்பட்டாவது சவதரித்துக் கொடுக்கப்பட்டாவதிருக்கிற ஐவேஜுக்காக ஒருவனுக்கு சொத்து திரான்சுபர் செய்யப்பட்டிருந்து, அப்படி திரான்சுபர் பெற்றவனுடைய பிரயோசனத்திற்காக அந்த ஐவேஜைச் செலுத்தவாகிலும் சவதரித்துக்கொடுக்கவாகிலும் அப்படிப்பட்ட வேறே நபர் உத்தேசிக்கவில்லையென்று தெரியவருமாகில், அப்படி திரான்சுபர் பெற்றவன் ஐவேஜு செலுத்தின அல்லது சவதரித்துக்கொடுத்தவனுடைய பிரயோசனத்திற்காக அந்தசொத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

அந்தப் பிரிவிற் சொல்லியிருப்பதிலாவது சிவில் புரோசிடர் கோட் 317-வது பிரிவுக்காவது, (பங்காளத்து பிரெஸிடென்ஸிக்குட்பட்ட கீழ்மாகாணங்களில் ஒஸ்ரி பாக்கிக்காக நில விற்பனையைக் குறித்த சட்டதிட்டத்தைச் சீர்ப்படுத்துவதற்கான) 1859-ம் வருஷத்து 11-வது ஆக்ட்டு 36-வது பிரிவுக்காவது பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

நிறை வேற்றுவ தற்கு சாத்தியப்ப டாத திரஸ்ட், அல்லது திரஸ்ட்டு சொத்து முழுதும் செலவாய்ப் போகாமல் நிறைவேற்றப்பட்ட திரஸ்ட்டு.

83. யாதொரு திரஸ்ட்டு நிறைவேற்றப்படுவதற்குக் கூடாமையானதாயிருந்தாலும், திரஸ்ட்டு சொத்து முழுமையும் செலவாய்ப்போகாமல் திரஸ்ட்டுபூர்த்தியாய் நிறைவேற்றப்பட்டாலும், மாறுக உத்தரவு செய்யப்படாதிருக்கிற பட்சத்தில், திரஸ்ட்டியானவன் அந்த திரஸ்ட்டு சொத்தையாவது அதில் செலவாகாமல் இருக்கிறபாகத்தையாவது, திரஸ்ட்டு ஏற்பாடு செய்தவனுடைய பிரயோசனத்திற்காகவாகிலும் அவனுடைய சட்டசம்மதமான பிரதிநிதியினுடைய பிரயோசனத்திற்காகவாகிலும் வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) எ-என்பவன் "திரஸ்ட்டின்பேரில்" ஒருநிலத்தை பி-என்பவனுக்கு ஒப்படைசெய்கிறுன், அது இன்ன திரஸ்ட்டென்று தெரிவிக்கப்படவில்லை; அல்லது.

"பின்னிட்டுத் தெரிவிக்கப்படுவதான திரஸ்ட்டின்பேரில்" அவன் அப்படி ஒப்படைசெய்கிறுன், அது இன்னதிரஸ்ட்டென்று ஒருபோதும் தெரிவிக்கப்படவில்லை; அல்லது.

இன்னதென்று தெளிவாய் சுட்டிக்காட்டப்படாமையினுலே நிறைவேறுவதற்குக் கூடாமையாயிருக்கிற திரஸ்ட்டுகளின்பேரில் அவன் அப்படி ஒப்படைசெய்கிறுன்; அல்லது.

பயன்படுவதற்குக் கூடாமையாய் விடுகிற திரஸ்ட்டுகளின்பேரில் அவன் அப்படி ஒப்படைசெய்கிறுன்; அல்லது.

"சி-என்பவனுக்காக திரஸ்ட்டில் வைத்திருக்கும்படி" அவன் அப்படி ஒப்படைசெய்கிறுன், சி-என்பவன் அந்த திரஸ்ட்டின்படி தனக்குள்ள பாத்தியதையை விட்டுவிடுகிறுன்.

இந்தவிஷயங்கள் ஒவ்வொன்றிலும் பி-என்பவன் அந்த நிலத்தை எ-என்பவனுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறுன்.

(b) பாக்கியாய்வருஷாவருஷம் சேர்ந்துக்கொண்டுவருகிற வட்டியை சி-என்பவளுக்கு அவளாயுசுவரையில்செலுத்துவதற்காக திரஸ்ட்டியில்வைத்துக் கொண்டிருக்கும்படி, 10,000 ரூபாய்க்கு நாலுவட்டிபத்திரங்களை எ-என்பவன் பி-என்பவனுக்கு திரான்சுபர் செய்கிறுன். எ-என்பவன் இறந்துபோகிறுன். பிறகு சி-என்பவள் இறந்துபோகிறுன் எ-என்பவனுடைய சட்டசம்மதமான

பிரதிநிதியின் பிரயோசனத்திற்காக பி-என்பவன் அந்தத்தொகையை வைத்துக்கொண்டிருக்கிறான்.

(c) நிலத்தைவிற்று அதிலால் கிடைக்கும்பணத்திலே ஒருபாதியை சில தருமகைங்கரியங்களுக்காக உபயோகப்படுத்தவும், மற்றப்பாதியை விக்கிரகாராதனை நடந்துவருவதற்கு உபயோகப்படுத்தவும், திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கும்படி எ-என்பவன் பி-என்பவனுக்கு நிலம் ஒப்படைசெய்கிறான். பி-என்பவன் அந்த நிலத்தை விற்கிறான். ஆனால் அந்த தருமகைங்கரியங்கள் நிறைவேறாமல் முழுவதும் தவறிப்போகின்றன; மேலும் அந்த விக்கிரகாராதனை நடந்துவருவதற்கு அப்படி விற்றுவந்த பணத்தில் மற்றொரு பாதி பூராய்ச் செலவாகவில்லை. எ-என்பவனுடைய பிரயோசனத்திற்காகவாவது அவனுடைய சட்டசம்மதமான பிரதிநிதியின் பிரயோசனத்திற்காகவாவது பி-என்பவன் அந்த முதல்பாதியையும் இரண்டாம்பாதியில் செலவாகாமலிருக்கிற பாகத்தையும் வைத்துக்கொண்டிருக்கிறான்.

(d) சில காரியங்களுக்காக ஒப்படை செய்யப்படுவதினிமித்தம் கிரயத்திற்கு நிலம் வாங்கும்பொருட்டு' எ-என்பவன் பி-என்பவனுக்கு உயிலில் 10,000 ரூபாய் ஏற்படுத்துகிறான். அந்தக்காரியங்கள் முழுவதுக்குமாவது கொஞ்சமட்டுக்காவது பயன்படாமற்போகின்றன. அந்தத்தொகையிலாவது, நிலம் வாங்கப்பட்டிருந்தால் அந்த நிலத்திலாவது கொடுத்துவிடப்படாமலிருக்கிற பாத்தியதையை பி-என்பவன் எ-என்பவனுடைய சட்டசம்மதமான பிரதிநிதியின் பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறான்.

சட்டத்திற்கு விரோதமான காரியத்திற்காக திரான்சுபர் செய்வது.

84. சொத்துக்குச் சொந்தக்காரன் சட்டத்துக்கு விரோதமான காரியத்திற்காக அதை வேறொருவனுக்குத் திரான்சுபர்செய்திருந்து அந்தக்காரியம் நிறைவேற்றப்படாவிட்டாலும், திரான்சுபர்செய்தவன் திரான்சுபர்பெற்றவனைப்போல அவ்வளவு நேரஸ்தனாயிராவிட்டாலும், திரான்சுபர் பெற்றவனை அந்த சொத்தை வைத்துக்கொண்டிருக்கவொட்டுவதினாலே யாதொரு சட்டதிட்டத்திலுள்ள நிபந்தனைகள் பயனற்றதாய்ப் போய்விடும்படியானதாயிருந்தாலும் திரான்சுபர்பெற்றவன் திரான்சுபர் செய்தவனுடைய பிரயோசனத்திற்காக அந்த சொத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

சட்டத்திற்கு விரோதமான காரியத்

85. யாவனொருவன் திரஸ்ட்டின்பேரில் ஒருசொத்தை உயில் மூலமாய் ஏற்படுத்திவைத்திருந்து, அந்த உயிலைப் பார்க்கும்போது அந்த திரஸ்ட்டுகாரியம் நீதிக்கே

திற்காக உயிலில் ஏற்படுத்தி வைப்பது.

டானதென்று பிரத்தியட்சமாய்த் தெரியவந்தாலும், உயில் எழுதினவனுடைய ஜீவிதகாலத்தில் உயில்மூலமாய் ஆஸ்தி ஏற்பாடானவன் அந்தசொத்தை நீதிக்கேடான யாதொரு காரியத்திற்கு உபயோகிப்பதாக அவனோடு சம்மதித்தாலும், அப்படி ஆஸ்தி ஏற்பாடானவன் உயிலெழுதினவனுடைய சட்டசம்மதமான பிரதிநிதியின் பிரயோசனத்திற்காக அந்த சொத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது

உயிலில் ஏற்படுத்திவைத்து அதை ரத்துசெய்ய நிர்ப்பந்தத்தினால் கூடாமையாயிருக்கும் போது இன்னபடி.

உயில் மூலமாய் சொத்து ஏற்படுத்தப்பட்டிருந்து அந்த ஏற்பாட்டை ரத்துசெய்வதற்கு நிர்ப்பந்தத்தினால் கூடாமையாய்ப்போன பட்சத்தில் உயில் மூலமாய் ஆஸ்தி ஏற்பாடானவன் உயிலெழுதினவனுடைய சட்டசம்மதமான பிரதிநிதியின் பிரயோசனத்திற்காக அந்த சொத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

ரத்துசெய்யத் தக்க கந்திராக்ட்டை அனுசரித்து திரான்சுபர்.

86. ரத்துசெய்வதற்குள்ளானதாகவாகிலும் மோசத்தினாலாவது பிசகினாலாவது செய்யப்பட்டதாகவாகிலுமிருக்கிற யாதொரு கந்திராக்ட்டை அனுசரித்து சொத்து திரான்சுபர் செய்யப்பட்டால், திரான்சுபர் பெற்றவன் அந்த கந்திராக்ட்டு மேற்சொன்னபடியானதென்று நோட்டீசு பெற்றுக்கொள்வதின் பேரில், வாஸ்தவத்தில் செலுத்தப்பட்ட ஐவேஜானது திரான்சுபர் செய்தவனால் மறுபடி செலுத்தப்படத்தக்கதாய், அப்படிப்பட்டவனுடைய பிரயோசனத்திற்காக அந்த சொத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது

கடன் பட்டவன் கடன் கொடுத்தவனுடைய பிரதிநிதியாவது.

87. கடன்பட்டவனொருவன் தனக்கு கடன் கொடுத்தவனுடைய எக்ஜிக்கியூட்டராகவாவது வேறே சட்டசம்மதமான பிரதிநிதியாகவாவது ஆவானாகில், அவன் அந்தக்கடனில் பாத்தியதை யுடைத்தாயிருக்கிற நபர்களின் பிரயோசனத்திற்காக அதை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

நம்பிக்கை ஹோதாவிலிருப்பவன் அடைகிற பிரயோசனம்.

88. வேறொருவனுடைய பாத்தியதைகளைக் காப்பதற்காக நம்பிக்கை (அதாவது திரஸ்ட்டி) ஹோதாவிலே பிணைப்பட்டிருக்கிற யாதொரு திரஸ்ட்டியாவது எக்ஜிக்கியூட்டராவது கூட்டுப்பங்குக்காரனாவது ஏஜெண்டாவது யாதொரு கம்பெனிக்கு டைரெக்ட்டராவது நிபாயதுரந்தரனாவது மற்றநபராவது, தன்னுடைய ஹோதாவை அவலம்பிப்பதினாலே யாதொரு திரவியப்பிரயோசனத்தைத்தான் பெற்றுக்கொண்டாலும், அப்படி பிணைப்பட்டிருக்கிற யாதொரு நபர்-எந்த விஷயங்களில் தன்னுடைய பாத்தியதைகள் அப்படிப்பட்ட வேறொருவனுடைய பாத்தியதைகளுக்கு விரோதமாயிருக்கிறதோ அல்லது விரோதமாயிருக்கலாமோ அப்படிப்பட்ட விஷயங்களில் ஏதாவது (லேவாதேவி முதலிய) விவகாரங்களிலே பிரவேசித்து, அதனாலே திரவியப்பிரயோசனத்தைத் தான் பெற்றுக்கொண்டாலும், அவன் அப்படி பெற்றுக்கொண்ட பிரயோசனத்தை அப்படிப்பட்ட வேறொருவனுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) ஒரு எக்ஜிக்கியூட்டராகிய எ-என்பவன் மரணசாசனப் பொருள் பெற்றவனாகிற பி-என்பவனுக்கு அந்த சாசனப்படி உண்டாகிய பாத்தியதையை அவனிடத்திலிருந்து குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறான். அந்த மரண சாசனப்பொருள் இன்னபெறுமானமுள்ளதென்று பி-என்பவனுக்குத்தெரியாது. அந்த விலைக்கும் பெறுமானத்திற்குமுள்ள வித்தியாசத்தொகையை எ-என்பவன் பி - என்பவனுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

(b) திரஸ்ட்டியாகிய எ—என்பவன் தன்னுடைய சொந்த தொழிலின் பொருட்டு திரஸ்ட்டுசொத்தை உபயோகிக்கிறான். அப்படி உபயோகித்ததினால் வரும் லாபத்தை எ—என்பவன் தன்னுடைய பிரயோசன காரியின் பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறான்.

(c) ஒரு திரஸ்ட்டியாகிய எ—என்பவன் தனக்குப்பின் வருகிறவன் தனக்கு ஒரு தொகை செலுத்தவதென்பதின்பேரில் தன்னுடைய திரஸ்ட்டிலிருந்து நீங்கிப்போகிறான். அந்தத்தொகையை எ-என்பவன் தன்னுடைய பிரயோசன காரியின் பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறான்

(d) கூட்டுப்பங்குக்காரனாகிய எ-என்பவன் கூட்டுப்பங்கைச் சேர்ந்த பணத்தைக்கொண்டு தன் பெயரால் நிலம் வாங்குகிறான். அந்த நிலத்தை எ-என்பவன் கூட்டுப்பங்கின் பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறான்.

(e) தனக்காகவும் தன்னுடைய கூட்டுப் பங்குக்காரர்களுக்காகவும் ஒரு குத்தகையின் ஷரத்துகளைப்பேசி முடிப்பதற்கு அமர்த்தப்பட்டிருக்கிற எ என்னும் ஒரு பங்குக்காரன் தனக்கு ஒரு லட்சம் ரூபாய் செலுத்தப்படுவதற்காக குத்தகைக்கு விடுகிறவனோடு திருட்டுத்தனமாய் உடன்படிக்கை செய்துகொள்ளுகிறான். அந்த லட்சம் ரூபாயை எ-என்பவன் கூட்டுப்பங்கின் பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறான்.

(f) எ-பி என்பவர்கள் பங்குக்காரர்கள். எ-என்பவன் இறந்துபோகிறான். அந்த கூட்டுப்பங்கு காரியங்களை முடிவுசெய்துபோடாமல், பி-என்பவன் வியாபாரத்தில் ஆஸ்தியையெல்லாம் நிறுத்திவைத்துக்கொள்ளுகிறான். மூலதனத்தில் எ-என்பவனுக்குள்ள பங்கிலிருந்து கிடைக்கும் லாபத்திற்காக எ-என்பவனுடைய சட்ட சம்மதமான பிரதிநிதிக்கு பி-என்பவன் கணக்குசொல்லவேண்டியது.

(g) பி-என்பவனுக்காக குத்தகைக்குப் பெறும்படி அமர்த்தப்பட்ட ஒரு எஜெண்டாகிய எ-என்பவன் தனக்காக அந்த குத்தகையைப் பெற்றுக்கொள்ளுகிறான். அந்த குத்தகையை எ-என்பவன் பி-என்பவனுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறான்.

(h) பி-என்பவனுக்கு கார்டியனாகிய எ-என்பவன் பி-என்பவனுடைய ஆஸ்தியின்பேரிலுள்ள கொதுவை சதுவைகளை குறைந்த விலைக்கு தனக்காக வாங்கிக்கொள்ளுகிறான். அப்படி வாங்கிக்கொண்ட கொதுவை சதுவைகளை எ-என்பவன் பி-என்பவனுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறான். மேலும் தான் வாஸ்தவமாய் என்ன செலுத்தியிருக்கிறானோ அதைமாத்திரம் அவனைச் செலுத்தச்சொல்லி உட்படுத்தக்கூடும்.

அக்கிரமமான அதிகாரஞ் செலுத்தி அடையப்பட்ட லாபம்.

89. அக்கிரமமான அதிகாரஞ் செலுத்தப்படுவதினாலே, வேறொருவனுடைய பாத்தியதைகளுக்கு விரோதமாய் யாதொரு பிரயோசன மடையப்பட்டால், ஐவேஜில்லாமலாவது அப்படி அக்கிரமமாய் அதிகாரஞ் செலுத்தப்பட்டதென்று நோட்டீசு பெற்றாவது அப்படிப்பட்ட பிரயோசனத்தை அடைகிற நபர்-எவனுடைய பாத்தியதைகளுக்கு அப்படி பாதகமுண்டாச்சுதோ அவனுடைய பிரயோசனத்திற்காக அந்தப்பிரயோசனத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

வரையறையுள்ள சொந்தக்காரன் அடையும் பிரயோசனம்.

90. யாதொரு சொத்தை ஆயுசுவரையில் அனுபவிக்கிறவனாவது கொதுவைவைத்துக்கொண்டவனாவது அந்த சொத்தின் கூட்டுசொந்தக்காரனாவது வரையறையுள்ள வேறே சொந்தக்காரனாவது, அப்படிப்பட்டவனாகத் தனக்குள்ள நிலைமையை அவலம்பிப்பதினாலே, அந்த சொத்தில் பாத்தியதையுடைத்தாயிருக்கிற மற்ற நபர்களுடைய சுதந்திரங்களுக்கு விரோதமாய் யாதொரு பிரயோசனமடைந்தாலும், அப்படிப்பட்ட சொந்தக்காரனெவனாவது அந்தசொத்தில் பாத்தியதையுடைத்தாயிருக்கிற சகல நபர்களுக்கும் பிரதிநிதியாயிருப்பவனாக யாதொரு பிரயோசனமடைந்தாலும், அவன் - அந்தப்பிரயோசனமடைவதற்குக் கிரமமாய்ப்பிடித்த செலவிலே எவ்வளவு பாகத்தை அப்படி பாத்தியதை யுடைத்தாயிருருக்கிற நபர்கள் கிரமமாய்ச்செலுத்தவேணுமோ அப்படிப்பட்டபாகம் அவர்களால் மறுபடி செலுத்தப்படத்தக்கதாயும், அப்படி பிரயோசனமடைவதில் கிரமமாய் வருவித்துக்கொள்ளப்பட்ட பொறுப்புகளினின்றும் அதே நபர்களால் விமோசன முண்டாகத்தக்கதாயும், அப்படி அடையப்பட்ட பிரயோசனத்தை அப்படி பாத்தியதையுடைத்தாயிருக்கும் எல்லா நபர்களுடைய பிரயோசனத்திற்காகவும் வைத்துக் கொண்டிருக்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) குத்தகைசொத்தை ஆயுசுவரையில் அனுபவிப்பவனாகிய எ-என்பவன் தன்பெயரால் தன்னுடைய சொந்த பிரயோசனத்திற்காக அந்த குத்தகையைப் புதுப்பித்துக்கொள்ளுகிறான். அப்படி புதுப்பித்துக்கொண்ட குத்தகையை எ-என்பவன் பழையகுத்தகையில் பாத்தியதையுடைத்தாயிருந்த சகலமானவர்களுடைய பிரயோசனத்திற்காகவும் வைத்துக்கொண்டிருக்கிறான்.

(b) ஒரு கிராமம் ஒரு ஹிந்து குடும்பத்தாருக்குச் சொந்தம். அந்த குடும்பத்தாரில் ஒருவனாகிய எ-என்பவன் சர்க்காருக்கு நஜரானாசெலுத்தி, அதினாலே தன்னுடையபெயரை அந்த கிராமத்தின் இனாம்தாரராக தாக்கல்செய்வித்துக்கொள்ளுகிறான். எ-என்பவன் தன்னுடைய பிரயோசனத்திற்காகவும் அந்த குடும்பத்தைச்சேர்ந்த மற்றவர்களுடைய பிரயோசனத்திற்காகவும் அந்த கிராமத்தை வைத்துக்கொண்டிருக்கிறான்.

(c) எ-என்பவன் பி என்பவனிடத்தில் நிலம் கொதுவைவைக்கிறான், பி-என்பவன் அதை அனுபோகத்தில் வைத்துக்கொள்ளுகிறான். (கிஸ்தி செலுத்தப்படாமைக்காக) அந்த நிலமானது ஏலம்போடப்படட்டுமென்றும் அப்போது

அதைத்தானே கிரயத்திற்குவாங்கிக்கொள்ளலாமென்றும் கருதி பி-என்பவன் சர்க்கார் கிஸ்தியைச் செலுத்தாமல் பாக்கி ஏற்படும்படிச்செய்கிறான். அப்பிரகாரமே அந்த நிலம் பி-என்பவனுக்கு விற்கப்படுகிறது. அந்தக்கோதுவையின்பேரில் பாக்கியாயிருக்கிறதொகையும் கோதுவை வைத்துக்கொண்டவனுக்கு தனக்கு கிரமமாய் நேரிட்டசெலவுகளும் மறுபடி செலுத்தப்படத்தக்கதாய், அந்த நிலத்தை பி-என்பவன் எ-என்பவனுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறான்.

இருந்துகொண்டிருக்கும் கந்திராக்ட்டைக் குறித்து நோட்டீசுபெற்று அடையப்பட்ட சொத்து.

91. யாதொரு சொத்து சம்பந்தமாய் அப்போது ஊர்ஜிதத்திலிருந்துகொண்டிருக்கும் எந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்ற நிர்ப்பந்திக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு கந்திராக்ட்டை வேறொரு நபர்செய்திருக்கிறானென்று நோட்டீசுபெற்று யாவனொருவன் அந்தசொத்தை அடைவானாகில், அப்படி அடைகிறவன் அந்த கந்திராக்ட்டு நிறைவேறும்படிச் செய்வதற்கு அவசியமான மட்டும் அப்படிப்பட்ட வேறொருவனுடைய பிரயோசனத்திற்காக அந்த சொத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

திரஸ்ட்டில் வைத்துக் கொண்டிருப்பதற்கு சொத்தை கிரயத்திற்குக் கொள்ள கந்திராக்ட்டு செய்கிற நபர் வாங்குவது.

92. சில பிரயோசனகாரிகளுக்காக திரஸ்ட்டில் வைத்துக்கொண்டிருக்கப்படுவதற்கு சொத்தை கிரயத்திற்கு வாங்க ஒருவன் கந்திராக்ட்டு செய்திருந்து அப்பிரகாரமே அந்த சொத்தை வாங்கினால், அந்த சொத்தை அவன் அந்த கந்திராக்ட்டு நிறைவேறும்படிச் செய்வதற்கு அவசியமானமட்டும் அவர்களுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

ராஜியாய்ப் போகிற கடன் கொடுத்தவர்கள் பலரில் ஒருவன் அந்தரங்கத்தில் பிரயோசனமடைவது.

93. கடன் கொடுத்தவர்கள் தங்களுக்கு வரவேண்டிய கடன்களுக்காக ஒழுங்குசெய்துகொண்டிருந்து அவர்களில் ஒருவன் கடன்பட்டவனோடு ரகசியமாய் ஏற்பாடுசெய்துகொண்டு கடன்கொடுத்த மற்றவர்களுக்குமிஞ்சி தகாதபிரயோசனமடைந்தால், அவன் அப்படி அடைந்த பிரயோசனத்தை அப்படி கடன் கொடுத்தவர்களுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

வெளிப்படையாய் நிபந்தனை ஏற்படுத்தியிராத விஷயங்களிலே ஏற்படுவதாகும் திரஸ்ட்டுகள்.

94. முந்திய பிரிவுகளில் எதிலாவது அடங்குவதல்லாத யாதொரு விஷயத்திலே திரஸ்ட்டு ஏற்படாதிருந்த போதிலும் சொத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறவன் அதில் பிரயோசனகரமான முழு பாத்தியதையை உடைத்தாயிராவிட்டால் அப்படிப்பட்ட விஷயத்திலே அவன் (சங்கதிக்குத் தக்கபடி) அப்படிப்பட்ட பாத்தியதையாவது அதில் நின்றிருக்கிற பாத்தியதையையாவது உடைத்தாயிருக்கும் நபர்களுடைய பிரயோசனத்திற்காக, அவர்களுடைய நியாயமான தாவாக்களை சரிச்சொல்வதற்கு அவசியமானமட்டும் அந்த சொத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) உயிலெழுதினவனாகிய பி-என்பவனுக்கு எக்ஜிக்கியூட்டராயிருக்கும் எ என்பவன் பி-என்பவனுடைய கடன்கள் முழுமையையும் செலுத்திவிடாமலே அவனுடைய ஆஸ்திபை உயிலேற்பாடானவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறான். உயிலேற்பாடானவர்கள் அப்படி பகிர்ந்துகொடுக்கப்பட்ட ஆஸ்தியை பி-என்பவனுக்கு கடன்கொடுத்தவர்களுடைய நியாயமான தாவாக்களை சரிச்சொல்லுவதற்கு அவசியமானமட்டும் அப்படிப்பட்டவர்களுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(b) எ-என்பவன் பிசகினாலே பி-என்பவனுக்காக திரஸ்ட்டி ஹோதாவை வகித்துக்கொண்டவனாய், இந்த திரஸ்டை முன்னிட்டுக்கொண்டு சில தொகைகளை பெற்றுக்கொள்ளுகிறான். அந்த தொகைகளுக்காக கணக்குசொல்லும்படி பி-என்பவன் அவனை நிர்ப்பந்திக்கலாம்.

(c) எ-என்பவன் பி-என்பவனுக்கு ஒருலட்சம் ரூபாய் தானஞ்செய்கிறான், ஆனால் தனக்கு இஷ்டமிருக்கும்போது அந்த தானத்தில் 10,000 ரூயாய்க்கு ரத்துசெய்யும்படியான அதிகாரத்தை பி-என்பவனுடைய அனுமதியின்பேரில் நிறுத்திக்கொள்ளுகிறான். 10,000 ரூபாய்க்கு அந்ததானம் செலாமணியாகாது. பி-என்பவன் அந்தத்தொகையை எ-என்பவனுடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறான்.

பயனைப்பெறுகிறவனுடைய அனுமதி

95. இந்த அத்தியாயத்திலுள்ள முந்திய பிரிவுகளில் எதின்படிக்காவது சொத்தை வைத்துக்கொண்டிருக்கிறவன், அந்த சொத்தை தான் யாருடைய பிரயோ

ளும் உத்தரவாதமும் அசமர்த்ததையும்.

சனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறானோ அப்படிப்பட்டவனுக்கு அந்தசொத்திற்காக திரஸ்டியாயிருந்தாற்போலவே, கூடுமானமட்டில் அதே அலுவல்களைச் செய்யவேண்டியதுமல்லாமல், கூடுமானமட்டில் அதே உத்தரவாதங்களுக்கும் அசமர்த்ததைகளுக்கும் உள்ளாயிருக்கவும் வேண்டியது.

ஆனால் (a) அவன் நியாயமாய் அந்தசொத்தை சாகுபடி செய்தாலும் அந்த சொத்தை வியாபாரத்திலாவது தொழிலிலாவது உபயோகித்தாலும், அப்படி சாகுபடி செய்ததற்காகிலும் உபயோகித்ததற்காகிலும் தான் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காகவும் காலத்திற்காகவும் தான் பிரயோகித்த யுக்திக்காகவும் நியாயமான பிரதிபலன் பெற்றுக்கொள்ள அவன் அர்ஹனாயிருக்கிறான்; (b) அந்த சொத்தை தான் யாருடைய பிரயோசனத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறானோ அவனோடாவது அவன் யாரை முன்னிட்டுக்கொண்டு தாவா செய்கிறானோ அப்படிப்பட்ட யாவரொருவனோடாவது கந்திராக்ட்டு செய்திருப்பதினாலே அவன் அந்தசொத்தை வைத்துக்கொண்டிருந்தால், கோர்ட்டாருடைய உத்தரவுபெறாமலே அவன் அந்தசொத்தையாவது அதில் எவ்வளவையாவது கிரயத்திற்கு வாங்கலாம், குத்தகை அல்லது வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம், அல்லது கொதுவை வைத்துக்கொள்ளலாம்.

நல்ல எண்ணத்தோடு கொள்பவர்களுடைய சுதந்தரங்களுக்குப்பாதகமின்மை.

96. இந்த அத்தியாயத்தில்சொல்லியிருக்கிற எந்த நிபந்தனையினாலும், ஐவேஜுக்காக நல்ல எண்ணத்தோடு கிரயம் பெற்றுக்கொண்டவர்களுடைய சுதந்திரங்கள் பலஹீனப்படவுமாட்டாது, அப்போதைக்கு வழங்கிக்கொண்டிருக்கும் யாதொரு சட்டதிட்டத்திற்குத் தப்பும்படியாக யாதொரு கடமை உண்டாகவுமாட்டாது.

ஷெடியூல்.

ஸ்ட்டாட்டியூட்டு.

சுருக்கமான பெயர்.	இவ்வளவு ரத்து.
வருஷமும் அத்தியாயமும்:—	
மோசங்களைக் குறித்த 2-வது சார்லஸ் ஆளுகையின் 29-வதுளுத்திய ஸ்ட்டாட்டியூட், 3-ம் அத்தியாயம்.	7, 8, 9, 10, 11-வது பிரிவுகள்.

இந்தியா ஆக்ட்டுகள்.

திரஸ்ட்டிகளுடைய அதிகாரங்களையும் சொதுவை வைத்துக்கொள்ளுகிறவர்களுடைய அதிகாரங்களையுங் குறித்த 1866-ளுத்து 28-வது ஆக்ட்டு.	2, 3, 4, 5, 32, 33, 34, 35, 36, 37-வது பிரிவுகள். 39, 43-வது பிரிவுகளிலே "திரஸ்ட்டி" என்கிற வார்த்தை வருகிற இடங்கள் தோறும் அந்த வார்த்தை; 43-வது பிரிவிலே "நிர்வாகம் அல்லது" என்கிற வார்த்தைகளும் "திரஸ்ட்டு சொத்து அல்லது" என்கிற வார்த்தைகளும்.
1877-ம்ளுத்திய 1-வது ஸ்பெஸிபிக் ரிலீப்பு ஆக்ட்டு.	12-வது பிரிவிலே முதல் திருஷ்டாந்தம்.

ACT NO. VI OF 1890.

1890-ம் ௵த்து 6-வது ஆக்ட்டு.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா கவர்னர் ஜனாலவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்டானது 1890-ம் ௵ மார்ச்சு ௴ 7௳ சிறப்புற்றோங்கிய கவர்னர் ஜனாலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு யாவர்க்கும் தெரியும்படி இதனால் பிரசித்தஞ் செய்யப்படுகிறது :—

தரும காரியங்களுககாக நம்பி ஒப்பிக்கப்படும் சோத்தை ஒருவர்பரமாக்கிப் பரிபாலனஞ்செய்வதற்காக நிபந்தனை யேற்படுத்துவதற்குண்டான ஆக்ட்டு.

தரும காரியங்களுக்காக நம்பி ஒப்பிக்கப்படும் சொத்தை ஒருவர் பரமாக்கிப் பரிபாலனஞ்செய்வதற்கு நிபந்தனை யேற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால் இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால் :—

பெயரும் வியாபிக்கு மிடமும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்ட்டை 1890-௵த்து தருமசொத்தைப்பற்றிய ஆக்ட்டென்று சொல்லலாம்.

(2) இது அப்பர்பர்மாவும் ப்ரிடிஷ் பெலுச்சிஸ்டானுமுட்பட ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கின்றது; மேலும்.

(3) 1890-௵ அக்டோபர் ௴ 1௳ இது வழங்கத்தொடங்க வேண்டும்.

அர்த்தம்.

2. இந்த ஆக்ட்டில் "தருமகாரியம்" என்பதனுள் எளியவர்களுக்கு உதவிபுரிவதும், வித்தியா விஷயமும், வைத்திய சம்பந்தமான உதவியும், பொதுவாய் ஜனங்களுடைய உபயோகத்திற்கேற்ற வேறே யாதொரு விஷயத்தை

அபிவிருத்திசெய்வதும் அடங்கும்; மதசம்பந்தமான போதனை அல்லது ஆராதனைக்குமாத்திரம் சம்பந்தப்படுகிறகாரியம் இதனுளடங்காது.

தரும சொத்தின் விஷயமான பொக்கிஷதாரரை நியமிப்பதும் சங்கத்தன்மை யடைவிப்பதும்.

3. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் ஒரு கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தரை அவருடைய உத்தியோகப் பெயராலே யாதொரு பிரதேச கவர்ன்மென்டுக்குட்பட்ட இராச்சியங்களுக்கு தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரராக நியமிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட பொக்கிஷதாரர் - இந்த ஆக்ட்டின் அதிகாரத்தைக்கொண்டு ஸ்தாவர அல்லது ஜங்கமசொத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதற்கும், வைத்து நிர்வாகம் பண்ணுவதற்கும், வேறொருவர் வசம் ஒப்பிப்பதற்கும், பிரதேச கவர்ன்மென்டுக்குட்பட்ட இராஜ்ஜியங்களுக்கு தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் என்கிற பெயரால் தன்னந்தனியே சங்கத்தன்மை (corporate character) யடைந்திருக்கவேண்டியது மல்லாமல், அப்படிப்பட்ட பொக்கிஷதாரர் முறைமையில் தமக்குப்பின் வருபவர்களுக்குத் தம் அலுவலைச்சேர்ந்த சுதந்தரம் நிரந்தரமாயிருந்துகொண்டேவரும் வகையினையும் அந்த ஹோதாவில் ஒரு முத்திரையும் உடையவராவார்; மேலும் அவர் பார்மேலாவது வியாச்சியம் தொடருவதாயிருந்தாலும் அந்த சங்கத்தன்மையமைந்த ஹோதாவிலேயே தொடரலாம்.

சொத்தை பொக்கிஷதாரர் பராமக்குவதற்கான உத்தரவுகள்.

4. (1) எதாவது சொத்து தருமகாரியத்திற்கு நம்பி ஒப்பிக்கப்பட்டிருந்தாலும், அல்லது விநியோகப்படுத்தப்படுவதாயிருந்தாலும், பிரதேச கவர்ன்மென்டார், தங்க ச்கு யுக்தமாகத் தோற்றினல், அதில் பின்கண்டமாதிரியாக மனுசெய்யப்பட்டால், இத்தப்பிரிவிலுள்ள மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பிரதேச கவர்ன்மென்டாரும் மனுசெய்து கொள்ளுகிற நபர் அல்லது நபர்களும் அந்தசொத்தை அல்லது அதிலிருந்துகிடைக்கும் வரும்படியை விநியோகிக்கும் விஷயத்தைப்பற்றித் தங்களுக்குள் உடன்படிக்கை செய்துகொள்ளுகிற ஏற்பாட்டின்படி அந்த சொத்தானது தருமசொத்தின் விஷயமானபொக்கிஷதாரர் பராமாகுமென்று ஸர்க்

கார்கெஜட்டில் விளம்பரமூலமாய் உத்தரவுசெய்யலாம்; அதன்மேல் அந்தசொத்தானது மேற்கண்ட பொக்கிஷதாரர் பரமாகிவிடும்

(2) யாதொரு சொத்தானது இந்தப்பிரிவின்படி தருமசொத்தின்விஷயமான பொக்கிஷதாரர் பரமாகிவிடும்பட்சத்தில், அதற்குச் சம்பந்தமான சகல ஆதாவுகளும் அவரிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

(3) அடியிற்கண்டவைகள் தவிர மற்றப்படி பணத்திற்கு ஈடாயிருக்கும் எவ்விதபத்திரங்களையும் தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதார் பரமாக்குவதற்கு (1) -வது உட்பிரிவின்படி பிரதேச கவர்ன்மெண்டார் யாதொரு உத்தரவையும் செய்யக்கூடாது. மேற்கூறப்பட்ட ஈடுகளாவன;—

(a) இந்தியா கவர்ன்மெண்டாருடைய அல்லது க்ரேட் ப்ரிடனும் அயர்லாண்டும் சேர்ந்த இராஜாங்கத்தாருடைய ப்ராமிஸரிநோட்டுகள் - டிபென்ச்சர்கள் ஸ்ட்டாக் முதலிய பத்திரங்கள்;

(b) இந்தியா ரெவினியூவின்மேல் இம்பீரியல் பார்லிமெண்ட் என்னும் மந்திர லோசனை சபையாரால் சுமத்தப்பட்ட பாண்டுகள் - டிபென்ச்சர்கள் - (அன்னுயிட்டி என்னும்) வருஷவாரி வர்த்தனைகள்;

(c) ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்ட்டேட் ஸெக்ரெடெரியவர்களால் வட்டி உறுதிசெய்யப்பட்டிருப்பதாய், ரெயில்வே கம்பெனி முதலிய கம்பெனிகளைச்சேர்ந்த ஸ்ட்டாக் அல்லது டிபென்ச்சர்கள், அல்லது அந்தக்கம்பெனிகளிலுள்ள (Shares) பங்குகள் ;

(d) ப்ரிடிஷ் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட யாதொரு ஆக்ட்டினுல் கிடைத்திருக்கும் அதிகாரத்தைக்கொண்டு யாதொரு பிரதேச அதிகாரியாலாவது அவர் பட்சத்திலாவது பிறப்பிக்கப்பட்ட டிபென்ச்சர்கள் அல்லது பணத்திற்கு ஈடாயிருக்கும் வேறே பத்திரங்கள்;

(e) இதைப்பற்றி ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜனாலவர்கள் செய்கிற யாதொரு உத்தரவினுல் வெளிப்படையாய் அதற்கென்றே அதிகாரங்கொடுக்கப்பட்டு உண்டாகிய ஈடு.

(4) சொத்தை தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பாமாக்குவதற்கு இந்தப்பிரிவின்படி செய்யப்படும் உத்தரவினுல் அவர் அந்த சொத்தைப் பரிபாலனஞ் செய்யவேண்டியதுமில்லை, அப்படி பரி பாலனஞ்செய்யவேண்டியவராக என்னப்படவுமாட்டார். அந்த சொத்தின் பரிபாலனவிஷயமாய் ட்ரஸ்ட்டீ (தர்மகர்த்தா) யனுவலைப்பார்க்கும்படி கட்டளையிடப்படவுமாட்டார், அந்தப்படி கட்டளையிடப்பட்டவராக என்னப்படவுமாட்டார்.

5. (1) பிரதேச கவர்ன்மென்டார் - தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினுல், இதில் பின்கண்டமா ரியாக மனு செய்யப்படுவதன்மேல் மனுசெய்த நபர் அல்லது நபர்களுடைய சம்மதியைப் பெற்றுக்கொண்டு, தரும சொத்தின்விஷயமான பொக்கிஷதாரர் பரமாக்கப்பட்டிருக்கிற அல்லது அவர் பாமாக்கப்படப்போகிற யாதொரு சொத்தைப் பரிபாலனஞ் செய்வதற்கு ஏற்பாடுசெய்யலாம்; அந்த ஏற்பாட்டில் அந்தசொத்தைப் பரிபாலனஞ்செய்யும் பொருட்டு அப்படிப்பட்ட பொக்கிஷதாரரால்லாத ஒரு நபரையாகிலும் பொக்கிஷதாரரும் சேர்ந்திராதபடிக்குள்ள நபர்களையாகிலும் பெயரைக்கொண்டு அல்லது உத்தியோகமுறைமையைக் கொண்டு நியமிக்கலாம்.

பொக்கிஷதாரர் பாமாக்கப்பட்ட சொத்தைப் பரிபாலனஞ்செய்வதற்கு ஏற்பாடுகள்.

(2) பிரதேச கவர்ன்மென்டார்-தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினுல், இதில் பின் கண்டமாதிரியாக மனுசெய்துகொள்ளப்படுவதன் மேல், மனுசெய்த நபர் அல்லது நபர்களுடைய சம்மதியைப்பெற்றுக் கொண்டு, இந்தப்பிரிவின்படி செய்யப்பட்டிருக்கிற ஏற்பாட்டைத்திருத்தலாம், அல்லது அதற்குப்பர்தியாக வேறொன்றைச்செய்யலாம்;

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்பட்டாவது திருத்தப்பட்டாவது பர்த்தி செய்யப்பட்டாவதுள்ள ஏற்பாடானது - இந்தப்பிரிவி லுள்ள மற்றநிபந்தனைகளுக்குட்பட்டு, இதற்கென்று பிரதேசகவர்ன்மென்டாரால் நியமிக்கப்படுகிற தேதியில் அநுஷ்டானத்திற்கு வந்து, அது எதற்குச் சம்பந்தப்படுகிறதோ அந்தசொத்து தருமசொத்தின் விஷயமானபொக்கிஷதாரர் பரமாய் வைக்கப்பட்டிருக்கிறவரையிலாவது அவ்வேற்பாடு திருத்தப்படுகிறபரியந்தமாவது அவ்வேற்பாட்டுக்

குப் பர்த்தியாய் வேறே ஏற்பாடு செய்யப்படுகிறபரியந்தமாவது செலாவணியாக வேண்டும்.

(4) அப்படிப்பட்ட ஏற்பாடு அநுஷ்டானத்துக்குவரும்போது, அது எதன்விஷயமாய்ச் செய்யப்பட்டதோ அதைப்பற்றி ஏதாவது டிக்ரி அல்லது கட்டளை இருந்து அது இந்த ஏற்பாட்டுக்கு எவ்வித திலாகிலும் விரோதமாயிருக்கும்பட்சத்தில் அந்த அளவுக்கு அது ரத்தாகி இந்த ஏற்பாடு செலாவணியாகவேண்டும்; அப்படிச் செலாவணியாகிற விஷயத்தைப்பற்றி எந்த கோர்ட்டாரும் ஆட்சேபிக்கக்கூடாது; அன்றியும் எந்த கோர்ட்டாரும் இந்த ஏற்பாட்டின் நிபந்தனைகளுக்கு விரோதமாயாகிலும் அதற்கு எவ்விதத்திலும் மீறியாகிலும் அதற்குதிசமாகவாகிலும் இந்த ஏற்பாடு சம்பந்தப்படுகிற சொத்தின் பரிபாலன விஷயமாக யாதொரு டிக்ரி அல்லது கட்டளையைப் பிறப்பிக்கக் கூடாது.

(5) அப்படிப்பட்ட ஏற்பாடுசெய்யும்போது, சொத்தை நம்பி தருமத்திற்கு வைத்தவருடைய மனோபீஷ்டம் இன்னதென்று தெரிந்துகொண்டு அதைஎவ்வளவுமட்டில் நிறைவேற்றுவது நியாயமென்று பிரதேசகவர்ன்மென்டாருக்குத் தோற்றுகிறதோ அவ்வளவுமட்டில் அதை நிறைவேற்றவேண்டும்.

(6) தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாக்கப் பட்டிராத சொத்தைப் பரிபாலனஞ்செய்யும் விஷயமாய், அவர்பரமாக்கப்படுமுன்னமே, இந்தப் பிரிவின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்த சொத்து மேற்கண்ட பொக்கிஷதாரர் பரமாகிற பரியந்தம் அந்தயேற்பாடு அநுஷ்டானத்திற்கு வரமாட்டாது.

சொத்தை ஒருவர் பரமாச்குவதற்கான உத்தரவுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் மனுசெய்யும் விதம்.

6. (1) அடுத்து முந்திய இரண்டு பிரிவுகளிலும் உதகரிக்கப்பட்ட மனுவானது—

(a) சொத்து தருமகாரியத்திற்காக முன்னமேயே நம்பி ஒப்பித்துவைக்கப்பட்டிருந்தால், அப்படி நம்பிவைத்த ட்ரஸ்ட் சொத்தின் பரிபாலனவிஷயமாய் பிரவர்த்திக்கிற நபராலும், அல்லது அப்படி பிரவர்த்திக்கிறவர்கள் ஒருவருக்கதிகப்படும்பட்சத்தில் அந்த நபர்கள்

யாவராலும் அல்லது அவர்களில் பாதிக்கு அதிகப்பட்டவர்களாலும்.

(b) சொத்து நம்பி ஒப்பிக்கப்பட்டு அப்படிப்பட்ட காரியத்திற்கு விநியோகிக்கப்படுவதாயிருந்தால், அப்படி அதை வினியோகிப்பதாய் உத்தேசிக்கிற நபராலும் அல்லது நபர்களாலும்.

செய்யப்படவேண்டும்.

(2) இந்தப் பிரிவின் விஷயங்களுக்காகத் தருமகாரியத்திற்கு நம்பி ஒப்பிக்கப்படும் சொத்தின் ட்ரஸ்ட்டியாயிருந்து இறந்துபோனவனுடைய எக்ஸிகியூட்டர் அல்லது அட்மினிஸ்ட்ரேட்டரானவர் ட்ரஸ்ட்சொத்தின் பரிபாலன விஷயமாய்ப் பிரவர்த்திக்கிற நபரென்று எண்ணப்படுவார்;

ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அதிகாரங்களைச் செலுத்துவது.

7. (1) ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் 4-வது, 5-வது பிரிவுகளினால் பிரதேசகவர்ன்மெண்டாருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் யாவற்றையுமாவது அவைகளிலெதையாவது செலுத்தலாம்.

(2) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்கள் யாதொரு சொத்தின்விஷயமாய் அந்த அதிகாரங்களிலெதையாவது தாம்செலுத்துவதாய் உத்தேசித்திருப்பதை பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்தியிருக்கையில், அந்த பிரதேசகவர்ன்மெண்டார் கவர்னர்ஜனரலவர்களுடைய அநுமதியை முன்னதாகவே பெற்றுக்கொள்ளாமல் மேற்கண்ட சொத்தின்விஷயமாய் அந்த அதிகாரங்களைச்செலுத்தக்கூடாது.

பொக்கிஷதாரர் ட்ரஸ்ட்டியாக மாத்திரமிருக்கவேண்டியதென்பது.

8. (1) இந்த ஆக்ட்டின் நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரரானவர் இந்த ஆக்ட்டின்படி எதைச்சேர்ந்தசொத்து அந்தந்தகாலத்தில் அவர் பரமாக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு ட்ரஸ்ட்சொத்தின் பரிபாலனவிஷயத்தில் மேற்கண்ட பொக்கிஷதாரர் ஹோதாவில் பிரவர்த்திக்கக்கூடாது.

(2) அப்படிப்பட்ட பொக்கிஷதாரர் அந்தந்தகாலத்தில் மேற்கண்டபடி தன்பரமாக்கப்பட்ட ஒவ்வொரு சொத்தும் எவ்வளவுமட்டில் பணத்திற்கு ஈடாயிருக்கும் பத்திரங்களாயிருக்கின்றனவோ அவ்வளவுமட்டில் அந்தசொத்திற்கு பிரத்தியேகமாய்க் கணக்குவைக்கவேண்டும்; மேலும் அவர் அப்படிப்பட்டசொத்தை அல்லது அதன் வரும்படியை 4-வது பிரிவின்படி அவர் பரமாக்குவதற்கான உத்திரவிலாவது, 5-வது பிரிவின்படி ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அதிலாவது, அல்லது அந்த இரண்டு தஸ்தவேஜுகளிலுமாவது அதற்காக ஏற்பட்டிருக்கும் நிபந்தனைப்பிரகாரம் விநியோகப்படுத்தவேண்டும்.

(3) மேற்கண்டபடி அவர்பரமாக்கப்பட்ட சொத்தில் ஈட்டுப்பத்திரங்களாயிராத சொத்தை அப்படிப்பட்ட பொக்கிஷதாரர்-யாருடைய உத்திரவின்படி அந்த சொத்து அவர் பரமாயிற்றோ அந்த அதிகாரியினிடத்திலிருந்து தனக்குக் கிடைக்கிற எவ்வித சிறப்பான உத்தரவுக்கும் உட்பட்டு, அந்த சொத்தானது ட்ரஸ்ட்சொத்தின் பரிபாலனவிஷயத்தில் பிரவர்த்திக்கிற நபர்கள் பரமாக்கப்பட்டிருந்தாலெப்படியோ அப்படியே அவர்கள் தங்கள் வசபடுத்திக்கொண்டு நிர்வகித்து விசாரணைசெய்யவும் அதில் கிடைக்கிற வரும்படியை விநியோகஞ்செய்யவும் அநுமதிகொடுக்கவேண்டும்.

பொக்கிஷதாரர் பரமாக்கப்பட்ட சொத்துக்களின்ஜாபிதாவை வருஷந்தோறும் பிரசுரஞ்செய்வது.

9. தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர், இந்த ஆக்டின்படி அந்தந்த காலத்தில் தம் பரமாக்கப்பட்டிருக்கிற சகலமான சொத்துகளுக்கும் ஜாபிதாவொன்றையும் அடுத்து முந்திய பிரிவைச்சேர்ந்த (2)-வது உட்பிரிவின்படி தன்னால் வைக்கப்பட்டிருக்கிற சகலமான கணக்குகளையும்பற்றிய கோஷ்வாராவொன்றையும் பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்கிறகாலத்தில் அவ்வவ்விடத்திய ஸர்க்கார் கெஜெட்டில் வருஷந்தோறும் பிரசுரஞ்செய்விக்கவேண்டும்.

பொக்கிஷதாரருடைய அலுவல்களும் அதிகாரஙக

10. (1) தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் தனிப்பட்ட ட்ரஸ்டியாகவிருக்கவேண்டும்; மேலும் அவர் அப்படிப்பட்ட பொக்கிஷதாரர் ஹோதாவில், இந்த ஆக்டின் நிபந்தனைகளின்படிக்கன்றி

ளும் இன்னவை யென்று வரைய றை.

மற்றப்படி யாதொரு சொத்தையும் கைப்பற்றித் தம்வசத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது; மேலும் அந்தநிபந்தனைகளுக்குட்பட்டு தம் பரமாக்கப்பட்டிருக்கிற யாதொரு சொத்தை அது தம் பாரமாயிருந்ததினின்று நீக்குவதற்கான டிக்ரீயினுக்குட்பட்டும் அல்லது அவ்விதம் நீக்கப்பட்டிருப்பதாய் யாருடைய உத்தரவின்படிசொத்து தம் பரமாயிற்றோ அந்த அதிகாரியினிடத்திலிருந்து பிறக்கும் கட்டளைக்கிணங்கியுந் தவிர மற்றப்படி வேறொருவரிடத்தில் ஒப்பிக்கவுங்கூடாது.

(2) பொக்கிஷதாரர் தம் பரமாக்கப்பட்டிருக்கிற யாதொரு சொத்தை விற்பனைசெய்யவாவது வேறுவகைசெய்யவாவது வேண்டியதென்றும் யாரிடத்திலிருந்து அப்படிப்பட்ட கட்டளை பிறந்ததோ அந்த அதிகாரியினிடத்திலிருந்து அநுமதி பெற்றுக்கொள்வதன் மேல் விற்பனை செய்வதிலாகிலும் வேறுவகை செய்வதிலாகிலும் கிடைக்கிறபணத்தைக்கொண்டு 4-வது பிரிவு 3-வது உட்பிரிவைச் சேர்ந்த (a), (b), (c) (d), அல்லது (e) குறிப்பிட்ட பாகங்களிற் கண்டிருக்கிற பணத்திற்கான யாதொரு பத்திரத்தையாவது அசையாப் பொருளையாவது வாங்கவேண்டியதென்றும் அப்படிப்பட்ட கட்டளையில் கண்டிருக்கலாம்.

(3) தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாயிருக்கிற எந்த சொத்தாவது இந்தப் பிரிவின்படி பிரதேச கவர்ன்மெண்டாராலாகிலும். ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்களாலாகிலும் பிறப்பிக்கப்படும் கட்டளைப்பிரகாரம் அப்படி அவர் பரமிருப்பதினின்றும் நீக்கப்படும்பட்சத்தில், அது அதன் பரிபாலன விஷயமாயப் பிரவர்த்திக்கிற நபர் அல்லது நபர்கள் பரமாகி எந்த நம்பிக்கையின்மேல் பொக்கிஷதாரர்வசமிருந்ததோ அதே நம்பிக்கையின்மேல் அவன் அல்லது அவர்களுடைய வசத்திலிருக்கவேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் பொக்கிஷதாரர் உத்தியோகம் தொடர்ச்சியாயிருப்

11. தருமசொத்தின்விஷயமான பொக்கிஷதாரராய் நியமிக்கப்பட்டிருக்கிற கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர் எந்த உத்தியோகத்திலிருக்கிறரோ அந்த உத்தியோகம் எடுபட்டுப்போனாலும் அல்லது அதன் பெயர் மாற்றப்பட்டாலும் அப்பொழுது ஆலோ

பதற்கான நியமனம்.

சனை சபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்கள் அதே அல்லது வேறொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரை அவருடைய உத்தியோகப்பெயராலே அப்படிப்பட்ட பொக்கிஷதாரராய் நியமிக்கலாம்; அதன்மேல் பின்சொல்லப்பட்ட உத்தியோகமுடையவர் இந்த ஆக்ட்டின் காரியங்களின்பொருட்டு முந்தி உத்தியோகத்திலிருந்தவருக்குப் பின் அந்தவேலைபார்க்கிறவராக எண்ணப்படுவார்.

ஒரு பொக்கிஷதாரர் மற்றொரு பொக்கிஷதாரருக்கு சொத்தை ஒப்பிப்பது.

12. யாதொரு பிரதேச கவர்ன்மெண்டாருக்குட்பட்ட இராச்சியங்களின் எல்லைகள் மாற்றப்பட்ட காரணத்திலாவது வேறே எந்தக் காரணத்தினாலாவது தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாயுள்ள யாதொரு சொத்தாவது அதேமாதிரியாகிய வேறொரு பொக்கிஷதாரர் பரமாகவேண்டியதென்று ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்களுக்குத் தோன்றுகிறபட்சத்தில், அவர்கள் அந்தசொத்து அவ்வாறாகவேண்டியதென்று உத்தரவு செய்யலாம்; அதன்மேல் அந்த சொத்து இந்த ஆக்ட்டின்படி அந்த மற்றொரு பொக்கிஷதாரர் பரமாக ஆதியிலேயே வந்திருந்ததாலெப்படியோ அதுபோல இந்த ஆக்ட்டின் காரியங்களுக்காக பூரணமாயும் பலிதமாயுமிருக்கும்படி அந்த பொக்கிஷதாரர் பரமாகவும் அவருக்குப்பின்வேலைபார்க்கிறவர்கள் பரமாகவும் இருக்கவேண்டும்.

நமூனாக்களேற்படுத்தவும் விதிகள் செய்யவும் அதிகாரம்.

13. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்கள் இந்த ஆக்ட்டின்படிக்கான எந்த நடவடிக்கைகளுக்காக நமூனாக்களேற்படுத்த வேண்டியதென்று அபிப்பிராயப்படுகிறார்களோ அவைகளுக்காக நமூனாக்கள் ஏற்படுத்தலாம்; மேலும்—

(a) இரண்டு அல்லது இரண்டுக்குமேற்பட்ட பிரதேச கவர்ன்மெண்டாருக்குட்பட்ட பிரதேசங்களில் ஜங்கமமாகவாகிலும் ஸ்தாவரமாகவாகிலுமிருக்கிற சொத்தின் விஷயமாய் இந்த ஆக்ட்டின்படி கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைச் செலுத்தவேண்டிய பிரதேச கவர்ன்மெண்டார் இன்னாரென்பதை நிர்ணயிப்பதற்காகவும்,

(b) இந்த ஆக்டின்படி ஏதாவது தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பராமரிக்கப்பட்டிருக்கிறசொத்தின் விஷயமாய் கவர்ன்மென்டாருக்குச் செலுத்தவேண்டிய கட்டணம் இவ்வளவென்பதை நிர்ணயிப்பதற்காகவும்,

(c) 5-வது பிரிவின்படி ஏற்பாடுகள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னாவது செய்யப்படுவதற்குமுன்னாவது அவைகள் அல்லது அவைகளின் திருத்துப்பாடுகள் இன்னின்னவிஷயங்களில் இன்னின்ன மாதிரியாக பிரசுரஞ் செய்யப்படவேண்டுமென்பதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(d) தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் கணக்குகளை இன்ன நமூனுக்களின்படி வைக்கவேண்டுமென்பதையும் அந்த கணக்குகள் இன்னமாதிரியாகப் பரிசோதனை செய்யப்படவேண்டு மென்பதையும் நிர்ணயிப்பதற்காகவும்,

(e) பொதுவாய் இந்த ஆக்ட்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்காகவும்,

இதற்கு ஒற்றுமையாக எந்த விதிகளைச்செய்வது யுக்தமென்று தாம் அபிப்பிராயப்படுகிருரோ அந்த விதிகளைச் செய்யலாம்.

கவர்ன்மெண்டாருக்கும் பொக்கிஷதாரருக்கும் நேரிடுகிற நஷ்டத்தை விமோசனஞ் செய்வது.

14. இந்த ஆக்ட்டின்படி செய்யப்பட்டதாகவாவது செய்யப்பட்டதாகப் பொருள்படுவதாகவாவதுள்ள யாதொரு விஷயமாகவாகிலும் இந்த ஆக்ட்டின்படி கவர்ன்மென்டார் செய்யவேண்டியதாயிருக்கிற யாதொரு வேலையைச்செய்ய அசட்டைபண்ணப்பட்டதென்று சொல்லப்பட்ட விஷயமாகவாகிலும் செய்யாமல் விடப்பட்டதென்று சொல்லப்பட்ட விஷயமாகவாகிலும் இந்த ஆக்ட்டினால் கவர்ன்மென்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற யாதொரு அதிகாரங்களைச் செலுத்தும் விஷயத்திலாகிலும் அப்படிச் செலுத்தாமல் தவறுகிறவிஷயத்திலாகிலும் கவர்ன்மென்டார்மீது எவ்வித வியாச்சியமும் தொடரக்கூடாது; அல்லாமலும் யாதொரு தருமகாரியத்திற்காக சொத்தானது நம்பி ஒப்பிக்கப்படுவதற்கு உள்ளாகாமலிருக்கிறதென்கிற ஹேதுவின்மேல் தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பராமரிருந்த சொத்தை வேறுபடுத்துவதற்காகவாவது, அந்த பொக்கிஷதாரர்

வேண்டுமென்று அசட்டைபண்ணியதினாலாகிலும் செய்யவேண்டிய வொன்றைச் செய்யாமற்போனதினாலாகிலும் நஷ்டம் அல்லது துர் விநியோகம் நேரிட்டிருக்கிற பட்சத்தில், அவர் பரமாயிருந்த யாதொரு சொத்தாகிலும் அதன் வரும்படியாகிலும் நஷ்டம் அல்லது துர் விநியோகமானதற்காக, அவரைப் பொறுப்பாளியாக்குவிப்பதற்காக வாவது உத்தரவாதியாக்குவிப்பதற்காகவாவதன்றி மற்றப்படி அவர் மீது யாதொரு வியாச்சியமும் தொடரக்கூடாது.

அட்வோகேட் ஜனரல், அபீஷியல் ட்ரஸ்ட்டீ இவர்களைப்பற்றி நிவாரணை.

15. யாதொரு தருமவிஷயமாகப் பிரவர்த்திக்க இராஜதானியிலே அட்வொகேட் ஜனரலுக்குள்ள அதிகாரத்தைப்பற்றி 3-வது ஜார்ஜ் அவர்களுடைய ஆளுகையின் 53-வது ஆண்டில்பிறந்த ஸ்ட்டாட்டியூட்டிலுள்ள 155-ம் அத்தியாயத்தின் 111 - வது பிரிவாவது, அபீஷியல் ட்ரஸ்ட்டீயினிடத்தில் தரும காரியத்திற்காக சொத்தை நம்பி ஒப்பிப்பதைப்பற்றி (அபீஷியல் ட்ரஸ்டீ உத்தியோக மேற்படுத்துவதற்கான ஆக்ட்) 1864ஸ்த்திய 17-வது ஆக்ட் 8, 9, 10, 11-வது பிரிவுகளாவது வழங்குவதற்குத் தடையாயிருப்பதாக இந்த ஆக்ட்டிலுள்ளதெதையும் அர்த்தம் பண்ணக்கூடாது.

ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்களுக்குப் பொதுவாய் மேல் விசாரணைசெய்யும் அதிகார முண்டென்பது.

16. பிரதேச கவர்ன்மெண்டார் இந்த ஆக்ட்டின்படி தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்துகையில் ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்களுடைய மேல்விசாரணைக்குட்பட்டிருக்க வேண்டும்.

1920-ம் வருஷத்து 14-வது ஆக்ட்டு.

தருமசம்பந்தமாயும் மதசம்பந்தமாயும் உள்ள ட்ரஸ்டுகளின் பரிபாலன விஷயமாய் முன்னிலும் நன்ருய் மேல் விசாரணை புரிவதற்காக நிபந்தனை ஏற்படுத்துவதற்கான ஆக்ட்

தருமசம்பந்தமான அல்லது மதசம்பந்தமான பொதுக்காரியங்களுக்காக உண்டாக்கப்பட்ட ட்ரஸ்டுகள் விஷயமாய்ச் சங்கதி தெரிந்து கொள்வதற்கு சௌகரியங்கள் ஏற்படுத்துவதும், அப்படிப்பட்ட ட்ரஸ்டுகளைச் சேர்ந்த ட்ரஸ்டிகள் சில விஷயங்களில் கோர்ட்டாரின் உத்தரவுகளைப் பெறக்கூடியவர்களாயிருக்கும்படி செய்வதும், அப்படிப்பட்ட ட்ரஸ்டுகளைச்சேர்ந்த ட்ரஸ்டிகளுக்கு விரோதமாய்க் கொண்டு வரப்படும் சில வியாஜ்ஜியங்களில் பிடிக்கும் செலவைச் செலுத்துவதற்காக விசேஷ நிபந்தனை ஏற்படுத்துவதும் யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிறதென்னவென்ருல் :—

சுருக்கமான பெயரும், வியாபகமும்.

1. (1) இந்த ஆக்ட்டை, தருமசம்பந்தமாயும் மதசம்பந்தமாயும் உள்ள ட்ரஸ்டுகளைச் குறித்த 1920-ம் வருஷத்து ஆக்ட் என்று சொல்லாம்.

(2) இது-ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது:

ஆனுல், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், இந்த ஆக்டாவது குறிப்பிடப்பட்ட அதன் யாதொரு பாகமாவது குறிப்பிடப்பட்ட யாதொரு மாகாணம் அல்லது விஸ்தீர்ணத்திலாகிலும் குறிப்பிடப்பட்ட யாதொரு ட்ரஸ்ட் அல்லது வகுப்பைச் சேர்ந்த ட்ரஸ்டுகளின் விஷயத்திலாகிலும் பிரயோகப்படாதென்று கட்டளையிடலாம்.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே, சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால், "கோர்ட்" என்பது-டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் அவர்களின் கோர்ட் என்ருவது இது விஷயமாய் பிரதேசகவர்ன்மெண்டாரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறேயாதொரு கோர்ட்என்ருவது அர்த்தமாவதுமல்லாமல், ஸிவில் விவகாரங்களில் சாதாரண அசல் விசாரணை அதிகாரத்தைச் செலுத்துகையில் ஹைகோர்ட் என்பதும் அதில் அடங்கும்.

தருமசம்பந்தமான அல்லது மதசம்பந்தமான ட்ரஸ்டுகளின் விஷயத்தில் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள அதிகாரம்.

3. இந்த ஆக்டில் இதில் பின்னல் நிபந்தனை கண்டிருக்கிறபடிக் கன்றி மற்றப்படி, தருமசம்பந்தமான அல்லது மத சம்பந்தமான ஒரு பொதுக்காரியத்துக்காக உண்டாக்கப்பட்ட அல்லது ஏற்கனவே இருக்கிற வெளிப்படையாயுள்ள அல்லது வெளிப்படையாயிராமல் ஊகிக்கப்படவேண்டியதாயுள்ள யாதொரு ட்ரஸ்டில் பற்றுள்ள யாதொரு நபர் - அடியிற்கண்ட எல்லா கட்டளைகளுமாவது அவைகளில் எதுவாவது கண்டுள்ள ஒரு உத்தரவைப் பெறுவதற்காக, அந்த ட்ரஸ்டுக்குச் சம்பந்தப்பட்ட சொத்தில் முக்கியாம்சமான யாதொரு பாகம் எந்தக் கோர்ட்டாரின் அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் இருக்கிறதோ அந்த கோர்ட்டாருக்கு மனுமூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; அக்கட்டளைகளாவன :—

(1) ட்ரஸ்டின் தன்மையையும் நோக்கங்களையும் குறித்தும் ட்ரஸ்டுக்குச் சம்பந்தப்பட்ட சொத்தின் விலைமதிப்பு, நிலைமை, நிர்வாகம், வினியோகம் ஆகிய இவைகளைக்குறித்தும் அதற்குச் சொந்தமான வரும்படியைக் குறித்துமாவது இந்த விஷயங்களில் எதைக் குறித்தாவது விவரங்களைக் கோர்ட்டார் மூலமாய் மனுதாருக்கு சவதரிக்கும்படி ட்ரஸ்டிக்குக் கட்டளையிடுவதும்;

(2) ட்ரஸ்டைச் சேர்ந்த கணக்குகளைப் பரீட்சித்து தணிக்கை செய்யும்படி கட்டளையிடுவதும்;

ஆனல், எந்த நபரும்-மனுவின் தேதிக்கு மூன்று வருஷத்துக்கு மேற்பட்டு முன்னதாயுள்ள ஒரு கால அளவுக்குச் சம்பந்தப்பட்ட

கணக்குகள் விஷயமாய் அப்படிப்பட்ட யாதொரு கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளக்கூடாது.

மனுவில் காண வேண்டிய விவரங்களும், அதில் உறுதிமொழி எழுதுவதும்.

4. (1) மனுதாரர் எந்த விதமாய் ட்ரஸ்டில் தமக்குப் பற்று இருக்கிறதென்று ஆதாரம் பாராட்டுகிறாரோ அதை மனுவில் காணவேண்டும்; மேலும் அதில், என்ன விவரங்களைப் பெறவேண்டுமென்றும் என்ன தணிக்கை செய்யப்படவேண்டுமென்றும் அவர் கோருகிறாரோ அதை சாத்தியமானவரையில் குறிப்பிடவேண்டும்.

(2) மனு எழுத்துமூலமாய் இருக்கவேண்டியதுமல்லாமல், ப்ளெய்ன்டுகளில் கையெழுத்து பண்ணுவதைக் குறித்தும் அவைகளில் உறுதிமொழி எழுதுவதைக்குறித்தும் 1908-ம் வருஷத்து 5-வது சிவில்விவகார விசாரணைச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட மாதிரியே மனுவில் கையெழுத்திட்டு உறுதிமொழி எழுதவும் வேண்டும்.

மனுவைப்பெறுவதன்மேல் நடத்த வேண்டிய நடவடிக்கை.

5. (1) 3-வது பிரிவின்படி ஒரு மனுவைப் பெறுவதன்மேல். கோர்ட்டார் தங்களுக்கு அவசியமென்று தோற்றக்கூடிய ஏதேனும் சாக்ஷியத்தை எடுத்துக்கொண்ட பிறகும் விசாரணை செய்தபிறகும், மனு எதற்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த ட்ரஸ்ட் இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற ட்ரஸ்ட் என்றும் அந்த ட்ரஸ்டில் மனுதாருக்குப் பற்று இருக்கிறதென்றும் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் - அந்த மனுவை விசாரிப்பதற்கு ஒருதேதியை நிச்சயிக்க வேண்டியதுமல்லாமல், அப்படி நிச்சயிக்கப்பட்ட தேதியைக்குறித்த நோடிஸ் சகிதமாய் அந்த மனுவின் நகலொன்றை, ட்ரஸ்டிக்கும் வேறே எவருக்கு மனுவைப்பற்றிய நோடிஸ் கொடுக்கப்படவேண்டுமென்று தாங்கள் அபிப்பிராயப்படுகிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு நபருக்கும் சேர்ப்பிக்கும்படி செய்யவும் வேண்டும்.

(2) அந்த மனுவை விசாரிப்பதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதியிலாவது அந்த விசாரணை அதற்குப் பிந்திய எந்த தேதிக்குத் தள்ளிப்போடப்படக்கூடுமோ அந்தத் தேதியிலாவது, கோர்ட்டார் - மனுதாரரையும், ட்ரஸ்டி ஹாஜரானால் அவரையும், நோடிஸ் காரணமாக

எவர் ஹாஜராயிருக்கிறாரோ அல்லது எவர் விசாரிக்கப்படவேண்டுமென்று தாங்கள் கருதுகிறார்களோ அப்படிப்பட்ட வேறே யாதொரு நபரையும் விசாரிக்கத் தொடங்கவேண்டியதுமல்லாமல், பின்னும் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற விசாரணைகள் எவைவேனுமிருந்தால் அந்த விசாரணைகளையும் செய்யவேண்டும். முதல் விசாரணைக் காலத்திலாவது கோர்ட்டார் அனுமதிகொடுக்கக்கூடிய காலத்துக்குள்ளாவது ட்ரஸ்டியானவர் தம்முடைய வழக்கின் விவரங்கள் அடங்கிய ஸ்டேட்மென்ட் ஒன்றை எழுதிக்கொடுக்கலாம்; அப்படிப்பட்ட ஸ்டேட்மென்ட் எழுதிக்கொடுக்கவேண்டுமென்று கோர்ட்டார் உத்தரவு செய்தால், அவர் அந்தப்படியேஎழுதிக்கொடுக்கவேண்டும். அவர் எழுத்து மூலமான ஸ்டேட்மென்ட ஒன்றைக் கொடுக்கும்பட்சத்தில், ப்ளீடிங் என்னும் வாதபத்திரங்களில் கையெழுத்துசெய்து உறுதிமொழி எழுதுவது விஷயமாய் 1908-ம் வருஷத்து 5-வது ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற மாதிரியாக அந்த ஸ்டேட்மென்டில் கையெழுத்திட்டு உறுதிமொழி எழுதவேண்டும்.

(3) மனுவைப்பற்றி விசாரிக்கும்போது யாதொரு நபர் ஹாஜராகி ட்ரஸ்ட் கிடையாதென்று மறுத்தோ அல்லது அது இந்த ஆக்ட் சம்பந்தப்படுகிற ட்ரஸ்டல்லவென்று மறுத்தோ, அந்தப்படியே நிர்ணயிக்கப்படுவதற்காகவும் வேறே யாதொரு தகுந்த பரிகாரம் பெறுவதற்காகவும் மூன்று மாதத்துக்குள் வியாஜ்ஜியம் தொடருவதாக ஒப்புக்கொண்டால், கோர்ட்டார் நடவடிக்கைகளை நிறுத்தும்படி உத்தரவுசெய்து, அந்தப்படி வியாஜ்ஜியம் தொடரப்பட்டால் அந்த வியாஜ்ஜியம் முடிவாய்த் தீர்மானிக்கப்படுகிறவரையில், ஷை நடவடிக்கைகளை நிறுத்தியே வைத்திருக்கவேண்டும்.

(4) மேலே கண்டபடி ஒப்புக்கொள்ளப்படாவிட்டாலும், மூன்று மாதம் கழிந்த பிறகு அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் எதுவும் தொடரப்படாவிட்டாலும், கோர்ட்டாரே பிரஸ்தாப விஷயத்தைத் தீர்மானம் செய்யவேண்டும்.

(5) (2) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டுள்ள விசாரணை முடிவானதன் மேல், கோர்ட்டார் -மனுவைத் தள்ளிவிடவாவது வேண்டும், அதன்மேல் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவு செய்யவாவது வேண்டும்:

ஆனால், (3) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் வியாஜ்ஜியம் தொடரப்பட்டிருக்கும் பட்சத்தில், கோர்ட்டார்-அதில் செய்யப்பட்டிருக்கும் முடிவான தீர்மானத்துடன் முரண்படும் உத்தரவு எதையும் பிறப்பிக்கக்கூடாது.

(6) இந்தப் பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, கோர்ட்டார் -ட்ரஸ்டுக்கு விரோதமாக பாத்தியதை கொண்டாடும் யாதொரு நபருக்கும் மனுதாரருக்கு முள்ள பாத்தியதையைப்பற்றிய எந்த விஷயத்தையும் விசாரிக்கவுங்கூடாது தீர்மானம் செய்யவுங்கூடாது.

5-வது பிரிவின்படிக்கான உத்தரவின் பிரகாரம் ட்ரஸ்ட்டி நடக்கத் தவறுவது.

6. யாதொரு ட்ரஸ்டியானவர் நியாயமான காரணமில்லாமல் 5-வது பிரிவைச் சேர்ந்த (5) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறினால், அப்படிப்பட்ட ட்ரஸ்ட்டியானவர் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்தின்படி அவர் உள்ளாகக்கூடிய வேறே யாதொரு தண்டனை அல்லது பொறுப்புக்கு பாதகமில்லாமலே, 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 92-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி வியாஜ்ஜியம் தொடருவதற்கு ஏதுவுண்டாகும்படி ட்ரஸ்டுக்கு துரோகம் செய்வது என்னும் குற்றத்தைச் செய்தவராக எண்ணப்படுவார்; மேலும், அப்படிப்பட்ட யாதொரு வியாஜ்ஜியமானது மேலே கண்டபடி தவறினதை ஆதாரமாகக்கொண்டிருக்கிறவரையில், அதை அட்வொகேட் ஜெனரலின் சம்மதியை முன்னதாய்ப் பெறுமலே தொடரலாம்.

உத்தரவுகளுக்காக விண்ணப்பம் செய்துகொள்ள ட்ரஸ்டிக்குள்ள அதிகாரங்கள்.

7. (1) இந்த ஆக்ட்டில் இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, தரும சம்பந்தமான அல்லது மதசம்பந்தமான ஒரு பொதுக்காரியத்துக்காக உண்டாக்கப்பட்ட அல்லது ஏற்கனவே இருக்கிற வெளிப்படையாயுள்ள அல்லது வெளிப்படையாயிராமல் ஊகிக்கப்படவேண்டியதாயுள்ள ட்ரஸ்ட்டைச்சேர்ந்த யாதொரு ட்ரஸ்ட்டியானவர் அந்த ட்ரஸ்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட சொத்தில் முக்கியாம்சமான யா

தொரு பாகம் எந்தக் கோர்ட்டாரின் அதிகாரப் பிரதேச எல்லைக்குள் இருக்கிறதோ அந்தக் கோர்ட்டாருக்கு, ட்ரஸ்ட் சொத்தின் நிர்வாகத்தையோ அல்லது பரிபாலனத்தையோ பாதிக்கும் யாதொரு பிரசினையைக் குறித்து கோர்ட்டாரின் அபிப்பிராயம், ஆலோசனை அல்லது உத்தரவுக்காக மனுமூலமாய் விண்ணப்பஞ்செய்துகொள்ளலாம்; அதன்மேல், அந்தக் கோர்ட்டார் சந்தர்ப்பத்திற்கேற்றபடி தங்கள் அபிப்பிராயம், ஆலோசனை அல்லது உத்தரவைக் கொடுக்கவேண்டும்:

ஆனால், ஷை கோர்ட்டார் எந்த பிரசினை சுருக்கவகையாய்ப் பைசல் செய்வதற்குத் தகுதியானதல்லவென்று தாங்கள் கருதுகிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு பிரசினையைக்குறித்து மேலேகண்டபடி அபிப்பிராயம் அல்லது ஆலோசனை அல்லது உத்தரவு கொடுக்கக் கடமைப்பட்டவராகார்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான மனு வரப்பெறுவதன் மேல், கோர்ட்டார் அதைக்குறித்து உடனே தங்களுடைய அபிப்பிராயத்தையாவது ஆலோசனையையாவது உத்தரவையாவது கொடுக்கலாம், அல்லது மனுவை விசாரிப்பதற்காக ஒரு தேதியை நிச்சயித்து, அப்படி நிச்சயிக்கப்பட்ட தேதியைக்குறித்த நோடிஸ் சகிதமாக அதன் நகல் ஒன்றை, ட்ரஸ்டில் பற்றுள்ள நபர்களில் தங்களுக்குத் தகுதியாகத்தோற்றுகிறவர்களுக்குச் சேர்ப்பிக்கவேண்டுமென்றாகிலும் சங்கதி தெரிந்துகொள்வதற்காக தங்களுக்குத் தகுதியாகத்தோற்றுகிற விதமாய்ப் பிரசுரிக்கவேண்டுமென்றாகிலும் கட்டளையிடலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நிச்சயிக்கப்பட்ட யாதொரு தேதியிலாவது அதற்குப் பிந்திய எந்த தேதிக்கு விசாரணை தள்ளிப்போடப்படக்கூடுமோ அந்த தேதியிலாவது கோர்ட்டார் யாதொரு அபிப்பிராயம், ஆலோசனை அல்லது உத்தரவு கொடுக்குமுன், அந்த மனு சம்பந்தமாய் ஹாஜராகும் சகல நபர்களுக்கும் (அவர்கள்) விசாரிக்கப்படுவதற்கு நியாயமான அவகாசம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான ஒரு மனுவில் ட்ரஸ்டுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விஷயத்தைக்குறித்த சங்கதிகளை நல்ல எண்ணத்துடன் கண்டு, அதன்மேல் கோர்ட்டாரால் கொடுக்கப்பட்ட அபிப்பிராயம், ஆலோசனை அல்லது உத்தரவின்படி பிரவர்த்தி

க்கும் ட்ரஸ்டியானவர் - அவருடைய சொந்த பொறுப்பு சம்பந்தப் பட்டமட்டில், எதைக்குறித்து மனு கொடுத்துக்கொள்ளப்பட்டதோ அந்த விஷயத்தில் அப்படிப்பட்ட ட்ரஸ்டியாக தம்முடைய கடமையைச் செய்திருப்பதாய் எண்ணப்படுவார்.

இந்த ஆக்டின் படிக்கான மனுவின் செலவுகள்.

8. இந்த ஆக்டிலுள்ள மேலேகண்ட நிபந்தனைகளின்படி, யாதொரு மனுவுக்கும் அது சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும், அனுவகாரணமாகவும், பிடிக்கும் செலவுகளும் கட்டணங்களும் பட்டுபடியும் கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி நிச்சயிக்கப்படும்; ஷை கோர்ட்டார் - அப்படிப்பட்ட செலவுகள், கட்டணங்கள், பட்டுபடி ஆகிய இவைகள் முழுவதுமாவது இவைகளின் யாதொரு பாகமாவது எது விஷயமாக மனுகொடுத்துக்கொள்ளப்படுகிறதோ அந்த ட்ரஸ்டைச் சேர்ந்த சொத்து அல்லது வரும்படியிலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்றாகிலும் தாங்கள் தகுதியென்று கருதுகிற விதமாயும் நபர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செலுத்தப்படவேண்டுமென்றாகிலும் கட்டளையிடலாம்:

ஆனால், (மனுதாரல்லாத வேறே) எந்த நபர் மனுவைக்குறித்து நோட்டீஸைப் பெறுமலிருப்பதுமல்லாமல் அதைக்குறித்து விசாரிக்கப்பட நியாயமான அவகாசம் பெறவும் இல்லையோ அந்த நபருக்குவிரோதமாக அப்படிப்பட்ட எந்த உத்தரவும் செய்யப்படக்கூடாது

நிவாரணைகள்.

9. யாதொரு ட்ரஸ்ட் சம்பந்தமாய் இந்த ஆக்டின் மேலேகண்ட நிபந்தனைகளின்ப்டிக்கான எந்த மனுவையும் அடியிற்கண்ட சந்தர்ப்பங்கள் எதிலும் ஏற்றுக்கொள்ளக்கூடாது; அவையாவன :—

(a) 1908-ம் வருத்திய 5-வது விஸில் ப்ரொவீஜர் சோட் என்னும் விவில் விவகாரவிசாரணைச்சட்டத்தின் 92-வதுபிரிவிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்துக்கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியம் பிரஸ்தாப ட்ரஸ்டின் விஷயமாய் இன்னும் பைசலாகாமலிருந்தால்;

(b) ட்ரஸ்ட் சொத்தானது தருமசம்பந்தமான இனங்களின் ட்ரெஷரர் பாமாயாவது, அட்மினிஸ்ட்ரேடர் ஜெனரல் பாமாயாவது, அபிஷல் ட்ரஸ்டி பாமாயாவது, 1860-ம் வருத்திய சங்கங்களை ரெஜிஸ்

டர் செய்வதைக்குறித்த 5-வது ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட யாதொரு சங்கத்தின் பரமாயாவது இருந்தால்;

(c) தகுந்த விசாரணை அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டாராலாவது யாதொரு சட்டதிட்டத்திற் கண்ட நிபந்தனைகளின்படி பிரவர்த்திக்கும் வேறே யாதொரு அதிகாரியினாலாவது ட்ரஸ்ட் சொத்தின் பரிபாலனத்துக்காக யாதொரு ஏற்பாடு நிச்சயிக்கப்பட்டிருந்தால் அல்லது அங்கீகரிக்கப்பட்டிருந்தால்.

தரும சம்பந்தமாகவும் மதசம்பந்தமாகவும் உள்ள ட்ரஸ்டுகளைச்சேர்ந்த ட்ரஸ்டிகளுக்குவிரோதமான சில வியாஜ்ஜியங்களில் செலவுகளைக் குறித்து கோர்ட்டுகளுக்குள்ள அதிகாரம்.

10. (1) 1863-ம் வருஷத்திய மதசம்பந்தமான இனாங்களைக்குறித்த 20-வது ஆக்டின் 14-வது பிரிவின்படியாவது 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 92-வது பிரிவின்படியாவது கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்தில், அந்த வியாஜ்ஜியத்தை விசாரணைசெய்யும் கோர்ட்டார் - வாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலும் பிரதிவாதிசொல்வதைக்கேட்டு அவர்கள் தகுதியாகக்கருதுகிற விசாரணை செய்த பிறகும், பொதுஜன நன்மையை உத்தேசித்து அப்படிப்பட்ட உத்தரவு அவசியமென்று அவர்கள் தெரிந்து திருப்தியடைந்தால், அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தை ஆரம்பித்து நடத்துவதில் வாதிக்குப் பிடிக்கும் அல்லது வெகுசாய்ப் பிடிக்கக்கூடிய யாதொரு செலவுக்காக ஜாமீன் சவதரிக்கும்படியாகிலும் எதற்கு வியாஜ்ஜியம் சம்பந்தப்படுகிறதோ அந்த ட்ரஸ்டைச்சேர்ந்த ட்ரஸ்டியாகத் தம்முடைய கையிலிருக்கும் யாதொரு பணத்திலிருந்து அப்படிப்பட்ட செலவை முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது செய்வதற்குப் போதுமானதென்று ஷை கோர்ட்டார் கருதுகிற தொகையைக் கட்டி வைக்கும்படியாகிலும் பிரதிவாதிக்குக் கட்டளையிடலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவை அனுசரித்து யாதொரு பணம் கட்டிவைக்கப்பட்டிருந்தால், கோர்ட்டார்- வியாஜ்ஜியத்தை நடத்துவதற்காக அப்படிப்பட்டதொகை முழுவதையுமாவது அதன் யாதொரு பாகத்தையாவது வாதிக்குக் கொடுத்துவிடலாம். யாதொரு தொகையை வாதிக்குக் கொடுத்துவிடுவதற்கு முன், கோர்ட்டார்-அந்தத் தொகையை வாபஸ்செய்யவேண்டு

மென்று கோர்ட்டார் பின்னிட்டு உத்தரவுசெய்யும் பட்சத்தில் அப்படி வாபஸ்செய்வதற்காக வாதியினிடமிருந்து ஜாமீன் வாங்கவேண்டும்.

சிவில் ப்ரோஸீஜர் கோடின் நிபந்தனைகள் பிரயோகப்படுவது.

11 (1) (a) அபிடெவிட் என்னும் பிரமாண பத்திரமூலமாய்ச் சங்கதிகளை ருஜூசெய்வதற்கும்,

(b) யாதொரு நபரை ஹாஜராகவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதற்கும் அவரைப் பிரமாணத்தின்மேல் விசாரிப்பதற்கும்,

(c) தஸ்தவேஜூகளை ஹாஜர்ப்படுத்தவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதற்கும்,

(d) கம்மிஷன் என்னும் கட்டளைகள் பிறப்பிப்பதற்கும்,

சம்பந்தப்பட்ட 1908-ம்௵ந்திய சிவில் ப்ரோஸீஜர் கோட் என்னும் சிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் நிபந்தனைகள்-இந்த ஆக்ட்டின் படிக்கான சகல நடவடிக்கைகளுக்கும் பிரயோகப்படும்; மேலும், ஸம்மன்கள் சேர்ப்பிப்பதற்குச் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் அதன்படி நோடீஸூகள் சேர்ப்பிப்பதற்குப் பிரயோகப்படும்.

(2) ஷை கோடில் டிக்ரிகளை நிறைவேற்றுவது சம்பந்தமாகவுள்ள நிபந்தனைகள்-அவை பிரயோகப்படக்கூடிய வரையில், இந்த ஆக்டின்படிக்கான உத்தரவுகளை நிறைவேற்றுவதற்குப் பிரயோகப்படும்.

அப்பீல்களைத் தடுப்பது

12. இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவின் மேலாவது கொடுக்கப்பட்ட யாதொரு அபிப்பிராயம், ஆலோசனை அல்லது கட்டளையின்மேலாவது எந்த அப்பீலும் நிற்காது.

தமிழ்ச்சட்ட புஸ்தகங்கள்.

	ரூ.	அ.
ஸ்டாம்பு, ரெஜிஸ்ட்ரேஷன் பல விதபத்திரங்கள் எழுதும் மாதிரிகள் அடங்கிய விவகாரசிந்தாமணி	2	8
உயில் பாகம், வார்சுபாத்தியம் ஸ்திரீதன முதலியதள்ள பெரிய ஹிந்துலா	2	0
சிவில் விவகாரம் பூர்த்தியயடங்கிய சிவில் லா	3	0
போலிஸ் மாஜிஸ்ட்ரேட்சம்பந்தமான க்ரிமினல் லா ...	3	0
புது கிராமமுனிசிப் சட்டம் ..	1	8
கிராம பஞ்சாயத்து சட்டம் ...	1	2
லோகல் போர்ட் ஆக்ட் ...	1	8
குற்றசம்பந்தமான இந்தியன் பினல் கோட்	3	0
எவிடன்ஸ் ஆக்ட்	1	0
ஹிந்து தர்மஸ்தாபன சட்டம்...	1	0
டிரஸ்ட்டி ஆக்ட்	0	10
கிராம சுகாதாரம்	0	2
நில ஆக்கிரமிப்பு சட்டம் ...	0	4
கால நிர்ணய ஆக்ட் ...	0	8
புதிய ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
பரம்பரைகிராமஉத்தியோக ஆக்ட்	0	10
புது இன்கம்டாக்ஸ் சட்டம் ...	1	0
புதிய ஸ்டாம்பாக்ட் ...	0	12

தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.
இராஜாமணி	0	8
வனமாலிகா	0	8
ஜயதேவன்	0	8
பத்மநாபன்	0	8
கிருஷ்ணதீட்சதர் ...	0	8
பிரதாபசிங்	0	8
மீனாக்ஷி	0	5
பாஸ்கரன	0	10
சத்தியவிஜயன்	0	10
நடுவேனிற்கனவு	0	8
பத்தசந்திரிகா	0	10
இரத்தினவிமானம் ...	0	14
தாருகாசவம்	0	14
நளாகினி விஜயம் ...	0	14
சோமகாந்தன்	0	10
சுசீலா	0	10
நூர்ஜிகான் என்னும் ராணியின் சரித்திரம்	0	4
மோகனசுந்தரி	0	4
ஹிந்துமதப்பிரசங்கம் ...	0	2
நெபபோலியன் சரித்திரம் ...	0	2
இல்லறமா ? துறவறமா ? ...	0	1
மகாமக மகாத்மியம் ...	0	2
இரதிசாஸ்திரம் படங்களுடன்.	1	4
15 விரதமடங்கிய விரதகல்பம்	0	8
ஷை உயர்ந்த பதிப்பு ...	0	12

கிராமக் கோர்ட்டுகளுக்கு வேண்டிய பாரங்கள்.

		ரூ.	அ.
பிரதிவாதி சம்மன்	100-க்கு	0	10
சாட்சி சம்மன்	100-க்கு	0	10
கிரிமினல்சாட்சிசம்மன்	100-க்கு	0	10
குற்றவாளி சம்மன்	100-க்கு	0	10
ஷை பிடிவாரண்டு	100-க்கு	0	10
டிக்கிரிநிறைவேற்ற ஆட்சேபனை செய்யப் பிரதிவாதிக்கு நோட்டீசு	100-க்கு	0	10
பஞ்சாயத்தாருக்கு நோ.	,,	0	10
கிரிமினல் வாதிக்கு மறு ராக்கி நோட்டீசு	100-க்கு	0	10
ஷை சிவில்	100-க்கு	0	10
முச்சலிக்கா பாரம்	100-க்கு	0	10
ஜப்தி கட்டளை பாரம்	100-க்கு	0	10
பிராதுபிளெயிண்டுபாரம்	50-க்கு	0	10
சம்மதி உடன்படிக்கை	50-க்கு	0	10
நிறைவேற்ற மனுபாரம்	50-க்கு	0	10
கியாலண்டர் (பாரம்)	50-க்கு	0	10
வாக்குமூல பாரம்	50-க்கு	0	10
நகல் மனுபாரம்	50-க்கு	0	10
ஏல இஸ்தியார்	50-க்கு	0	10
கிரிமினல் கேஸ்டாகெட்	50-க்கு	0	10
சிவில் கேஸ் ,,	50-க்கு	0	10
சிவில் டிக்ரிபாரம்	50-க்கு	1	4
கைசாத்து புக் சிறியது	1-க்கு	0	1
ஷை	100-க்கு	2	8
ஷை ராப்பர் 50-பக்கம்	1-க்கு	0	3
ஷை கெட்டி பைண்டு	1-க்கு	0	4
ஷை ஷை 100-பக்கம்	1-க்கு	0	8